கல்கி

ஜீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



தனிப்பட்டவர்களை நம்பி தி.மு.க. இல்லை!

LKI | 05.12.2010 | ₹ 10.00 | 96 பக்கங்கள் | www.kalkionline.com

ற்காடுக்கு ஆபத்து!

ருகனுக்கு ழுத்த தலம்!

வளுத்துக்கட்டும் வள்ளி!

காந்திஜி கைராட்டை!

றப்புப் போட்டி!

சேலம் மாவட்ட ஸ்பெஷல்-I




BSP
REFINERIS
என்
சமையல்னா!
எனக்கு
பிடிச்ச,
உஷா ஆயில்
இருந்தால்
மட்டும்தான்...
USHA
USHA
ஆரோக்கியமானது...
சுவையானது...
B.S.P. REFINERIS
292-294, Suramangalam Main Road,
Salem - 636 009.
Ph.: 0427-2350848, 2350252
www.bsprefineris.com


கல்கி ஆன்லைன்
இலவசப் பதிவு!
கல்கி,
மங்கையர் மலர்,
கோகுலம்,
Gokulam
எல்லா
இதழ்களையும்
உடனடியாகப் படிக்கலாம்!
http://www.kalkionline.com



● 'நாடோடிகள்' படத்தில் நடித்த வாய் பேச இயலாத, காது கேட்காத அபிநயா இரண்டாவது ஹீரோயின், ஈசனில் ஃபிர்ஸ்ட்! ''சமுத்திரகனியும், சசிகுமாரும் எப்படி இந்தப் பொண்ணை (அபிநயா) நடிக்க வெச்சாங்கன்னு தெரியலை. ஒரு குறையுமில்லாதவங்களைப் போலவே நடிப்புல ஊதித் தள்ளியிருந்தாங்க அபிநயா. அவங்க ஈசன்ல வாய் பேச முடியாத கேரக்டர்ல நடிக்கறதா சொன்னாங்க. நிச்சயம் அதுல அவங்க ஜொலிப்பாங்க. இப்பவே என்னோட ஆசீர்வாதம். நிச்சயம் அபிநயாவுக்கு தேசிய விருது கிடைக்கும்'' என்றார் இயக்குநர் அமீர் ஈசனின் இசை வெளியீட்டு விழாவில். ஏற்கெனவே சசிகுமார், அபிநயா என் தேவதை என்று பாராட்டியது அபிநயாவுக்குக் கூடுதல் பலம்!

அபிநய தேவதை!



'யுவன் யுவதி' படத்தில்...

சேலம் மாவட்டச் செய்திகள்:
கதிர்பாரதி, ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



'யுகம்' படத்தில்...

• சாக்லேட் பாய் பரத், கார்ப்பரேட் பாயாக நடிக்கிறார் 'யுவன் யுவதி' படத்தில். பரத்துக்கு அப்பாவாக பிரபல வில்லன் நடிகர் சம்பத். அப்பாவுக்கும், மகனுக்குமான புரிதலின் எல்லையை விரிவாகப் பேசும் படமாம். காமெடிக்கு சந்தானம்; ஹீரோயினாக ரீமா கல்லிங்கள். இவர் மலையாளக் கரையோரம் கவி பாடிய ஹீரோயின் குயில். எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் கதை வசனத்தில் இயக்குகிறார் ஜி.என்.ஆர். குமாரவேல்.

• ''பரபரப்பான படம்னா இனி 'யுகம்' படத்தைத்தான் அடையாளம் காட்டுவார்கள்'' என்கிறார் இயக்குனர், ஒளிப்பதிவாளர் பவன் சேகர். ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பில் குடியேறிய 24 மணி நேரத்துக்குள் நடக்கும் சர்ப்ரைஸ் சரவெடிதான் கதையாம். ''முதல் நாள் சூரிய உதயத்தில் தொடங்குகிற கதை மறுநாள் சூரிய உதயத்தில் முடிகிறது'' என்கிறார் ஒளிப்பதிவாளர் பவன், இவர் பிரபல ஒளிப்பதிவாளர் ஜீவாவின் உதவியாளர்.

- மகிமைராஜன்



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி
பொறுப்பாசிரியர்:
ஆர்.வெங்கடேஷ்
உதவி ஆசிரியர்கள்:
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்
தொலைபேசி: 044 - 4343 8888
தொலைநகல்: 044 - 4343 8899
ஆசிரியர் குழு:
044 - 4343 8822
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு:
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு:
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி:
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்):
உள்நாடு : ₹ 500/-
வெளிநாடு : ₹ 3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

சேலம் மாவட்ட ஸ்பெஷல்

பேட்டி :

பூலாவரி கிராமத்தில் வயல் மற்றும் தென்னந்தோப்புகளிடையே ரம்மியமான சூழலில் அமைந்திருக்கிறது அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தின் பண்ணை வீடு (லாரி... பங்களா) வீட்டுக்கு எதிரேயுள்ள கொட்டகையில் கையில் மனுக்களுடனும், கண்களில் எதிர்பார்ப்புகளுடனும் நிறைய பொது மக்களும், கழகப் பிரமுகர்களும் காத்துக் கிடக்கின்றனர். ஒவ்வொருவர் கொடுக்கும் மனுவையும் உன்னிப்பாகப் படித்துவிட்டு 'நடக்கும்... நடக்காது' என்பதைத் தெளிவாகவே சொல்லிவிடுகிறார், 50 வருடப் பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான வீரபாண்டி ஆறுமுகம். சேலத்தையும் வீரபாண்டி ஆறுமுகத்தையும் பிரிக்க முடியாது...

''என்னோட சொந்த ஊர் பாரப்பட்டிதான். எனக்குக் குடும்பச் சொத்தில் பங்கு கிடைத்தவுடன் பூலாவரியில் செட்டில். வீரபாண்டி தொகுதியில் வெற்றி பெற்றதால் பெயருடன் அது ஒட்டிக்கொண்டு விட்டது. அப்பா, அண்ணன் எல்லாம் காங்கிரஸ். பள்ளியில் படிக்கும்போதே பெரியார், அண்ணா பேச்சுக்களால் கவரப்பட்டவன். 25 பேரைச் சேர்த்துக் கொண்டு கிளைக்கழகம் துவக்கினேன். முதல் தி.மு.க. மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறேன். கலைஞர் மாடர்ன் தியேட்டர் ஸ்டுடியோவுக்குக் கதை - வசனம் எழுதும்போது அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அது இன்றுவரை தொடர்கிறது. 1962ல் முதல் முறையாக நான் எம்.எல்.ஏ. ஆனபோது எனக்கு 23 வயதுதான். அதன் பிறகு வந்த இரண்டு தேர்தல்களில் மீண்டும் வெற்றி. ஆனாலும் 1989ல்தான் எனக்கு அமைச்சர் பொறுப்பு கிடைத்தது. எப்படிப்பட்ட மிக மோசமான சூழலிலும் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்து வந்திருக்கிறேன். கலைஞர் பாதையில் நடைபோடும் முதல் படைவீரனாக இருக்கிறேன்.''




தனிப்பட்டவர்களை நம்பி தி.மு.க. இல்லை!

"சேலம் தி.மு.க. என்னாலே அது உங்களைச் சுற்றித்தான். இத்தனை வருடப் பொது வாழ்க்கை, அமைச்சர் பொறுப்புகளில் நீங்கள் சாதித்தது என்ன?



"காவிரி மிக அருகில் இருந்தாலும், சேலம் மாவட்டத்தில் பெரும்பகுதி குடி தண்ணீர் பிரச்னையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அப்படிப்பட்ட நிலையில் பூலாம்பட்டி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம், ஆத்தூர் குடிநீர் திட்டம், ஃபுளோரைடு பாதிப்புக்குள்ளான பத்து யூனியன்களில் காவிரி குடிநீர், சேலம் மாநகராட்சிப் பகுதியில் பற்றாக்குறை இல்லாத குடிநீர் விநியோகம், இப்படி சேலம் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்த்து வைத்ததை என் வாழ்நாள் சாதனையாகக் கருதுகிறேன். இப்போதுகூட 270 கோடி செலவில் 1200 கிராமங்களுக்கு காவிரி நீர் கிடைக்க திட்டப் பணிகள் நடக்கின்றன. கலைஞர் தலைமையில் தி.மு.க. ஆட்சி நடக்கும்போதெல்லாம் இந்தத் திட்டப் பணிகள் நடந்திருக்கின்றன. இந்தப் பணிகளுக்கு என்னைத் தவிர வேறு யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. மற்றபடி உயர் மருத்துவ வசதிகள், கல்லூரிகள், மேம்பாலங்கள், சாலை வசதி, சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் என்று நீண்ட பட்டியல் உள்ளது."



தொழில் வளர்ச்சி?

"சேலம் உருக்குத் தொழிற்சாலை கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான் வந்தது. பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில் அதைத் தனியாருக்கு விற்கப் பார்த்தார்கள். நாங்கள் போராட்டம் நடத்தி அதை அரசுத் துறையிலேயே தக்க வைத்தோம். இப்போது 2000 கோடிக்கு விரிவாக்கப் பணிகள் நடக்கின்றன. சேலம் ரயில்வே கோட்டம், அகலப் பாதை, தேசிய நெடுஞ்சாலை, விமான சேவை என்று நிறையக் கட்டுமான வசதிகள். எல்காட் தகவல் தொழில் நுட்பப் பூங்கா, எண்ணற்ற தனியார் தொழிற்சாலைகள் என்று சேலத்தில் நிறைய வேலை வாய்ப்புகள் உருவாகி வருகின்றன."


> **"என்மீது இருக்கும் தாதா இமேஜ், எம்.ஜி.ஆர். திட்டமிட்டுப் பரப்பியது."**

ஆனால், உங்களைப் பெரிய 'தாதா'வாக, சர்வாதிகாரியாகத்தானே மக்கள் கருதுகிறார்கள்?

"இதற்கு முழுக் காரணம் எம்.ஜி.ஆர்.தான். 1975ல் நான் எமர்ஜென்ஸியின்போது 'மிசா' கைதியாக ஜெயிலில் அடைக்கப்பட்டேன். அதைத் தொடர்ந்து நான்காண்டுகள் நானும் என் குடும்பமும் சொல்ல முடியாத கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டோம். குறிப்பாக 1977ல் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்தபிறகு என் மீது இரண்டு கொலைக்குற்றம் உட்பட 50க்கும் மேற்பட்ட வழக்குகள் போடப்பட்டன. மனைவி, சகோதரி ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். என் குடும்பத்தை

> **"கலைஞர், மாடர்ன் தியேட்டருக்குக் கதை, வசனம் எழுதும்போதே எனக்குப் பழக்கம்."**

சிதைப்பதன் மூலம் மாவட்டத்தில் தி.மு.க.வை ஒழிப்பதே குறிக்கோளாக இருந்தது. அப்போது எம்.ஜி.ஆர். என்னைப் பற்றிச் செய்த தவறான பிரசாரம்தான் என்னைப் பெரிய வன்முறையாளனாக மக்களிடம் காட்டிவிட்டது. இத்தனைக்கும் எம்.ஜி.ஆர். எனக்கு மிக நல்ல நண்பர். 'மாப்பிள்ளை' என்றுதான் என்னைக் கூப்பிடுவார். கடைசியில் எல்லா வழக்குகளிலிருந்தும் நான் குற்றமற்றவன் என்று விடுதலை செய்யப்பட்டேன். எம்.ஜி.ஆருக்கு என் மேல் ஏற்பட்ட கோபத்துக்குக் காரணம் அவர் வற்புறுத்தியும் நான் அ.தி.மு.க.வில் சேராததுதான். என் சோதனை காலத்தில் கலைஞர் என்னை அரவணைத்துக் கொண்டார். கட்சி என்னைக் காப்பாற்றியது. மற்றபடி சர்வாதிகாரி என்பதெல்லாம் சரியல்ல. நான் எளிதில் மற்றவரை நம்பி விடுவேன். ஏமாற்றுபவர்களையும் தவறு செய்பவர்களையும் தயவு பார்க்காமல் கண்டிப்பேன்.''



"தனிப்பட்டவர்களை நம்பி கட்சி இல்லை. கட்சியைக் காப்பாற்ற லட்சக்கணக்கான தொண்டர்கள் இருக்கிறார்கள்."



இப்படிப்பட்ட நிலையில் கொலைக்குற்றம் சாட்டப்பட்ட உங்கள் தம்பி மகனை சமீபத்தில் ஜெயிலில் சென்று பார்த்தது சரியா?

''என் தம்பி மகன் சுரேஷ் குமார் மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அவர் மீது விசாரணை நடைபெறுகிறது. குற்றம் நிரூபிக்கப்படவில்லை. சிலர் நான் ஜெயிலுக்குச் சென்றதை அரசியல் காரணங்களுக்காக விமர்சிக்கலாம். சட்டப்படி நான் செய்தது சரியே.''

இது குறித்துப் பேசும்போது கட்சியில் சிலர் சதி செய்கிறார்கள் என்றீர்களே...?

விசாரணை நடைபெறுவதால் மேலும் பேச விரும்பவில்லை. மாவட்ட அரசியலில் நொந்துபோன சில நபர்கள் சேற்றை வாரி வீச நினைக்கிறார்கள். பாரபட்சமற்ற விசாரணையின்மூலம் உண்மைகள் வெளிவரும். பொதுவாக இப்போது அர சியலில் ஒருவரைப் பற்றி தவறான தக வல்கள் பற்ற வைக்கப்படுகின்றன சம்பந்தப்பட்டவரை விசாரிக் கும்வரை பரப்பப்பட்ட வதந் திகளே முக்கியத்துவம் பெறுகின் றன.

மூத்தவர்கள் வரும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கொடுக்கப்பட மாட்டாது என்று கட்சியில் பேச்சு இருக்கிறதே?


''அரசியலுக்கு ஏது ஓய்வு? கலைஞர் ஆசியுடன் வரும் தே தலில் போட்டியிடுவேன்.''

கட்சியில் ஏதேனும் பிரச்னைக ஏற்பட்டால் நீங்கள் அதை சரி செ வதில் முன்னணியில் நிற்பீர்கள். இந் நிலையில் கலைஞரின் குடும்ப அ கார மையங்களின் போட்டியால் க சியின் எதிர்காலம் பாதிக்கப்படு என்கிறார்களே?

(சிறிது நேரம் யோசிக்கிறா)

''திராவிட இயக்கம், சுயமரியாதை பகுத்தறிவு, சமூக நீதி போன் கொள்கைகளுக்காகத் தொட கப்பட்ட இயக்கம். இன் சமூகத்தின் 90 விழுக்காடு மக்க சமூகப் பொருளாதார வளர்ச் யைப் பெற்றிருக்கிறார்கள் எ றால் தி.மு.க.தான் காரணம். எந்த தனிப்பட்ட நபர்களையும் நம்பி கட் இல்லை. இதைக் கட்டிக் காக்க லட்ச கணக்கான தன்னலமற்ற தொண்டர்க இருக்கிறார்கள். கவலை வேண்டாம்.

- ப்ரியா



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



(An ISO 9001 - 2008 Certified Organisation Reg. No. CCPL/QMS/D1744)
72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. போன் : 22760612, 22762299, 29710350
City Office No.7/4, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன் : 23714942

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 22 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 150 மாணவர்கள் தங்கி படித்து வருகின்றனர். மேலும் கூடுவாஞ்சேரியில் உள்ள எங்களது குருகுலத்தில் 30 மாணவிகள் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ. 1,000
• மதிய உணவு	ரூ. 2,000
• இரவு சிற்றுண்டி	ரூ. 1,000
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ. 1,000
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ. 1,000
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு,உடை,கல்வி)	ரூ.12,000
• உயர் கல்வி வைப்புத்தொகை (EDUCATION ENDOWMENT)	ரூ.1,000

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் / வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்ற நட்களில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் ("SHIRI SARADHA SAKTHI PEETAM") என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.

நியூஸ் ஏந்தி பவன்

தன் கற்பைக் காத்துக்கொள்வதற்காக உயிரை மாய்த்துக்கொண்ட மறத் தமிழச்சியின் புகழைப் பாடிக்கொண்டிருக்கிற தொட்டிச்சிப் பாறை, பாலசுப்ரமணியர் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஊத்துமலையில் இருக்கிறது. திருமலை நாயக்கரின் பிரதிநிதியாக சேலத்தில் ஆட்சி செய்த படைத் தளபதி, வீட்டில் வேலை செய்த தொட்டிச்சியைத் தன் ஆசைக்கு இணங்கச் சொல்லி வற்புறுத்துகிறான்.



அவள் மறுக்கவே அவளது கணவனிடம் உன் மனைவி நடத்தை சரியில்லை. அவளோடு வாழ்ந்தால் உன்னை உலகம் தூற்றும். அவளை விட்டு விலகிவிடு என்று சொல்ல அவனும் அவ்வாறே செய்கிறான். தான் நடத்தை சரியில்லாதவள் இல்லை என்பதை நிரூபிக்க மலை மீது ஏறி குதித்துத் தற்கொலை செய்து கொண்டாள் அவள். அவளின் நினைவாக இன்றளவும் அந்தப் பாறை தொட்டிச்சிப் பாறையென்று அழைக்கப்படுகிறது.


வாசகர் யோசனை :

சின்னுசாமி, சேலம்

குலோத்துங்கச் சோழன் ஏரி!

மூன்று முதல்வர்கள் தங்கிய ஏரி

அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர்... என தமிழகத்தின் மூன்று முதல்வர்களும் வந்து பனைமரத்துப்பட்டி ஏரிக்கரை கெஸ்ட் ஹவுஸில் தங்கி இருக்கின்றனர், ஏரியின் அழகை ரசிக்க. கிட்டத்தட்ட 2700 ஏக்கர் பரப்பளவாம். தண்ணீர் நிரம்பி இருக்கும்போது, மலைகளுக்கிடையே முளைத்த கடல் மாதிரி ஆர்ப்பரிக்குமாம். மேட்டூரிலிருந்து சேலத்துக்குக் குடிநீர் சப்ளை ஆவதற்கு முன்பு பனைமரத்துப்பட்டி ஏரிதான் குடிநீர் ஆதாரம். ஆனால் ஆத்தூரில் மழை பெய்தால்தான் ஏரி நிரம்பும். அமைவிடம் அப்படி! ஒரு முறை இந்த ஏரி நிரம்பினால் வற்றுவதற்குக் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் ஆகுமாம். கடைசியாக 2004 ஆம் ஆண்டு பெய்த மழையில் ஏரி நிரம்பியதாம். இது நிரம்பினால் மல்லூர் வரைக்கும் ஊத்து ஏறுமாம். பிரிட்டிஷ்காரன் காலத்தில் இந்த ஏரியின் தண்ணீ



ரைக் குடிநீராகப் பயன்படுத்த, தண்ணீருக்குள் படிகாரக் கற்களைப் போடுவார்களாம். அந்தக் கற்களைச் சேமித்து வைக்க என்றே பிரத்தியேகமான மூன்று அறைகள் இருந்திருக்கின்றன. எல்லாவற்றையும்விட முக்கியம், இது சோழ மன்னன் குலோத்துங்கனால் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்ட ஏரி.

வாசகர் யோசனை :

சூரியநாராயணன், சேலம்

INTERNATIONAL COUNCIL FOR MANAGEMENT STUDIES

55, Lazarus Church Road, R.A.Puram, Chennai - 28.
Phone: 044-24933210 Mobile : 0 98401 37982
Fax : 044-24933259 e-mail : aicomas@rediffmail.com

Offers **Six months/One year** Diploma and **18 months PG Diploma** Courses by Correspondence. (Distance Education)

●HEALTH, SAFETY AND ENVIRONMENT ●INDUSTRIAL SAFETY ●INTERNATIONAL SAFETY MGMT ●FIRE & SAFETY ●CONSTRUCTION SAFETY

●BUSINESS MANAGEMENT ●MARKETING MANAGEMENT ●MATERIALS MANAGEMENT ●EXPORT & IMPORT MGMT ●BANKING & INSURANCE MGMT ●TEACHER TRAINING EDUCATION ●HOSPITAL ADMINISTRATION ●INTERNATIONAL AIRLINES MGMT ●NURSING MANAGEMENT ●HOSPITAL ADMINISTRATION ●TOTAL QUALITY MGMT. & ISO 9000 ●QUALITY CONTROL & ISO 9000 ●ENGINEERING & SAFETY

Also offers Diploma in **●BUSINESS ADMINISTRATION ●SALES & MARKETING ●FINANCIAL MANAGEMENT ●HUMAN RESOURCES DEVPT. ●PRODUCTION MGMT. ●ADVT. & PUBLIC RELATIONS ●ENVIRONMENTAL MGMT. SYSTEM & ISO 14000/14001 ●HEALTH & HOSPITAL MGMT. ●IND. RELATIONS & PERSONNEL MGMT. ●LABOUR LAWS ●NETWORKING & INTERNET APPLICATION ●RETAIL MANAGEMENT ●LOGISTICS AND SUPPLY CHAIN MGMT.**

Eligibility : 10th Std /Matric and above. **Course Fee : Rs.1,900/- (6months diploma). Rs.3,250/- (1 Year Diploma) Examination will be held all over India.**

For Application and Prospectus send Rs.10/- Postage stamp to the above address. Application and Prospectus are also on our Website. WWW.AIIMAS.COM (or) WWW.AICOMAS.ORG



வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷித புண்யஸ்மரண ஸமிதி (Regd.)

"ஸ்ரீ கோவிந்த தீக்ஷித கடிகாஸ்தானம்"

29-30 East Iyen Street, Kumbakonam, Thanjavur Dt. Tamil Nadu-612 001. India.
E-mail:rajavedapatasala@dataone.in Website:www.rajapatasala.in

☎ Off: (0435) 2425948 2401789
Patasala: 2401788 2422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்புச் செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்கும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதையர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 467 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 210 மாணவர்களுக்கு 20 வேத, சாஸ்திர அத்யாபகர்கள் புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்லயஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். புதிய பாடசாலை கட்டிடம் **ஸ்ரீ கோவிந்த தீக்ஷித கடிகா ஸ்தானம்** என பெயரிடப்பட்டு 21.6.2004 திங்கள்கிழமை **ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்** திறந்து வைத்து வேத அபிவிருத்திக்கு அர்ப்பணித்தார்.

தங்கள் கடிதத்தில் தங்கள் போன் (with STD Code)/மொபைல் எண்ணை குறிப்பிடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடை திட்ட விவரங்கள்	நன்கொடை தொகை	நிரந்தர வைப்பு நிதி "Corpus Fund"
ஒருவேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை)	Rs.700/-	Rs.9,000/-
Special Samaradhana	Rs.2500/-	Rs.30,000/-
Rice & Dhal	Rs.1,600/-	Rs.20,000/-
வேதம் பயிலும் ஒரு மாணவனின் பராமரிப்பு ஒரு மாதச் செலவு ரூ.1000/-	Rs.12,000 P.A.	Rs.1,50,000/-

நன்கொடைகளை தொகையை Cross செய்யப்பட்ட D.D/ Cheque-ஐ A.Y.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

2011 - 2012 கல்வி ஆண்டிற்கான வித்யார்த்திகள் சேர்க்கைக்கு முன் பதிவு துவக்கப்பட்டுள்ளது. பதிவு செய்ய முந்துங்கள்

தியாகத்துக்குத் தயாராமே கேப்டன்?

● **டி.என்.பாலகிருஷ்ணன், சென்னை-91**

? "மழைகூட அழகிரிக்குப் பயந்து, பெய்யாமல் இருந்து விட்டது," என்று அழகிரி வீட்டுக் கல்யாணத்தில் வைரமுத்து பேசியிருப்பதைப் பார்த்தால், அழகிரி ஒரு பயமுறுத்தும் ஆசாமி என்பதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததுபோல் இருக்கிறதே?

! வைரமுத்துவே பயந்துபோய்தானே இப்படியெல்லாம் பேசுகிறார்! அழகிரி மகன் திருமணத்தன்று உள்ளூர் பள்ளிகள் விடுமுறை, போக்குவரத்து மாற்றம், கட்டாய வசூல்... பொதுமக்களுக்கு இடையூறு. பயத்துக்கு எடுத்துக்காட்டாக இவை போதாதா?

● **ச.லட்சுமி, ராயனூர்**

? இந்த தி.மு.க. ஆட்சி மீண்டும் வரக்கூடாது என்பதற்காக எந்த தியாகமும் செய்யத் தயாராமே, விஜயகாந்த்?

! தனித்துப் போட்டி என்ற நிலைப்பாட்டைத் தியாகம் செய்தால் போதாது... யாருடன் கூட்டணி, எந்த அளவுக்கு விட்டுக் கொடுப்பது போன்ற விஷயங்களிலும் தியாகமும் ராஜதந்திரமும் இணைய வேண்டும்.

● **அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி**

? "அமெரிக்காவின் முன்னேற்றம் ஆசியாவைச் சார்ந்து இருக்கிறது," என ஒபாமா கூறுகிறாரே?

! இது தவறான கணிப்பு. அமெரிக்காவின் முன்னேற்றம் அமெரிக்காவையும் அமெரிக்க மக்களையும்தான் சார்ந்திருக்கிறது என்று உறுதிபட நம்பி, அதற்கேற்ப கொள்கை, திட்டங்களை வகுத்தால்தான் அமெரிக்கா இன்றைய பொருளாதாரத் தேக்க நிலையிலிருந்து விடுபட முடியும். பிற நாடுகளின் தலையில் பொறுப்பைச் சுமத்துவதால் அது நடக்காது.

● **கே.கணபதி, சென்னை-11**

? தொழில் துறைக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு சலுகைகள், படிப்படியாக வாபஸ் பெறப்படும் என்று பிரதமர் கூறியிருப்பது பற்றி...?

! சலுகைகள் வாபஸ் பெறப்படுவதற்குள் சம்பந்



★ தியாக தந்திரம்!

தப்பட்ட தொழிலதிபர்கள் லாபம் பார்த்திருப்பார்கள். மறுபுறம், உள்ளூர்த் தொழில்கள் நைந்து நூலாகிப் போகும்- கைத்தறி, பருத்திப் பின்னலாடைத் தொழில்கள் நூல் விலை ஏற்றத்தால் திணறுவதுபோல...


இலட்சியக் கனவு

● ஜி.மகாலிங்கம்,
காவல்காரபாளையம்

? தொலைத் தொடர்புத் துறையை மீண்டும் தி.மு.க.வுக்கே (டி.ஆர். பாலு அல்லது கனிமொழி அல்லது வேறு எம்.பி.க்கள்) கேட்டுப் பெறுவாரா கலைஞர்?

! அப்படிப் பெறக் கூடுமெனில், ராசாவின் ராஜினாமாவுக்கு அதை அவர் ஒரு நிபந்தனையாக்கியிருக்க முடியும். அந்தத் துணிவு அவருக்கு ஏற்படவில்லை என்பதே ஊழலின் பரிமாணத்தையும் அதன் விளைவான தி.மு.க.வின் பலவீனத்தையும் உணர்த்தும்.


பண்டிகை பாலிடிக்ஸ்!

● ஏ.ஷண்முகசுந்தரம்,
பெங்களூரு

? ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுதர்ஷனின் அபாண்டக் குற்றச்சாட்டு பற்றி....?

! அபாண்டம் மட்டுமல்ல; அநாகரிகமும்கூட. அதை உடனடியாகக் கண்டனம் செய்வதற்குப் பதிலாக, ''சுதர்ஷனின் கருத்து பா.ஜ.க.வுடையதல்ல'' என்று அக்கட்சியின் தலைமை அறிவித்தது அதைவிட அநாகரிகம்.

● சீனு சந்திரா, சென்னை-4

? இரட்டைப் புல்லாங்குழல்களுள் ஒன்று (சிக்கில் குஞ்சுமணி) ஓய்ந்துவிட்டதே?

! இல்லை; குஞ்சுமணி மறைந்தாலும், இளைய சகோதரி சிக்கில் நீலாவை மட்டுமின்றி, அவரது மகள் மாலாவையும் தமது பேரன் குருசரணையும் நற்கலைஞர்களாக உருவாக்கியதன் மூலம் அவருடைய இனிய குழலிசை மரபு புதிய பரிமாணங்களில் தொடர்கிறது.


அஞ்சும் கவிதை!


தொடரும் மரபு

● ஆ.லெட்சுமி,
சென்னை-101

? 'உ.பி., தமிழகத்தில் கூட்டணியே வேண்டாம்; தனித்து ஆட்சியைப் பிடிக்க வேண்டும்' என்று ராகுல் காந்தி அனுபவமற்ற அரசியல்வாதியாகப் பேசுகிறாரே?

! ராகுல் காந்தியின் லட்சிய நோக்கு அது. அதை நீண்ட காலத் திட்டமாக வைத்து, இன்றைய சூழலுக்கு ஏற்ப அவர் வியூகம் அமைப்பது அத்தியாவசியமானது. ஸ்பெக்ட்ரம் ஊழல் காரணமாக, தி.மு.க. பெருமளவிலும் காங்கிரஸ் ஓரளவுக்கும் தமிழக மக்களிடையே மதிப்பிழந்து போயிருக்கிறது என்பதை அவர் நினைவில் கொண்டு, சாணக்கியத்துடன் செயல்படட்டும்.

● என்.பாலகிருஷ்ணன்,
மதுரை

? ''விலைவாசி உயர்வால் மக்கள் பண்டிகைகளைக் கொண்டாட சிரமப்படுகிறார்களா என்பதை பாண்டி பஜாருக்குச் சென்றால் தெரிந்துகொள்ளலாம்,'' என்று முதல்வர் பேசியிருக்கிறாரே?

! பாண்டி பஜாரில் ஷாப்பிங் கூட்டம் மிகுவதால் சுபிட்சம் பெருகுவதாகக் கொள்ள முடி

யாது. அதிலே, கடன் வாங்கி ஷாப்பிங் செய்வோர், பட்ஜெட்டைக் குறைத்துக் கொண்டவர்கள், வேடிக்கை பார்த்துவிட்டு வெறுமே போனவர்கள் எல்லோருமே இருப்பார்கள். இப்போதைய விலைவாசியில் பண்டிகை கொண்டாடுவது ஹிம்சையாக இருக்கிறது என்பதால்தானே அரசே அடுத்து வரும் பொங்கல் பண்டிகைக்கு ரேஷன் கடைகளில் பொங்கல் பாக்கெட் (அரிசி, பருப்பு, வெல்லம்) வினியோகிக்க இருக்கிறது.

● **எஸ். கதிரேசன், பேரணாம்பட்டு**

? **உமா பாரதி மீண்டும் பா.ஜ.க.வில் சேரப் போவதை நிதின் கட்கரியின் சாதனை என்று கூறலாமா?**

! உமாபாரதியின் பலவீனம் என்றும் கூறலாம்.

● **டி.முருகேசன், திருவாரூர்**

? **மக்களுக்குக் கொடுத்த அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட்டுவிட்டதால் தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வரும் என்கிறாரே ஸ்டாலின்?**

! அதை அவர் வாக்காளர்களுக்கு நினைவூட்டியது சரிதான். வாக்காளர்கள், ''வரலாறு காணாத லஞ்ச-ஊழல் புரிவதாக நீங்கள் தேர்தல் வாக்குறுதி அளிக்கவில்லையே, அதை ஏன் நிறைவேற்றினீர்கள்?'' என்று திருப்பிக் கேட்க நினைத்தால் அதுவும் சரிதான்!

● **மா.பெரியசாமி, சென்னை-19** ★

? **அலைக்கற்றை ஊழல் விவகாரம் விசுவரூபம் எடுத்த நிலையில், கூட்டணி தர்மம் பற்றி பேசினாரே ஜெயந்தி நடராஜன். ஊழலைக் கண்டுகொள்ளாமல் இருப்பதுதான் கூட்டணி தர்மமா?**

! கூட்டணியானது ஊழலிலும் கை கோக்கிறபோது விளையும் கூட்டணி அதர்மம் அவரை அப்படிப் பேச வைத்ததோ என்னவோ!

★ கூட்டணி அதர்மம்!





★ தவறான கணிப்பு



★ அபவுட் டர்ன் ஆக்ஷன்!

● **என்.மாணிக்கம், மின்னல்** ❐

? **விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் உள்பட பலரும் இறந்துவிட்ட பிறகும் விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிப்பதில் என்ன நன்மை?**

! விடுதலைப் புலிகளுக்கு, அயல்நாடுகளில் வாழும் உறுப்பினர்கள் நிறைய பேர் உண்டு. அவர்கள் இன்றும் இயங்கி வருகிறார்கள். தவிர, இலங்கையிலும் தமிழகத்திலும் ஆதரவாளர்கள் கணிசமாக இருக்கிறார்கள். புலிகள் மீது தடை நீக்கப்பட்டால், பதுங்கியுள்ள இந்த இரு பிரிவினரும் இணைந்து பாயும் அபாயத்தை விரைவில் சந்திக்க நேரிடும். ●

❐ **ரூ.150/- பரிசு பெறுபவர்:**
என்.மாணிக்கம், மின்னல்

★ **ரூ.75/- பரிசு பெறுபவர்:**
மா.பெரியசாமி, சென்னை-19

உங்கள் கேள்விகளை 'தராசு' என்று குறிப்பிட்டு kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்ஃபோனில், KAGQA என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

BLB
PLEDGED TO ETHICS

தள்ளுபடி விலையில்
சிறந்த மனைகள்.
நம்பிக்கையான நிறுவனம்.

கீழ்கண்ட இடங்களில் உள்ள மிக சிறந்த மனைகள் மிக மிக குறைவான விலைக்கு வழங்கப்படுகிறது. மிகுந்த லாபம் தரக்கூடியது.

ஸ்ரீ தேசிகர் நகர்

விலை ₹450 ச.அடி

மஹிந்திரா சிட்டி எதிரில்
GST சாலையிலிருந்து 5 நிமி. நடை தூரம்
(காம்பவுண்டு சுவர் கட்டப்பட்டது)
DTCP அனுமதி பெற்றது

ஸ்ரீ கண்ணப்பர் அவென்யூ

விலை ₹200 ச.அடி

ஆத்தூர் - செங்கல்பட்டு
GST சாலையிலிருந்து 5 நிமி. பயணம்
(காம்பவுண்டு சுவர் கட்டப்பட்டது)
DTCP அனுமதி பெற்றது

வங்கி கடன் வசதி உண்டு

— 2834 5104 (4 lines) —

BLB ESTATES (P) LTD

Website: www.blbestates.com

12 Years
of spreading prosperity

INVESTING IN VALUES

சென்னையில்
ஸ்ரீ அன்னையின்
பொற்கோயில்







சென்னை, மேற்கு மாம்பலம் 59, ஆரிய கௌடா ரோட்டில் பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னையின் புனிதப் பொருட்களைக் கொண்டு மகா சமாதியும், முழு உருவ பளிங்கு சிலையும் கொண்ட சத்திய ஜீவிய மையம் நிறுவும் பணிகளுக்கு தாங்கள் அனுப்பி வரும் சிறப்பு காணிக்கையை **"Sri Auravindar Annai Dhyana Maiyam"** என்ற பெயரில் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம். ஸ்ரீ அரவிந்தர் அன்னை தியான மையம், # 10, 45 வது தெரு, 9 வது அவென்யூ, அசோக் நகர் - 83.
போன்: 2474 6000, 98414 25456

ரூ.10,000/-க்கு மேல் நன்கொடை அளிக்கும் அன்பருக்கு ஸ்ரீ அரவிந்தர் அன்னையின் சாவித்ரி ரூப யக்ஞத்தில் வைக்கப்பட்ட பகவான், மதர் **கிரிஸ்டல் சிற்பம்** அனுப்பி வைக்கப்படும்.

ரூ. 50,000/-க்கு மேல் நன்கொடை அளிக்கும் அன்பருக்காக ஒரு ஆண்டு முழுவதும் நமது சத்திய ஜீவிய மையத்தில் **898 வகையான மலர்களை** ஸ்ரீ அன்னைக்கு சமர்ப்பணம் செய்யப்படும்.

ரூ.1லட்சத்திற்கு மேல் நன்கொடை அளிக்கும் அன்பர் பெயர் சத்திய ஜீவிய மைய கட்டிடத்தில் பொறிக்கப்படும்.

ஸ்ரீ அன்னையின் திருக்கோயிலுக்கு இயன்ற காணிக்கையை அளித்து வரும் அன்பர்கள் அனைவருக்கும் ஸ்ரீ அன்னையின் பாதுகாப்பு கவசம் (திருவடி) அனுப்பி வைக்கப்படும்.

ஸ்ரீ அன்னை அடிகள்: 93804 50621
sriannaiadigal@gmail.com, www.mothergrace.org

நங்கநல்லூர் • மயிலாப்பூர் • அம்பத்தூர்



கல்கி



2010 டிசம்பர் 5
விக்ருதி கார்த்திகை 19
மலர் : 69
இதழ் : 19

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

நானிலத்தோர் நகையாரோ!

உலகமே நம்மைப் பார்த்துக் கேலியாகச் சிரிக்கிறது!

''தன்னலம் கருதி தாய்நாட்டை மறந்தால்

நானிலத்தோர் நகையாரோ!'' என்ற 'தியாக பூமி' திரைப்படத்தின் பாடல் வரிகள், அன்றைய (1939) சுதந்திரப் போராட்டச் சூழலைவிட இன்றைக்குத்தான் அதிகம் பொருந்துகின்றன.

ஸ்பெக்ட்ரம் ஊழலைத் திட்டமிட்டு நிகழ்த்துவதில் அரசியல்வாதிகளுடன் மீடியாவைச் சேர்ந்தவர்களும் தொழிலதிபர்களும் கைகோத்துச் செயல்பட்டிருப்பது மிகப் பெரும் அதிர்ச்சி. இதனைச் சுட்டிக்காட்டி, கூட்டு பாராளுமன்றக் குழு விசாரணையைக் கோரும் பா.ஜ.க.விலும் மிகப் பெரும் ஊழல் குற்றச்சாட்டு! கர்நாடக முதல்வர் எடியூரப்பா முறைகேடாக நிலங்களை ஆர்ஜிதம் செய்து தமது குடும்பத்தினருக்கு ஆதாயம் கிடைக்கச் செய்திருக்கிறார் என்பது வெளிப்பட்டுள்ளது. இதனினும் பெரிய அதிர்ச்சி, எடியூரப்பா ராஜினாமா செய்ய மறுத்து வருவதுதான்! கட்சித் தலைமையிடமே எதிர்த்துப் பேசுவதும், தமக்குத் தாமேதான் வாரிசு என்று அறிவிப்பதும் அடாவடித்தனத்தின் உச்சம்! ஸ்பெக்ட்ரம் ஊழலில் குற்றம் சாட்டப்பெற்ற ராசா, தாம் ஏன் ராஜினாமா செய்ய வேண்டும்? என்று கேட்டு, பதவியை விட்டு இறங்க மறுத்தது எடியூரப்பாவுக்கு முன்னுதாரணமாகிவிட்டது போலும்!

இந்நிலையில் காங்கிரஸையும் தி.மு.க.வையும் தட்டிக் கேட்க பா.ஜ.க.வுக்குத் தார்மிக பலம் ஏது? இப்படியே எதிர்க்கட்சிகளும் அணிகளும் பரஸ்பரம் குற்றம் சாட்டிக்கொண்டு சட்ட





மன்ற/நாடாளுமன்ற நடவடிக்கைகளைத் தடைசெய்து வருவது தொடர்கிறதேயொழிய, நாட்டில் உருப்படியாக எதுவும் நடப்பதில்லை.

அனைத்து ஊழல்/முறைகேடு பிரச்னைகளுக்கும் அடிப்படைக் காரணம் பணத்தாசை தான். தேர்தலில் ஏராளமாகச் செலவழித்து வெற்றி பெற வேண்டியிருக்கிறது. அதனால்தான் லஞ்ச-ஊழல் நிகழ்கிறது என்கிற விளக்கத்தையும் தாண்டி, இன்று லஞ்ச ஊழலின் பரிமாணம் பயமுறுத்துகிறது. தேர்தல் நிதியாகவும் கட்சிக்கு நன்கொடையாகவும் தொழிலதிபர்களிடமிருந்து பெற்ற கறுப்புப் பணத்தில், கொஞ்சம் சொந்த உபயோகத்துக்கும் ஒதுக்க ஆரம்பித்து, அதுவே மெல்ல அதிகரித்து, சொந்தத்துக்கு எடுத்துக்கொண்டது போக மிச்சம் சொச்சம் கட்சிக்கு என்றாகிவிட்டது! பொதுவாழ்வில் இருப்போர் எளிமைக்கும் நேர்மைக்கும் எடுத்துக்காட்டாக இருப்பது போய், ஆடம்பரத்துக்கும் பகட்டுக்கும் வழிகாட்டிகளாக மாறிவிட்டார்கள்!

தட்டிக் கேட்க வேண்டிய மீடியாவும் எடுத்துச் சொல்ல வேண்டிய அரசு அதிகாரிகளும் அரசியல்வாதிகளுடன் கைகோத்துவிட்ட நிலையில், நிலைமையைச் சீர்திருத்துவது எவ்வாறு?

நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட அறிஞர்கள், நேர்மையாளர்கள்தான் ஒன்று சேர வேண்டும். அரசியல், பொதுவாழ்க்கைச் சீரழிவை எதிர்க்கும் மாற்று இயக்கம் ஒன்றை ஆரம்பித்தாக வேண்டும். பாமரர்களுக்கும் புரியும் வகையில் சீர்கேடுகளையும் அவற்றுக்கான காரணங்களையும் விளக்கி, நேர்மை, நெஞ்சுரம், மனிதநேயம் என்ற உயர் பண்புகளை மீட்கவும் பொதுவாழ்வில் அவற்றை மீண்டும் நிறுவவும் நாடுதழுவிய இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும். இந்த இயக்கம், ஆட்சியில் அமர வேண்டும் என்ற ஆசையின்றியும் விருப்பு-வெறுப்புகளைக் கடந்தும் நாட்டு நடப்புகளை விமர்சிப்பதோடு, வேட்பாளர்களின் தகுதிகளை அல்லது தகுதியின்மையை ஆராய்ந்து சொல்லி, மக்களுக்கு வழிகாட்ட வேண்டும். ஐ.எஸ்.ஐ. முத்திரை பெறுவதுபோல், இந்த அமைப்பிடம் வேட்பாளர்கள் தகுதிச் சான்றிதழ் பெற வேண்டும். சிரிப்புக்கிடமாகிவிட்ட நம் நாட்டை சீர்திருத்தி, அதன் சிறப்பிடத்தில் மீண்டும் நிறுத்த இது ஒன்றுதான் வழி.

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை



அன்புடன் அழைக்கிறது

அனைவரும் வருக!

அமரர் கல்கி நினைவு நாள்

05.12.2010, ஞாயிற்றுக்கிழமை, மாலை 6.00 மணி

ராக சுதா அரங்கம், லஸ், மயிலாப்பூர், சென்னை-600 004



நூல் வெளியீடு, தலைமையுரை:

திரு. B.S.ராகவன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு)

நூலைப் பெற்றுக்கொண்டு ஏற்புரை:

திரு. ஸி.ஆர்.பார்த்தசாரதி

(ராஜாஜி அவர்களின் பேரன்)

அபிநய நடன நிகழ்ச்சி:

வேலும் மயிலும்

நிகழ்த்துபவர்:

ஸ்ரீமதி மஞ்சரி

காஞ்சி காமாட்சி... மதுரை மீனாட்சி... டோக்கியோ ஹிடாச்சி?

ஜே.எஸ்.ராகவன்



- ஜப்பானியப் பெயர்கள் சூட்டி அங்கே இந்துக் கடவுள்களை வழிபடுகிறார்கள்.

  காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி வரிசையில் டோக்கியோ ஹிடாச்சியா?

- கணினி மூலம் சம்பாதிக்கும் மனைவிகள் மௌஸ்-ஒய்ஃபாம்

  இதனால் வாங்கும் கிச்சன் உபகரணங்கள் சாப்(பா)ட்டுவேரா?

- திருப்பதி தேவஸ்தான முறைகேடுகளுக்கு வாஸ்து மேல் பழி.

  லட்டு லட்டா கிடைக்கிற பணமும் இல்லையா?



- அசுத்தத்தில் அடையாறு, கூவத்தை மிஞ்சி விடுமாம்.

  அப்புகழை அடையாறு அடையாது எனக் கூவம் கொக்கரிக்கலாம்.

- மணல் துளியை விட சிறிய பாட்டரி கண்டுபிடிப்பு.

  இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவை கைமணல் அளவுதான் போலிருக்கு.

- பாகிஸ்தானின் பள்ளி, இரவில் கல்லறையாகச் செயல்பாடு.

  இங்கு ஆசிரியர்கள் பேயறை அறையலாம்.

- அங்கோலா வாலிபருக்கு ஆறங்குல குறுக்கு நீளமுடைய வாயாம்.

  இவர் ஒரு வாய் காப்பி கேட்டால் கொடுக்க முடியுமா?



- சந்திரனுக்கு மாணவர்களைச் சுற்றுலா அனுப்ப இஸ்ரோ திட்டம்

  ராக்கெட்டின் சுவரில் தட்டி விசிலடித்துப் பயணிப்பார்கள்.

- மதுக்கரையில் காட்டு யானைகள் மின் வேலியைப் பார்த்து ஓட்டம்.

  நம்மூர் மின்வெட்டைப் பற்றி அவைகளுக்குத் தெரியாது.

- பற்கள் நடுவே பென்சிலைக் கவ்வியிருந்தால் தலைவலி போயிடுமாம்.

  திருகு உள்ள பேனா மூடியைக் கவ்விக் கொண்டால் திருகுவலி போயிடுமா?

- அடுத்த படங்கள் வெற்றி பெற விஜய் 108 கறவைப் பசுக்கள் தானம்.

  இளைய தளபதி இனி வசூலை ஆடிக் கறக்கலாம்.

- லண்டன் மூதாட்டியிடம் உள்ள ஃப்ரிட்ஜ் 63 வருஷப் பழசாம்.

  அதிலுள்ளது அவ்வளவு பழசாக இருக்காது!



சேலம்

மாவட்ட ஸ்பெஷல்


'அப்பன், ரத்தத்தைச் சிந்தி சம்பாதிக்கிற காசையெல்லாம் இந்தப் பயபுள்ள கேமராவைத் தூக்கிக்கிட்டுத் தெருத்தெருவா சுத்திக் கரைச்சிட்டு இருக்கான். இவனுக்கு அந்த மாரியாத்தா எப்போதான் நல்ல புத்தியைக் கொடுக்கப் போறாளோ?' ஆத்தூரில் வசவு வார்த்தைகள் வந்துவிழுகின்றன ஏ.எம். சுதாகர் மீது. ஆனால், கேமரா வாங்கிக் கொடுத்ததே அவரின் அப்பாதான் என்பது சுவாரஸ்ய முரண். ஆனால், கடந்த மாதம் ஆல் இண்டியா சலூன் ஆப் ஃபோட்டோகிராபி 2010 என்ற அகில இந்திய அளவிலான புகைப்படப் போட்டியின் மோஷன் பிரிவில் பிளேயர்ஸ் அண்ட் ஃபுல் என்ற சுதாகரின் புகைப்படம் முதல் பரிசைத் தட்டி வந்திருக்கிறது. முன்னணித் திரைப்பட இயக்குனரான மணிரத்னம் கலந்துகொண்டு படங்களை ரசித்துப் பாராட்டியதைத் தமது கேமராவுக்குக் கிடைத்த கௌரவமாக நினைக்கிறார் சுதாகர்.

சேலம் வட்டாரத்தில் எங்கேயாவது பேருந்தில் பயணிக்க நேர்ந்தால் சிக்னலில் கையேந்தி நிற்கும் பிச்சைக்காரர்களுக்கு மத்தியில், தெருவோரத்தில் கேமரா ஏந்தித் தமது ஏக்கத்தைப் பதிவு செய்துகொண்டிருக்கும் சுதாகரைப் பார்க்கலாம். புகைப்படத் துறையில் அனுபவமிக்க ஜாம்பவான்கள் எல்லாம் சுதாகரை வாழ்த்த... சொந்த மண்ணில் ஏளனம்தான்.

''நான் எடுத்த புகைப்படத்தை ஆசை ஆசையா எடுத்துட்டுப் போய் என் வி.ஐ.பி. நண்பர் ஒருத்தர்கிட்ட காண்பிச்சேன். அவர் 'பெயிண்டிங்தான் அற்புதமானது. அதுல

தெருவோர





திறமை, பொறுமை, கலர் உபயோகிப்பது உள்ளிட்ட பல விஷயங்கள் அடங்கியுள் ளன. ஆனால் கேமராவில் உள்ள பொத் தானை அழுத்தினால் படம் பதிவாகி விடும். இதில் உன் திறமை என்ன இருக் கிறது'ன்னு சிரிச்சார். நொறுங்கிப் போனேன். நான் பெற்ற வெற்றி, அதிர்ஷ்டம் அல்ல. எனது திறமைகளையும், கனவுகளையும் பதிவு செய்திருக்கிறேன் என்பதை நிரு பிக்க வேண்டும் என்கிற வெறிதான், கிளீன் இந்தியா ஃபோட்டோ கான்டெஸ்ட் 2008 என்ற சர்வதேசப் புகைப்படப் போட்டியின் என்விராண்ட்மெண்ட் பிரிவில் எனது பிக் அண்டு பீப்பிள் படம் முதல் பரிசைத் தட்டிச் செல்ல வைத்தது. பரிசுத் தொகை ரூ.50 ஆயிரத்துடன் கூடுதல் சந்தோஷ மாகப் புது தில்லிக்குப் போக வர விமானக் கட்டணமும் கொடுத்து, திட்டக்குழுத் தலைவர் மாண்டெக் சிங் அலுவாலியா விடம் பாராட்டுகளுடன் பரிசையும் பெற் றேன்'' என்கிறார் சுதாகர்.

பை - செல் நிறுவனம் சர்வதேச அளவில் சினிமா டுடே அவார்ட்ஸ் 2009 என்ற புகைப்படப் போட்டி நடத்தியது. முன்னங் கால்களில் ஒன்றை இழந்த நாய் ரத்தம் சொட்டச் சொட்டத் தன் குட்டி களுக்குப் பால் புகட்டும் காட்சியைப் பதிவு செய்து தா(நா)ய் பாசம் என்ற தலைப் பிட்டு அனுப்பி வைக்க மறுபடியும் சுதாகருக்கு முதல் பரிசு.




''ஆல் இண்டியா சலுன் ஆப் ஃபோட் டோகிராபி பரிசை மணிரத்னத்திடமிருந்து பெறும்போது, வழக்கமா நாங்கதான் உங்கப் படத்தைப் பார்க்க வருவோம், ஆனால் நீங்க எங்கப் படத்தைப் பார்க்க வந்தது பெருமையா இருக்கு என்றேன். அதற்கு அவர், 'உங்கள் புகைப்படம் போலவே அணுகுமுறையும் நன்றாக இருக்கிறது' என்று சிக்கனமாகப் பாராட் டியது ப்ளாக் அண்ட் வொய்ட் புகைப் படம் போல ரம்யமானது.''

வாசகர் யோசனை : ராஜா-சேலம்



போட்டோகிராபர்!







டாக்டர். சுதா சேஷய்யன்

அடக்கம் என்கிற பசை!

மான், அழகான விலங்கு. தன்னுடைய அழகைக் காட்டி மயக்குகிற மானுக்கு, அழகைக் கண்டு மயங்குகிற தன்மையும் உண்டு. நீரில்லாமல் வறண்டுபோன பகுதிகளில் திரிகிற மான்கள், வழக்கமாக ஒன்று செய்யும். அங்கே நீரில்லை என்பது தெரிந்திருந்தாலும், பல காலமாக அந்த வறட்சியைப் பார்த்திருந்தாலும், வெயில் சமயங்களில் நீர் போன்று தோற்றம் தரும் கானல் காட்சிகளைக் கண்டு மயங்கி, அவற்றை நாடி ஓடும். அவ்வாறு ஓடினால்...? ஓடினாலென்ன! இப்படியே கானல் நீரைக் கண்டு கண்டு, ஓடி ஓடி, கடைசியில் தண்ணீரே கிடைக்காமல் விழுந்து மடியும். சின்ன மான்களை வசப்படுத்த வேண்டும் என்றால், அவற்றின் தலைவனை முதலில் நெறிப்படுத்த வேண்டும்.

கானலைக் கண்டு மயங்கி, தானும் கூட்டமுமாக மடிந்து போகிற தலைமை மானுக்கு, கைவசம் உள்ள குடத்தைக் காட்டி விட்டால், அதிலேயே தண்ணீர் பருகக் கற்றுக்கொண்டு விடாதா? குடத்தைப் பார்த்தால், அழகாகவும் அலங்காரமாகவும் இருக்கிறது; ஆனால், கையில் எடுத்த பின்னர் தான், அதில் நிறைய பொத்தல்கள் என்பது புரிகிறது. பொத்தல்களை அடைத்தாலொழிய குடம் பயன்படாது. என்ன செய்வது?

குடத்தையும் காப்பாற்றி, தண்ணீரையும் காப்பாற்றி, தலைமை மானையும், மான் கூட்டத்தையும் காப்பாற்றுவது எப்படி?

அவிநயம் அபநய விஷ்ணோ
தமய மன: சமய விஷய ம்ருக த்ருஷ்ணாம்
பூத தயாம் விஸ்தாரய
தாரய ஸம்ஸார ஸாகரத:

(ஆதிசங்கரர் - ஷட்பதீ ஸ்தோத்திரம் - 01)

விஷ்ணுவே! 'என்னுள்ளத்தில் இருக்கும் அவினயத்தைப் (வினயம் என்பது அடக்கம், பணிவு; அதற்கு எதிரானது அவினயம்) போக்குவீராக. மனத்தைத் தமப்படுத்தி (மனத்தை அடக்குவது - இதனால் கிட்டுவது தாந்தி), கானல் நீரைத் தேடி ஓடும் மான்களான புலன்களைச் சமப்படுத்துவீராக (புலனடக்கம் - இதனால் கிட்டுவது சாந்தி). உயிர்க்குலம் அனைத்துக்கும் என் அன்பை விரிவாக்குவீராக. பிறவிப் பெருங்கடலைக் கடக்கச் செய்வீராக.'



5

வாரம் ஒரு மந்திரம்



'ம்ருகம்' என்பது அனைத்து விலங்குகளைக் குறித்தாலும், சிறப்பாக மானைக் குறிப்பதாகும். மான்களாகத் திகழ்கிற புலன்கள், உலக மாயைகளைக் கண்டும் கேட்டும் தொட்டும் சுவைத்தும் மோந்தும் மயங்குகின்றன. கண்களை மூடிக் காதுகளைப் பொத்திப் புலன்களை அடைத்தாலும், அவற்றின் தலைவனான மனம், தானே தனியாக ஆட்டம் போடும். மனத்தைக் கட்டுப்படுத்தினால், மான் கூட்டத்தைக் கானலிலிருந்து பிரிக்கலாம். அதே மனத்தைக் கட்டுப்படுத்தினால், பணிவு (வினயம்) வரும். அடக்கமும் பணிவும் வந்தால், ஆன்ம கலசத்திலுள்ள ஆயிரமாயிரம் ஓட்டைகளாம் கோபம், தாபம், பொறாமை போன்றவற்றை அடைத்துவிடலாம். பொத்தல்களை அடைத்தால், குடத்துக்குள் ஆன்ம பலம் என்னும் நீரைச் சேமிக்கலாம்; மான்களுக்குக் கொடுக்கலாம். இவற்றையெல்லாம் விட முக்கியமானது என்ன தெரியுமா? அமுதகலசத்தின் உள்ளிருக்கும் ஆன்ம பலத்தையே அன்பாக்கினால், அது அடுத்தவர்க்கும் பயன்படும். மனத்தைக் கட்டினால், மற்றவரிடமும் அன்பு பாராட்டலாம். பிறரிடம் அன்பு காட்டினால், பிறவிப் பெருங்கடலிலிருந்து காப்பாற்ற, பெருமானே கப்பலோட்டுவார்.

ஓட்டைகளை அடைப்பதற்கு ஒரேயொரு வழியுண்டு. என்ன தெரியுமா? பணிவாக இருப்பது. ஆமாம், எல்லாவிதமான ஓட்டைகளையும் அடைக்கக்கூடிய ஒரே பசை - அடக்கம்!

(மந்திரம் ஒலிக்கும்...)



கமான் கேப்டன்!


★ தி.மு.க.வும், அ. தி.மு.க.வும் முக்கிய நகரங்களில் தங்கள் செல்வாக்கை நிரூபிக்கும் வகையில் கூட்டங்கள் நடத்திவிட் டன. இப்போது தே.மு.தி.க காஞ்சிபுரத்தில் மாநாடு நடத்தப் போகிறதாம். இதற்கான வசூல் வேட்டையைத் தொடங்கி விட்டார்கள் தே.மு.தி.க. பிரமுகர்கள். ''வரும் தேர்தலிலும் தனியாக நின்று வேஸ்ட் ஆகிவிடாதீர்கள். சட்டமன்றம் போகும் வழியைப் பாருங்கள்'' என்கிறார்களாம் நிதி கொடுப் பவர்கள். தனியாக நின்றால் ஆளும் கட்சிக்கு ஆதாயம் என்ப தால் விஜயகாந்த் தனியாக நிற்பதற்கு ஆளும் கட்சியால் அழுத்தமும் இப்போது கூடுதலாகக் கொடுக்கப்படுகிறதாம். ''கேப்டனின் குடும்பம் இதற்குப் பலியாகக் கூடாது'' என் கிறார்கள் தொண்டர்கள். கடைசி நேரத்தில்தான் ஜெயலலிதா வுடன் கைகோக்க முடிவு செய்வாராம். அப்போதுதான் கேட் டது கிடைக்குமாம்.



வேண்டும்... பந்தா!

★ ராஜ்ய சபை உறுப்பினர் கனிமொழியும், அமைச்சர் பூங்கோதையும் ரொம்ப நெருக்கம். இடையில் சில காலம் பதவியிழந்த பூங்கோதை மீண்டும் அமைச்சரானது கனிமொழி மூலம்தான் என்று சொல்வார்கள். எந்த அரசுப் பொறுப்பிலும் கனிமொழி இல்லாததால், தென் தமிழகத்துக்கு அவர் வரும்போது பூங்கோதையுடன்தான் அவர் பயணிப்பார். சிவப்பு விளக்கு சுழ

தி.மு.க.வில் எம்.ஜி.ஆர். பக்தர்கள்!



★ தி.மு.க.வில் இப்போது சுறுசுறு உடன்பிறப்புகளாகச் சுற்ற வருபவர்கள் ஒரு காலத்தில் அ.தி.மு.க.வில் இருந்த எம்.ஜி.ஆர் பக்தர்கள்தான். எ.வ.வேலு, செல்வகணபதி, கருப்பசாமி பாண் டியன், முத்துசாமி, ரகுபதி, கே.கே.எஸ்.எஸ்.ஆர் என்று மாவட டத்துக்கு ஒருவர் இருக்கிறார்கள். இவர்களிடம் உள்ள சிறப் என்னவென்றால், அவர்களின் கடுமையான உழை போடு உழைக்கும் தொண்டர்களுக்கும் எந்தத் தயக்கமு இல்லாமல் தாராளமாக அள்ளிக் கொடுப்பது. இது எல்லா ஒரிஜினல் உடன்பிறப்புகளுக்கும் ஒட்டாத பழக்கம்.

ஆண்டிப்பட்டிக்கு பை...பை...

★ இந்தமுறை ஜெயலலிதா ஆண்டிப்பட்டி தொகுதியில் போட்டியிடுவாரா? சந்தேகம்தான் என்கிறார்கள். காரணம், தேவையில்லாமல் அழகிரியுடன் மல்லுக்கட்ட வேண்டுமே! ஆனால் காங்கிரஸ் கூட்டணி அமைந்துவிட்டால் அதே தொகுதியில் போட்டியிடக்கூடும். இல்லையேல் ''ஈரோடு அல்லது கிருஷ்ணகிரி மாவட்டத் தொகுதியில் அம்மா போட்டியிடக்கூடும்'' என்கிறார் அ.தி.மு.க. பிரமுகர் ஒருவர். ஜெ.வுக்குத் தொகுதி தேடுவதைவிட சசிகலா குடும்பத்தில் போட்டியிட விரும்பும் இருவருக்குத் தொகுதியைத் தேடுவதில் பிஸியாக இருக்கிறார்கள் சில அ.தி.மு.க. பிரமுகர்கள்.



பாலிடிக்ஸ் பஜார்



னும் கார், பந்தோபஸ்து, பந்தா எல்லாம் கிடைத்துவிடும். இப்போது பூங்கோதை, வரும் தேர்தலில் 'எனக்கு ஆலங்குளம் தொகுதி வேண்டாம்' என்று சொல்லியிருக்கிறாராம். காரணம் அந்தத் தொகுதியில் அவரது தந்தை ஆலடி அருணாவைப் பிடிக்காத கழகத்தினர் ஒன்றுதிரண்டு விட்டார்களாம். சமீபத்தில் தொகுதியில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் ஆலடி அருணாவை எதிர்த்துக் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

தவிக்கும் தாமரை?



★ பாரதீய ஜனதாவின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் சமுதாயத்தில் சகல தரப்பினருக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் பா.ஜ.க.வில் 'தடாகம்' என்ற அமைப்பு தொடங்கப்பட்டிருக்கிறது. (பா.ஜ.க.விலும், ஆர்.எஸ்.எஸ்.ஸிலும் நடுநிலை அமைப்பு போன்று தோற்றமுடைய பல அமைப்புகள் ஏற்கெனவே உண்டு) சமீபத்தில் டாக்டர்கள், இன்ஜினியர்கள், மென்பொருள் எக்ஸிக்யூட்டிவ்கள் ஆகியோரைக் கூட்டி கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. திரைத் துறையில் உள்ளவர்களைச் சேர்க்க சிறப்புக் கவனம் செலுத்தப்படுமாம். தமிழகத் தலைவர் பொன். ராதா கிருஷ்ணன் 'தடாக' செயல்பாடுகளில் ரொம்ப ஆர்வம் காட்டுகிறாராம்.

சஞ்சயன்

பலப்பரீட்சை டெஸ்ட்!

இந்திய ரசிகர்கள் தென் ஆப்பிரிக்கா உடனான டெஸ்ட் தொடரை மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாளைக்கே அதன் முடிவு தெரிந்துவிடாதா என்கிற அளவுக்கு ஆர்வம் மிதமிஞ்சி இருக்கிறது. இந்திய ரசிகர்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகமும்.

இதுவரை இந்தியாவும் தென் ஆப்பிரிக்காவும் ஒன்பது டெஸ்ட் தொடர்களில் மோதியுள்ளன. அதாவது தெ.ஆ. தம்மீது விதிக்கப்பட்ட தடையிலிருந்து மீண்டும் ஆட ஆரம்பித்த பிறகு. இதில் ஐந்து தடவை தெ.ஆ. வெற்றி கண்டுள்ளது. அதிலும் தெ.ஆ.-வுக்கு இதுவரை 4 தடவை சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய அணி, நான்கிலும் தொடரை இழந்துவிட்டுத்தான் நாடு திரும்பியிருக்கிறது. ஆஸ்திரேலியா போலத் தென் ஆப்பிரிக்காவும் இந்திய அணிக்குத் தலைவலி ஏற்படுத்தும் ஒரு நாடுதான். ஒருமுறை (1999) இந்தியாவிலும் டெஸ்ட் தொடரை தெ.ஆ. அணி வெற்றி கண்டிருக்கிறது. டெஸ்ட் தொடரில் இந்திய அணிக்கு அது எப்போதும் சவால்தான்.

கடந்தகால வரலாறு இந்திய அணிக்கு மிகவும் பாதகமாக இருந்தாலும் இந்தத் தடவை அவ்வளவு சுலபமாக இந்திய அணி தோற்றுவிட முடியாது. ஒரே காரணம், இந்திய அணி இப்போது முதல் இடத்தில் இருக்கிறது. இதை ஜீரணிக்க முடியாதவர்கள் இந்தியாவைப் பார்த்து ஒரே ஒரு கேள்வியைத்தான் கேட்கிறார்கள், 'எங்கே நீ தென் ஆப்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் தொடரை வென்று காட்டு பார்க்கலாம்?'

இந்த வருடக் கடைசியில் தென் ஆப்பிரிக்கா செல்லும் இந்திய அணி அடுத்த வருடக் கடைசியில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்கிறது. ஒரே வருடத்தில் இரண்டு கண்டங்களைத் தாண்டியாக வேண்டிய நிர்ப்பந்தம். சும்மாவா முதலிடத்தில் அமர முடியும்?

இந்திய அணியும் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்தே இருக்கிறது. இப்போது அதன் கண்ணுக்கு அடுத்த வருடம் நடக்கவுள்ள உலகக்கோப்பைகூட முக்கியமில்லை. எப்படியாவது தெ.ஆ. தொடரை வென்று காட்டி ஊர் வாயை மூடியாக வேண்டும்.





ச.ந.கண்ணன்



இதனால் நியூசிலாந்து உடனான ஒருநாள் போட்டியில் தோனி, ஷேவாக் உள்பட தொண்ணூறு சதவிகித டெஸ்ட் அணி வீரர்கள் பின்வாங்கி விட்டார்கள். ஆஷஸ் என்ன பெரிய ஆஷஸ், இந்தியா-தென் ஆப்பிரிக்காவுடனான டெஸ்ட் தொடர் புழுதியைக் கிளப்பப் போகிறது என்பது இப்போது புரிய ஆரம்பித்து விட்டது.

முன்பைவிடவும் தென் ஆப்பிரிக்க அணியின் பலம் கூடி இருக்கிறது. உலகிலேயே மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சும் மிடில் ஆர்டரும் அதனிடம் இருக்கிறது. இந்திய அணியும் சளைத்ததல்ல என்றாலும் தென் ஆப்பிரிக்க மண்ணில் ஈடுகொடுத்து ஆடி ஜெயித்துக்காட்டுவது என்பது ஒருநாள் உலகக்கோப்பையை வெல்வதை விடவும் மிகவும் கடினம். ஆஸ்திரேலியாவுக்கே தண்ணி காட்டியாகிவிட்டது. தென் ஆப்பிரிக்காவையும் ஜெயித்துக்காட்டுவோம் என்கிற மன உறுதி இந்திய அணியிடம் தென்படுகிறது. சச்சின், திராவிட், லஷ்மண் ஆகிய மூவருக்கும் இதுதான் இறுதி தென் ஆப்பிரிக்கச் சுற்றுப் பயணம் என்பதால் அவர்களும் தங்களது திறமையை இன்னொரு முறை நிரூபித்துக்காட்டத் தயாராகிவிட்டார்கள்.

இதுவரை இரண்டு டெஸ்டுகளில் மட்டும்தான் தோல்வியைச் சந்தித்திருக்கிறார் கேப்டன் தோனி. சாம்பியன் லீக் தென் ஆப்பிரிக்காவில் நடந்ததால் அந்த ஊரின் வானிலையும் ஆடுகளமும் இந்திய அணிக்குப் புதிதல்ல. அதேசமயம், ஸ்டெயின், மார்கல் பந்துவீச்சுகளுக்குப் பதில் சொல்வதும் அத்தனை சுலபமில்லை. இதுவரை பேட்ஸ்மேன்களுக்கு ஏற்ற ஆடுகளத்தில் அதிக டெஸ்டுகள் ஆடிப் பழகிய இந்திய அணிக்கு, தென் ஆப்பிரிக்க ஆடுகளமும் அவர்களுடைய வேகப்பந்து வீச்சாளர்களும் மிகப்பெரிய சவாலை அளிக்கப் போகிறார்கள். மேலும், அணியின் முக்கிய வீரர்களுக்குக் காயம் ஏதும் ஏற்பட்டால் அத்தனை திட்டங்களும் தவிடுபொடியாகிவிடுகிற நிலையும் ஏற்படலாம்.

2006-2007ல் தென் ஆப்பிரிக்காவில் நடந்த டெஸ்ட் தொடரை 2-1 என்று தெ.ஆ. அணி ஜெயித்தது. அந்தத் தொடரில்தான் ஸ்ரீசாந்த் என்கிற இளம் வீரர் இந்திய அணியின் நட்சத்திரமாக விளங்கினார். அதற்கடுத்து ஆஸ்திரேலியாவுடனான தொடரில் இஷாந்த் சர்மா நட்சத்திரமானார். எப்போதும் அணியின் பலமாக இருப்பவர் ஜாகீர்கான். இவர்களைக் கொண்ட இந்திய அணியின் வேகப்பந்து வீச்சுதான் டெஸ்ட் தொடரின் மையப்புள்ளியாக இருக்கப்போகிறது. அவர்களுடைய வெற்றியில்தான் இந்திய அணியின் கௌரவமும் அடங்கியிருக்கிறது. இந்தத் தொடரை மட்டும் வென்றுவிட்டால் இனி இந்திய அணியைக் கை நீட்டிக் கேள்வி கேட்க யாரால் முடியும்?





களவாணி படத்தில் கதாநாயகன் விமல், கதாநாயகி ஓவியாவிடம், ''கொலுசுக்குள் வந்துவிடவா / நீ நடக்கையில் சத்தமிடவே / உன் பாதம் தீண்டிக் கிடப்பேனே உயிரே!'' என அநியாயத்துக்கும் வெள்ளியை விட மிக அதிகமாகவே உருகுவார்.

இப்படிக் கோடம்பாக்கத்துப் பாடல்களில் கொலுசுகளின் பயன்பாடு அதிகம். அந்தக் கொலுசு எங்கே... எப்படி உற்பத்தி ஆகுதுன்னு தெரிஞ்சுக்க வேணாமா?

இந்தியாவின் வெள்ளிக் கொலுசு உற்பத்தியில் பெரும்பங்கு, சேலம் செவ்வாய்ப்பேட்டைக்கும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களுக்கும்தான்!

செவ்வாய்ப்பேட்டை சேலம் மாநகரப் பகுதி. அதிலிருந்து சிவதாபுரம், பனங்காடு, வேடுகத்தான்பட்டி, பள்ளப்பட்டி, திருவாகவுண்டனூர் ஆகிய கிராமப்புறப் பகுதிகள் முழுவதுமாக நிறைந்துள்ளனர் வெள்ளி ஆபரணத் தொழிலாளர்கள். சுமார் இரண்டரை லட்சம் பேர், இத்தொழிலில் இயங்கி வருவதாகக் கூறப்படுகிறது. ''வெள்ளித் தொழிலுக்கு முழு வரிவிலக்கு அளித்தவர் எம்.ஜி.ஆர்.; அத்துடன் இதைக் குடிசைத் தொழிலாகவும் அறிவித்தார். அதனால்தான் இன்றுவரை எங்கள் பகுதியில் இத்தனை லட்சம் பேர் வெள்ளித் தொழிலில் ஈடுபட்டு வர முடிகிறது!'' என நன்றியுடன் நினைவு கூர்கிறார் தொழிலாளி ஒருவர்.

இந்தியா முழுமைக்குமான நகைக் கடைகளுக்கு இங்கிருந்துதான் வெள்ளி ஆபரணங்கள் உற்பத்தி செய்து எடுத்துச் செல்லப்படுகின்றன. கால் கொலுசு, கால் மெட்டி, அரைஞாண் கொடி, வெள்ளிப் பாத்திரங்கள் என அதனதன் தேவைக்கேற்ப வெள்ளிப் பொருட்கள் உற்பத்தியில் வெளுத்துக் கட்டுகிறது சேலம் செவ்வாய்ப்பேட்டை. வெள்ளிப் பட்டறை

● ரெங்கசாமி







களில் ஆண்களும் பெண்களுமாகக் கலந்து வேலை செய்து வருகின்றனர். அவர்களுக்குத் தினசரி குறைந்தபட்சமாக நூற்றைம்பது ரூபாயிலிருந்து இருநூற்றைம்பது ரூபாய் வரைக்குமாக வருவாய் கிடைக்கிறது.

வெள்ளி புரோக்கர்கள் நூறு பேர் இருக்கிறார்கள். வெள்ளி செயின் ஏஜெண்ட்டுகள் ஐந்நூறு பேர். வெள்ளியினை உருக்கிக் கட்டியாக மாற்றும் மெல்ட்டிங் பட்டறைகள் நானூறு உள்ளன. வெள்ளிக் கட்டிகளாக இங்கு வந்து குவிபவைகள், வெள்ளிப் பொருட்களாக உருமாற்றமாகி வெளியே செல்கின்றன. புரோக்கர், மெல்ட்டிங் பட்டறை, கம்பிப் பட்டறை, கொடி பின்னும் பட்டறை, சிறு தொழில் பட்டறை என வரிசையாக நகர்ந்து நகைகளாக, பொருட்களாக உற்பத்தியாகின்றன.

''தங்கத்துக்கு காரட். வெள்ளிக்கு மச்சம். மிகக் குறைந்தது நாற்பது மச்சம். மிக உயர்ந்தபட்சம் எண்பது மச்சம். 40-45-50-55-60-65-70-75-80 மச்சம் என வெள்ளியில் அதன் தரம் வரிசை கட்டி வைக்கப்பட்டுள்ளது. நாம் பெரும்பாலும் பயன்படுத்துவது எழுபது மச்ச வெள்ளியே. இங்கு எதுவும் பணமாகப் பெறுவதில்லை. அரசுக்குத் தீர்வை செலுத்தி வியாபாரிகள் வாயிலாக வெள்ளிக் கட்டிகள் இங்கு வருகின்றன. நாங்கள் செய்து தரும் மச்சத்திலிருந்து பத்து அல்லது பதினைந்து மச்சம் எங்களுக்குக் கூடுதலாகக் கிடைக்கும். அதுவே எங்களுக்குக் கூலியாகும். அதனை வெள்ளியாகவே பிரித்துக் கொள்கிறோம்!'' என்கிறார் வெள்ளி புரோக்கர் சங்கத் துணைத் தலைவர் ரெங்கசாமி.

வாசகர் யோசனை:
ராஜகுமாரி, சென்னை

வெளுத்துக் கட்டும் வெள்ளி!







''கல்யாண தரகர் ஏன் தலை தெறிக்க ஓடுறார்...?''

''எனக்கு அடக்கமா பொண்ணு இருக்கணும். இல்லனா அடக்கம் பண்ணிடுவேன்னு கபாலி சொன்னானாம்...''!



''மாடலா இருக்குற பெண்ணைப் பெண் பார்க்கப் போனது தப்பா போச்சு!''

''ஏங்க?''

''பேஷன் ஷோவில் அன்னநடை போட்றதுபோல் நடந்து வந்துருச்சி.''

ஒரு தடவைகூ



''மணி என்னங்க?''

''எல்லை...''

''உங்களுக்கா? எனக்கா?''

''எனக்குதான்! உன்னை மாதிரி ஆளுக் கிட்டலாம் பேசிட்டுருக்கேன்ல...''

- சராஎ.முரளி



''நம்ம வார்டன் ரஜினி ரசிகர் போலிருக்கு?''

''எப்படிச் சொல்றீங்க?''

''கைதிகளை எந்தர்ரா... எந்தர்ரா...னு 'எந்திரன்' ஸ்டைல்ல எழுப்புறார்...!

''ஆப்ரேஷன் பண்ணப் போன டாக்டர், என் ''ஆப்ரேஷனை நாளைக்கு செய்துடலாம்''னு சொல்லிட்டு வீட்டுக்குப் புறப் படறார்?

''டாக்டர் ஆப்ரேஷன் பண்ண போகும்போது பக்கத்துத் தெரு வுல இருந்து 'சங்கு ஊதற சத் தம்' கேட்டுச்சாம்.''

- எத்தாப்பூர் வி.நமசிவாயம்





டைவர்ஸ் பண்ணல!

''சினிமாத்துறையில ஐம்பது வருஷமா இருக்கீங்க... இந்த ஐம்பது வருஷத்துல நீங்க செய்த 'சாதனை' என்ன?''

''இந்த ஐம்பது வருஷமா ஒரு தடவைகூட டைவர்ஸ் பண்ணலை... இது சாதனை இல்லையா சார்!''

- எத்தாப்பூர் வி.நமசிவாயம்


'உங்கப்பா... கோழிப் பண்ணை வைத்துள்ளாரா?''

''எப்படி சார் சொன்னீங்க?''

''வரலாறு பேப்பர்ல 'கி.மு'ன்னு எழுதறதுக்குப் பதில் 'ஈ.மு'ன்னு எழுதி இருக்கியே!''

- கே.வெங்கடேசன்





''ஏண்டா மடையா... உனக்கு மண்டையிலே ஏறுதா?''

''ஏறுது சார்''

''என்ன ஏறுது''

''பேன் சார்?!''

- மனோபாலா

வில்லேஜ் மாணவர்களுக்கு வில்லங்கமா?

கிராமப்புறங்களில் படிக்கும் மாணவர்களின் அதிகபட்ச ஆசை ஐ.ஏ.எஸ். ஒவ்வொரு வருடமும் கிராமப்புற மாணவர்களும் கணிசமான அளவில் தேர்ச்சி பெற்று வருவது அவர்களை உற்சாகப்படுத்தி வருகிறது. ஆனால் இந்த ஆண்டு ஐ.ஏ.எஸ் தேர்வுமுறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இது கிராமப்புற மாணவர்களுக்கு மட்டுமல்ல, நகரத்தில் படிக்கும் மாணவர்களுக்கும் ஒரு பெரிய சவாலாக இருக்கப் போகிறது.

கடந்த ஆண்டுவரை முதல் நிலைத் தேர்வில் பொது அறிவுப் பாடமும் விருப்பப் பாடமும் இருந்து வந்தது. இனிவரும் ஆண்டுகளில் விருப்பப் பாடத்துக்குப் பதிலாக சிவில் சர்வீஸ் ஆப்டிடியூட் டெஸ்ட் (சிசாட்) என்கிற புதிய பாடம் இடம்பெறப் போகிறது. கணிதம், முடிவெடுக்கும் திறன் மட்டுமின்றி மாணவரின் ஆங்கில அறிவையும் பரிசோதிக்கும் வகையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஏற்கெனவே தேர்வுக்குத் தயாராகிவரும் மாணவர்களைப் பெரும்

சிலபஸ் மாறிடுச்சு சிவில் சர்வீஸுக்கு!





ஓ.பி.சித்தார்த்

அதிர்ச்சிக்கும் குழப்பத்துக்கும் ஆளாக்கியுள்ளது இத்தேர்வுமுறை. இனிமேல் அவர்கள் புதிய தேர்வு முறைக்குத் தகுந்தவாறு தங்களை எப்படித் தயார் செய்துகொள்வது? இந்தக் கேள்வியோடு சென்னை அண்ணாநகரில் உள்ள சினெர்ஜி ஐ.ஏ.எஸ். பயிற்சி மையத்தின் இயக்குனர் ஓ.பி.சித்தார்த்தைச் சந்தித்தோம். அவர் அளித்த பதில்கள் இதோ...

“சிசாட் தேர்வுமுறை கண்டிப்பாக கிராமப்புற மாணவர்களுக்குப் பெரும் கஷ்டம்தான். ஆனால் அதற்காகப் பயந்து பின்வாங்குவது சரியானதல்ல. அவர்கள் இன்னும் கொஞ்சம் கூடுதலாக உழைக்க வேண்டும்.

முதலாவதாக முடிவெடுக்கும் திறனை அறியும் சோதனை. இதில் சொல்லப்பட்டுள்ள விஷயத்தைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொண்டால்தான் சரியான பதிலைத் தேர்ந்தெடுக்க முடியும். புரிவதில் சிக்கல் என்றால் கண்டிப்பாக எடுக்கப்படும் முடிவு தவறாகும். எனவே இவ்வகையான வினாக்களுக்கு ஆங்கில வாக்கியங்களைப் படிக்கும்போது சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் சரியான பொருள் அறிந்துகொள்ளும் திறன் கைவரப் பெற வேண்டும்.

அகராதிகளைப் படிப்பது அவசியம் என்றாலும் தொடர்ந்து ஆங்கில தினசரிகள், ஆங்கிலத்தில் வெளிவரும் பொழுதுபோக்கு நாவல்களைப் படிப்பதன் மூலம் இந்தத் திறனை வளர்த்துக்கொள்ள முடியும். தினசரிகளைப் படிப்பதால் வார்த்தைகள் அறிமுகமாவதைப் போலவே, நாவல்கள் படிப்பதால் வாக்கிய அமைப்பு மனத்தில் இயல்பாக அமையும்.

அடுத்தது கணக்கு. இதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவே முடியாது. பாடநூல்களில் உள்ள கணக்குகளும் அவற்றுக்கான சூத்திரங்களையும் நினைவில் வைத்திருப்பது முக்கியம். தகவல்களைப் படிப்பதுபோல மேலோட்டமாகப் படித்து நினைவில் வைத்துக் கொள்ள முயலக் கூடாது. நுனிப்புல் மேய்ச்சல் தேர்வின்போது ஏமாற்றிவிடும். எனவே தொடர்ந்த





ஆங்கிலமும், கணக்கும் ஐ.ஏ.எஸ். ஆவதற்கு அவசியம்.

பயிற்சிகள்தான் இவ்வகை வினாக்களை எதிர்கொள்ள உதவும். முறையான பயிற்சி இருந்தால் இவ்வகை வினாக்கள் மிக எளிதாக அதிக மதிப்பெண்களையும் பெற்றுத் தரும்.

மூன்றாவதாக ஆப்டிடியூட் என்கிற திறனறியும் வினாக்கள். இவை புள்ளியியல் பற்றிய சரியான புரிதலும் தொடர்ந்த பயிற்சியும் இருந்தால் மிக எளிதாக மதிப்பெண்களைப் பெற்றுத் தரும். இல்லையேல் தலைகுப்புற கவிழ்த்துவிடும்'' என்கிறவர், ''புதிய தேர்வு முறையில் கிராமப்புற மாணவர்களைப் பயமுறுத்தும் இந்த விஷயங்கள் தொடர்ந்த பயிற்சியையும் உழைப்பையும் கோருபவை என்பதுதான் உண்மை. கடந்த ஆண்டுகளில் தேர்வான மாணவர்களிடம் காணப்பட்ட குறைகளைக் களைவதற்காகத்தான் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசின் உயர் பதவியை வகிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தால் இந்தத் திறன்கள் இருக்க வேண்டியது மிக முக்கியம்'' என்கிறார்.

கணிதத்தை ஒரு பாடமாக எடுத்துப் படிக்காத மாணவர்களும் இந்தத் தேர்வு முறையால் பயம்கொள்ள வேண்டியதில்லை. தொடர்ந்த உழைப்பு ஒன்றே இதற்காக நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம்.

அதேவேளையில் இவ்வகையான தேர்வு முறைகளைக் கணக்கில்கொண்டு பள்ளி நாட்களிலிருந்தே அவர்களைத் தயார்படுத்த வேண்டும். பெற்றோர்கள், பள்ளி ஆசிரியர்கள் ஆகியவர்களோடு மாநில அரசும் இவ் விஷயத்தில் அக்கறை செலுத்த வேண்டும்.


- ஸாந்த்



சந்தோஷம்

மனிதனாகப் பிறந்தவனுக்கு எவ்வளவோ பாக்கியங்கள் உண்டு. எல்லா பாக்கியங்களுக்கும் மேலான பாக்கியம் பிறருக்குச் சேவை செய்வதே.

'சேவை' என்று தெரியாமலே அவரவரும் தமது குடும்பத்துக்காகச் சேவை செய்கிறோம். அதோடு நமக்குச் சம்பந்தமில்லாத குடும்பத்துக்கு, ஊருக்கு, நாட்டுக்கு, சர்வ தேசத்துக்கும் நம்மால் முடிந்த சேவையைச் செய்ய வேண்டும் என்கிறேன். நமக்கு எத்தனையோ கஷ்டங்கள், உத்தியோகத்தில் தொந்தரவு, சாப்பாட்டுக்கு அவஸ்தை, வீட்டுக் கவலை - இத்யாதி இருக்கின்றன. நாம் சொந்தக் கஷ்டத்துக்கு நடுவில், சமூக சேவை வேறா என்று எண்ணக்கூடாது. உலகத்துக்குச் சேவை செய்வதாலேயே சொந்தக் கஷ்டத்தை மறக்க வழி உண்டாகும். அதோடு கூட 'அசலார் குழந்தைக்குப் பாலூட்டினால், தன் குழந்தை தானே வளரும்' என்றபடி, நம்முடைய பரோபகாரத்தின் பலனாக பகவான் நிச்சயமாக நம்மைச் சொந்தக் கஷ்டத்திலிருந்து கைதூக்கி விடுவான். ஆனால் இப்படி ஒரு லாப நஷ்ட வியாபாரமாக நினைக்காமல், பிறர் கஷ்டத்தைத் தீர்க்க நம்மாலானதைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும். ஆரம்பித்து விட்டால் போதும். அதனால் பிறத்தியான் பெறுகிற பலன் ஒரு பக்கம் இருக்கட்டும்! நமக்கே ஒரு சித்த சுத்தியும், ஆத்ம திருப்தியும், சந்தோஷமும் ஏற்பட்டு அந்த வழியில் மேலும் மேலும் செல்வோம்.



நம்மைப் போலவே சேவை செய்ய விருப்பம் உள்ளவர்களை எல்லாம் சேர்த்துக் கொண்டு எல்லோரும் ஒரே சங்கமாக ஒரே அபிப்ராயமக இருந்து கொண்டு சேவை செய்வது சிலாக்கியம். அப்படிப் பலர் கூடிச் செய்யும்போது நிறையப் பணி செய்ய முடியும். சத்தியத்தாலும் நியமத்தாலும் இப்படிப்பட்ட சங்கங்கள் உடையாமல் காக்க வேண்டும்.

பொழுதுபோக்கு என்று ருசியாகத் தின்கிற இடத்திலும் கண்களைக் கவர்கிற காட்சி சாலைகளிலும் பொழுதை வீணாக்குவது தவறு. இந்தப் பொழுதைப் பிறருக்குச் சேவை செய்வதில் செலவழிக்க வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

எல்லாத் தூசையும் எரித்து
எழுகிறது ஒரு தீ
எல்லா வெயிலுக்கும்
மத்தியில் மலர்கிறது ஒரு பூ

- தாரா கணேசன்



வே.எழிலரசு

ராஜராஜ சோழனால் கட்டப்பட்டு ஆயிரம் வருட வரலாற்றுப் பெருமை கொண்ட குகானந்தீஸ்வரர் கோயில் செல்லும் வழியில் இருந்த புரோட்டா கடை வாசலில் பைக்கை நிறுத்தச் சொன்னார் ஃபாதர் நவமணி ஆபிரகாம்.

சோடியம் வேப்பர் விளக்கு வெளிச்சத்தில், வந்து நின்ற புல்லட்டைப் பார்த்து, 'கல்லா' எதிரில் அமர்ந்து இருந்த ஆறுமுகம் எழுந்து தன் பெருத்த தொந்தி குலுங்க படிகள் இறங்கி ஓடி வந்தார்.

11




''ஸ்தோத்திரம் ஃபாதர்.''

ஃபாதர் புன்னகைத்தவாறு ஆறுமுகத்தின் தோள்மீது கை வைத்தார்.

''ஆறுமுகம்! இவரு என் ஃபிரெண்ட் உதயகுமார்.''

ஆறுமுகம் வணக்கம் சொன்னார். பதில் வணக்கம் சொன்ன உதயகுமாருக்கு ஆறுமுகத்தின் நெற்றியில் அச்சு பிசகாமல் பளீரிட்ட மூன்று வரி விபூதிப் பட்டையோ, ஃபாதர் தம்மை நண்பன் என்று அறிமுகப்படுத்தியதோ ஆச்சர்யத்தை ஏற்படுத்தவில்லை. ஃபாதர் எப்பொழுதுமே அப்படித்தான். தமது மாணவன் என்று உதயகுமாரை எப்போதுமே சொன்னதில்லை. தம்மை ஃபாதர் 'தமது நண்பன்' என்று பிரகடனப்படுத்திய அந்த நாளை உதயகுமார் நினைத்துப் பார்த்தான்.

புனித சவேரியார் பள்ளியின் தலைமையாசிரியர் ஃபாதர் நவமணி ஆபிரகாம் பள்ளிக்கட்டடத்தின் காரிடாரில் நடக்கும் பொழுது வகுப்பறைகள் பக்கம் திரும்பிப் பார்க்கமாட்டார். ஆனால் அவரின் கனத்த பூட்சுகள் எழுப்பும் காலடி ஓசையும், நடையில் மிளிரும் கம்பீரமும் வகுப்பின்



ஆசிரியரையும் மாணவர்களையும் துல்லிய மாக எடைபோடும். ஒழுங்கின்மை ஏதாவது நிகழ்ந்தால் அந்த வகுப்பின் உள்ளே நுழை வார்.

அன்று அவருக்கு ஆச்சர்யமாக இருந் தது. எல்லா வகுப்புகளிலும் பாடம் நடந்து கொண்டிருக்க, ஒரு மாணவன் வகுப்பைப் புறக்கணித்துவிட்டு தண்ணீர் மேடைய ருகே நின்று கொண்டிருந்தான்.

தண்ணீர் மேடையில் பத்து சிங்க முகப் பானைகள். ஃபாதர் அதற்கு முந்தைய வரு டம் பேராயர் ஒருவருக்கு நடந்த விழா ஒன் றுக்காக டில்லி சென்றபோது, தன் சொந்த கைக்காசில் தான் பணி புரியும் பள்ளிக்காக ஆசை ஆசையாய் வாங்கி வந்த பானைகள்.

வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த அந்த பானைகளில் மூன்றாவது பானையருகே ஒரு சின்னப் பையன் நின்றுகொண்டு ஏதோ செய்து கொண்டிருந்தான்.

தமது அங்கியை மெல்லத் தூக்கிப் பிடித்தபடி, ஒரு பூனையைப் போல நடந் தார். தண்ணீர் மேடையருகே சென்று கவ னித்தார். அந்தப் பையன் ஒரு சின்னக் காகி தத்தில் தமது எச்சிலைத் தடவி மூன்றாவது பானை மீது ஒட்டிக் கொண்டிருந்தான். அந்தத் தாளில் பென்சிலால் 'குடிக்காதே' என்று எழுதப்பட்டிருந்தது.

''என்ன செய்யற?'' ஃபாதர் அதட்ட லாகக் கேட்டார்.

''இந்தப் பானையில் சிலந்தி விழுந்து டிச்சு. அதான் யாரும் குடிக்காதீங்க-ன்னு எழுதறேன்.''

''எந்த கிளாஸ் நீ?''

''பர்ஸ்ட் ஸ்டாண்டர்ட் 'ஏ' ''

''பேரு?''

''உதயகுமார்.''

உதயகுமார் ஃபாதரின் பக்கத்தில் வந்து நின்று பானையைப் பார்த்தான்.

''அச்சச்சோ பென்சில்ல எழுதுனதால சரியா தெரியலையே...'' முகவாயில் விரல் வைத்து யோசித்தான். ''ஆங் ஐடியா... நான் ஸ்கெட்ச் பென் எடுத்துட்டு வர்றேன். அது வரையும் யாரும் இந்தத் தண்ணிய குடிச்சுடாம நீங்கதான் காவல் காக்க ணும்...'' உதயகுமார், தமது டிரௌசரைப் பிடித்தபடி ஓடினான். அவன் திரும்பி வரும் வரை ஃபாதர் பானைகளுக்குக் காவல் காத்து நின்று கொண்டிருந்தார். மறுநாள் அசெம்பிளியில் உதயகுமாரை ஒரு மேடை மீது நிறுத்தி வைத்து ஃபாதர் சொன்னார்: ''இவர் என் நண்பர் உதயகுமார்.''

ஃபாதர் தமது கையில் எடுத்த செல் ஃபோனைப் பார்த்தபடி,



''ஆறுமுகம்... ஆனந்த் கோயிலதானே இருப்பான்?'' என்று கேட்டார்.

''ஆமா ஃபாதர்...''

''உதய் நீ ஆறுமுகம் கூடப் போ. நான் பக்கத்துல... பண்டிட் வேதாச்சாரியைப் பார்த்துட்டு வந்துடறன். ''

ஃபாதர் எதிர்பட்ட ஆட்டோவில் ஏறிக் கொண்டார்.

ஃபாதர் திடீரென்று வேறு வேலை யாகச் சென்று விடுகிறாரே. ஏன்? ஆனந்த், சிவன் கோயிலின் உள்ளே இருக்கிறான். கோயிலுக்குள் செல்வது உசிதமல்ல என்று கருதியிருப்பாரோ? ஃபாதர் அப்படிப்பட் டவர் இல்லையே.

ஒருவேளை ஆனந்தைப் பற்றியதொரு விரிவான சித்திரத்தைத் தம்மிடம் உரு

வாக்கிவிட்டதைப் போல ஆனந்திடமும் என்னைப் பற்றி எல்லாவற்றையும் சொல்லி யிருப்பாரோ? இருக்கும்.

ஆனந்த் என்னைப் போலவே பிறப்பினா லும் நம்பிக்கையினாலும் இந்துவாகவே இருப்பவன். ஒரே மதத்தைச் சேர்ந்த இரு வர், தங்கள் வாழ்வுப் பயணத்தில் தோழ மையோடு நெடுந்தொலைவு பயணிக்க வேண்டியவர்கள் முதன்முதலில் சந்தித்துக் கொள்ளும் பொழுது அவர்களின் நம்பிக் கைகளின் அடிப்படைச் சாரமாகத் திகழ் கின்ற கோயில்களில் சந்திப்பதே பொருத்த மாக இருக்கும் என்று ஃபாதர் சிந்தித்திருப் பாரோ?

''சார் இங்கேயே வண்டியை நிறுத்திக் கலாம்.''

ஆறுமுகம் சொன்ன இடத்திலேயே புல்லட்டை நிறுத்திப் பூட்டிய உதயகுமார், அவரைப் பின் தொடர்ந்து கோயிலுக்குப் போனான். வெளிப்பிராகாரத்தில் அங்கங்கே சிலர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

வயதான நான்கு பெரியவர்கள் குழு வாக அமர்ந்து எதையோ விவாதித்துக் கொண்டிருக்க, அவர்கள் அருகே அமர்ந்து கொண்டிருந்த ஆனந்த் திரும்பிப் பார்த்தான். எழுந்து தங்களை நோக்கி வந்த ஆனந்திடம், ''இவர்'' என்று ஆறுமுகம் ஆரம்பிக்க, ''தெரி யுமே உதயகுமார் சார்தானே'' என்றான்.

சேலம் துக்கடா!

ஏற்காடு மலையில் 'லேடிஸ் சீட்' என்ற 'வியூ'வில் இருந்து பார்த்தால், இரவில் சேலம் நகரம் மின்னொளியில் ஜொலிப்பதை ரசிக்கலாம். தமிழ்நாட்டில் கோதுமை விளையும் ஒரே இடம் ஏற்காடு.

– கவின் டோனி மார்ஷ், மதுரை

''சார் மோர்ல்லாம் வேணா. என்னை நீ உதய்-ன்னே கூப்பிடலாம்.''

ஆனந்த் தயக்கமாகத் தலையாட்டினான்.

''சரி. சாமி கும்பிட வந்த நீ இவ்ள நேரம் என்ன பண்ற?''

ஆனந்த் தான் இத்தனை நேரம் அமர்ந் திருந்த இடத்தருகே இருந்த அந்த முதிய வர்களைக் காட்டினான்.

''அதோ அந்த நாலு பேரும் பிரெண்ட்ஸ். அவுங்க படிச்ச, படிக்கிற விஷயங்களை இங்கதான் பரிமாறிக்குவாங்க. சுவாரஸ்ய மாக இருக்கும் வந்துடுவேன்.''

கோயிலுக்கு வெளியே வந்ததும் ''சார் நான் ஆட்டோ புடிச்சுப் போயிடறன்'' என்ற ஆறுமுகத்திடம், ''இருங்க நான் டிராப் பண்றேன்'' என்றான் உதயகுமார்.

''இல்லைங்க சார். உங்களுக்குள்ள பேசறதுக்கு முக்கியமான விஷயம் இருக் குது-ன்னு ஃபாதர் சொன்னார்.''

உதயகுமாருக்குத் தெளிவாகிவிட்டது. நானும் ஆனந்தும் தனியாகச் சந்தித்து உரையாட வேண்டும் என்பதுதான் ஃபாதர் விருப்பம்.

கோயில் வாசலில் நின்றிருந்த மகிழ மரத்தடியில் கொட்டப்பட்டிருந்த மணல் மேட்டில் அமர்ந்தான் உதயகுமார். ஆனந் தும் பக்கத்தில் அமர்ந்தான். கோயிலி லிருந்து ஒவ்வொருவராக வெளியேற மூடப்படும் அந்தப் பெருங்கதவையே பார்த்துக் கொண்டிருந்தனர் இருவரும்.

''ஆனந்த் உனக்கு ஃபாதர் எப்படி அறிமுகம்?''

''போன வருஷம் லீபனோன்புரம் சர்ச் சுல இருந்தப்போ சம்மர் ஹாலிடேஸ்ல சண்டே கிளாஸ் நடத்துனாரு. அதுக்குப் போனேன். நான் ஒரு சண்டேவைக் கூட மிஸ் பண்ணதில்லை.''

''......................''

''நான் சண்டே கிளாஸுக்குத் தவறாம போனதுக்குக் காரணம் எங்க குடிசையில டி.வி.கிடையாது. அப்புறம் பைபிள்

கிளாஸ் முடிஞ்சதும் ஃபாதர் ரெண்டு ஸ்பெஷல் பன்னும் ரெண்டு பேயன் பழமும் கொடுப்பாரு...''

ஆனந்த் அந்தத் தகவலைக் கொஞ்சமும் சுய பச்சாதாப உணர்வு தோன்றிவிடாத எச்சரிக்கையோடு, அதை ஒரு நகைச்சுவைப் போலச் சொன்னான். ஆனாலும் உதயகுமாருக்கு வலித்தது.

''பைபிள் வசனங்களை மனப்பாடமா சொல்லுவேன். ஃபாதருக்கு ரொம்ப ஆச்சர்யம். 'ஆனந்த் உனக்கு நல்ல ஞாபக சக்திடா'ன்னு சொல்லி எக்ஸ்ட்ரா ரெண்டு பன் கொடுப்பார்'' சொல்லிவிட்டுச் சத்தமாகச் சிரித்தான் ஆனந்த்.

பேச்சின் போக்கினை மாற்ற எண்ணிய உதயகுமார், ''உன்னை சென்னைக்கு அழைச்சுட்டு போகச் சொல்றாரே ஃபாதர். வருவியா?''

''மேல படிக்கறதுக்குத்தானே?''

''ஆமா.''

''இங்க நாகர்கோயில்லயோ, திருநெல்வேலியிலோ படிக்க முடியாதா?''

''சென்னையில் படிச்சா உன்னோட திறமைக்கெல்லாம் நல்ல எக்ஸ் போஷர் கிடைக்கும்னு ஃபாதர் நம்புறார்'' - ஆனந்த் பதில் சொல்லாமல் உதயகுமாரைப் பார்த்தான்.

''அதில்லை உண்மையான காரணம்.''

உதயகுமார், ஆனந்த் மூலம் ஏதோ ஒரு மர்ம முடிச்சு அவிழ்கிறது. ஆர்வத்தோடு ஆனந்தைப் பார்த்தான்.

''ஃபாதர் பொய் சொல்றார்.''

''என்னது. ஃபாதர் பொய் சொல்றாரா?'' உதயகுமார் பதற்றத்துடன் கேட்டான்.

''சரி, நான் என்னைத் திருத்திக்கறேன். பொய் சொல்றாருன்னு சொல்றதைவிட நிஜம் சொல்றதைத் தவிர்க்கிறாரு-ன்னு சொல்லலாம்.''

''நீ என்ன சொல்ற எனக்குப் புரியலியே?''

''எங்கப்பா கடலுக்குள்ள போனப்ப புயல்ல மாட்டிக்கிட்டு செத்துட்டாரு-ன்னு சொல்லியிருப்பாரே...''

''ஆமா...''

''அது உண்மை இல்லை.''

''அப்ப, உங்க அப்பா... எப்படி...?''

''எங்க அப்பாவைக் கொன்னுட்டாங்க.''

சலனம் ஏதுமின்றிச் சொல்வதுபோலச் சொற்களை உதிர்த்தாலும் ஆனந்தின் உதடுகள் அதிர்ந்து கொண்டிருப்பதையும், தம்மைப் பார்ப்பதைத் தவிர்த்து வானத்தைப் பார்த்த ஆனந்தின் கண்களில் நிலா மிதப்பதையும் உதயகுமாரால் பார்க்க முடிந்தது.

''யாரு?''

ஆனந்த் சொன்ன பதில் உதயகுமாரை அதிர வைத்தது. அந்தத் தகவலின் பின்னோட்டமாக, ஃபாதரின் நிலைப்பாடு பற்றிச் சொன்னதில் ஃபாதரின் காருண்யம் மிக்கப் பொறுப்புணர்வைப் புரிந்துகொள்ள முடிந்தது.

எப்படியும் ஃபாதரின் விருப்பத்தை நிறைவேற்றியேயாக வேண்டும் என்று உதயகுமார் தமக்குள் சொல்லிக்கொண்டான்.

- தொடரும்

சேலம் துக்கடா!



எல்லா ஊரிலும் இரயில் நிலையங்களில் முதல் பிளாட்பாரம் படுபிஸியாக இருப்பதை காண முடியும். ஆனால் சேலத்தில் முதல் பிளாட்பாரம் உப்புக்கு சப்பாணி போல. 2 மற்றும் 3வது பிளாட்பாரங்களே எப்போதும் பரபரப்பாக இருக்கும்.

- கவின் டோனி மார்ஷ், மதுரை



சேலம்

மாவட்ட ஸ்பெஷல்

ஊத்துமலையின் உறைவன்!

மலைகள் நிறைந்த மாவட்டம் சேலம். அதில் ஒரு மலை ஊத்துமலை. அது என்ன ஊத்துமலை? மலைப் பிரதேசம் எங்கிலுமாக ஒரு காலத்தில் தண்ணீர் ஊற்றுகள் நிறைய இருந்துள்ளன. அதனால் ஊற்றுமலை என்றிருந்தது. சொல் வழக்கில் ஊத்துமலை ஆகிப்போனது. இப்பொழுதும் ஊற்றுகள் இருக்கின்றன. அதில் ஆழ்குழாய் அமைத்து, தண்ணீர் பெறப்படுகிறது. அந்தத் தண்ணீர், கோயிலுக்கும் பக்தர்களுக்கும் கோயில் திருமண மண்டபத்துக்கும் பயன்பட்டு வருகிறது. தற்போதும் ஏழெட்டு இடங்களில் ஊற்றுகள் உள்ளன. இந்த மலையை சேலத்திலிருந்து தெற்கு நோக்கிப் பார்க்கும் போது, மலை மீது ஊற்றுக்களாகத் தெரியும். திருச்சி சாலையிலிருந்து பார்க்கும்போது அதன் தலை மட்டுமே தெரியும். இந்த மலையே சேலம் மாவட்டத்தின் இதர மலைகளுக்கு மூலமான ஆதார மலை.







ஊத்துமலையில் குடிகொண்டிருப்பவர் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி. அதாவது தலமலை முருகன். எழுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட கோயில் எனச் சொல்லப்படுகிறது. பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்டு, நாயக்க மன்னர்களால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

மூலவர் பாலசுப்பிரமணியர், மயில் வாகனம், பலி பீடம், இடும்பன் சிலை... இவை நான்குமே போகரால் வடிவமைக்கப் பட்டவையாம். கபிலர் குடில் ஒன்றும் உள்ளது. ஊத்து மலை சித்தர்கள் உலவிய பூமி. அதனால்தானோ என்னவோ, இன்றளவும் எண்ணிலடங்கா பக்தர்களை ஈர்த்து வருகிறான் தலமலை முருகன். கந்த சஷ்டி திருவிழாவும், தைப்பூசமும், பங்குனி உத்திரமும் ஆலயத்தின் மிகச் சிறப்பான திருவிழாக்கள்.

வாசகர் யோசனை: **ராஜகுமாரி, சென்னை**



ஆஹா ஆல்பம்

சென்னையில் நடந்த உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் விருதளிப்பு விழாவுக்கு வந்திருந்தார் கவிஞர் வாலி. அறுவை சிகிச்சை முடிந்து ஒரு சில நாட்களே ஆகியிருந்த தளர்வான நிலையில் அமர்ந்திருந்த அவரிடம் ''நானும் விருது வாங்கப் போகிறேன் தங்களின் கையால்'' என்றேன். ''மகிழ்ச்சி'' என்றார். ''உங்களுடன் ஃபோட்டோ எடுத்துக் கொள்ள வேண்டுமே'' என்றேன். ''தாராளமாக'' என்றார். என் கேமராவை ஒரு நண்பரிடம் தந்து படம் எடுக்குமாறு கூறி விட்டு வாலிக்குப் பின்புறமாகப் போய் நின்றேன். எனக்கு இடப் புறம் மதுரை ராமநாதன் வந்து நின்றார். வலப்புறம் ஒருவர் வந்து நிற்க படம் கிளிக் ஆனது. நான் பாதுகாக்கும் படங்களில் சிறப்பிடம் இப்படத்துக்கு உண்டு.

– இரா. கல்யாணசுந்தரம், மதுரை.

'கானக்குயில்' பி.சுசீலாவுக்கு திருச்சி கலைப் பேரவை சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவா, பெரும் பாராட்டு விழாவை மார்ச் 15, 2009ல் திருச்சியில் நடத்தினார். நான் சிறு வயதிலிருந்தே சுசீலாவின் குரலுக்கு அடிமை. திருச்சி விமான நிலையச் சுகாதார அலுவலக ஊழியரான எனக்கு விமான நிலையத்தில் பி.சுசீலா அம்மாவை வரவேற்பதிலிருந்து ஒருநாள் முழுதும் அவருடனிருக்கும் வாய்ப்பு கிட்டியது. மறுநாள் அவரைக் காரைக்குடியிலுள்ள பிள்ளையார் பட்டிக்கு அழைத்துச் சென்றதும், அவர்கள் எனக்குப் பிள்ளையார் புகைப்படம் ஒன்றைப் பரிசளித்ததையும் என் பாக்கியமாய் கருதுகிறேன்.

– தனலெட்சுமி பாஸ்கரன், திருச்சி



நானும் என் கணவரும் தில்லிக்கு 1976ஆம் ஆண்டு சுற்றுப் பயணம் சென்றிருந்தோம். அப்போது முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியைச் சந்திக்க விரும்பி அவர் வீட்டுக்குச் சென்றோம். அவருடைய காரியதரிசியிடம் அவர்களைச் சந்திக்கும் நேரம் குறித்துக் கேட்டோம். எங்களைச் சற்று காக்க வைத்து, அவர் கையோடு இந்திரா காந்தியை அழைத்து வந்து விட்டார். எங்களுக்கு ஒரே இன்ப அதிர்ச்சி. அவர் எங்களிடம் பதினைந்து நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தார். தமிழகம் வரும்போது மீண்டும் உங்களைச் சந்திப்போம் என்றோம். சரி என்றார். ஆனால் விதி வேறு விதமாக விளையாடி அவர் மறைந்து விட்டார். எங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத சந்திப்பு இது.

- லலிதா சிவராமன், வேலூர்



ஃபோட்டோவுடன் இடம்பெறும் ஒவ்வொரு அனுபவத்துக்கும் பரிசு ரூ.50/-



"I believe the first test of a truly great man is his humility" என்று சொன்னார் John Ruskin. நானும் எனது குடும்பத்தினரும் சூர்யாவுடன் பழகிய இரண்டு மணி நேரத்தில் எனக்கு நினைவுக்கு வந்தது இந்த saying தான். அந்த விமானம் சென்னையிலிருந்து கிளம்பி முப்பது நிமிடங்களுக்குப் பின்தான், அதுவும் யாரோ ஒருவர் வந்து "Hello Surya" என்று சொன்னவுடன்தான் நான் உணர்ந்தேன், எனது பக்கத்தில் உட்கார்ந்திருப்பது நடிகர் சூர்யா என்று. பிறகுதான் நானும் அவரும் பேசிக்கொண்டே மும்பை வந்து சேர்ந்தோம். ''எங்கள் வீட்டுக்கு வருவீர்களா'' என்று சிறிது தயக்கமாக நான் கேட்க அடுத்த நிமிடமே, ''அதற்கென்ன, தாராளமாக... ஷூட்டிங் இருக்கிறது இரண்டு நாள் கழித்து வருகிறேன்'' என்றார். இரண்டு நாட்களில் எனக்கு ஃபோன் செய்தார். மும்பையில் எங்கள் வீட்டில் இரண்டு மணி நேரம் இருந்தார். பல விஷயங்களைப் பற்றிப் பேசினோம். அவருடைய humility எங்களை மிகவும் கவர்ந்தது.

- கே.ஆர். ராஜா, மும்பை

வசிஷ்ட நதிக்கரையில்...

சேலம் கருமந்துறை மலையிலிருந்தும், அறுநாத்து மலையிலிருந்தும் ஓடி வருகிற வசிஷ்ட நதிக்கு, தேவார திருவாசகக் காலங்களில் நிவா நதி என்று பெயர். விஜயநகர மன்னர்கள் ஆட்சிக்குப் பின்னர்தான் வசிஷ்ட நதி என்று வழங்கலாயிற்று. அதன் கரையினிலே வரிசையாக ஐந்து ஊர்களில் ஈசுவரன் கோயில் கொண்டுள்ள தலங்கள், வசிஷ்டாத்வத பஞ்சபூதத் தலங்கள். வாங்க வசிஷ்ட நதிக்கரையினிலே ஓர் ஆன்மிகப் பயணம் போகலாம்.



பேளூர் தான்தோன்றீஸ்வரர்

நிலம்...

✹ சேலம் - ஆத்தூர் சாலையில் வாழப்பாடியிலிருந்து வடக்கே நான்கு கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது பேளூர் ஈஸ்வரன் கோயில். இங்கு உறைந்திருக்கும் ஈஸ்வரன், தான் தோன்றீஸ்வரர். சுயம்பு மூர்த்தி. இங்கு பார்வதி தேவிக்குப் பெயர் அறம் வளர்த்த அம்மை! மகா விஷ்ணு, எட்டு திருக்கரங்களுடன் தனி சன்னிதியில் வீற்றிருக்கிறார். குமரக்கடவுள் தமக்கே உரித்தான ஆறு முகங்களுடன் விளங்குவது அற்புதக் காட்சி. பஞ்சபூதத் தலங்களுள் இது நிலம் சார்ந்தது.

நீர்...

✹ எத்தாப்பூர் சாம்பமூர்த்தீஸ்வரர் கோயில். இத்தலம் நீர் சார்ந்தது! சேலத்திலிருந்து நாற்பது கி.மீ. தொலைவில், மனோன்மணி



ஏத்தாப்பூர் சாம்பமூர்த்தீஸ்வரர் கோயில்



கூகையூர் பொன்பரப்பீஸ்வரர்

அம்மை சமேத சாம்ப மூர்த்தீஸ்வரர் திருக்கோயில். ஆனால், இங்கே முதல் பூஜை பெருமாளுக்கு. பின்னர்தான் ஈஸ்வர மூர்த்திக்கும் மனோன்மணிக்கும். ஏன்? இக்கோயில் கட்ட மண்ணைத் தோண்டிய போது பெருமாள் திருமேனிகள் கிடைத்துள்ளன. விஜய நகரப் பேரரசின் அமைச்சர், மன்னரின் அனுமதி பெறாமலேயே பெருமாளுக்கெனத் தனி சன்னிதி கட்டியுள்ளார். சாவடி ஒன்றிலும் சென்று தங்கியுள்ளார். இதனைக் கேள்விப்பட்ட மன்னன், அமைச்சரை அழைத்து முதலில் பெருமாளுக்குக் கும்பாபிஷேகம் செய்வித்துப் பின்னரே ஈஸ்வரனுக்குக் கும்பாபிஷேகம் செய்யுமாறு பணித்துள்ளார். அந்த நடைமுறை இப்போதும் தொடர்கிறது!

அக்னி...

* ஆத்தூர் நகரின் மையப்பகுதியில் சுழித்தோடும் வசிஷ்ட நதிக் கரையில் அமைந்துள்ளது காயநிர்மலேஸ்வர சுவாமி திருக்கோயில். பஞ்சபூதத் தலங்களில் அக்னி தலம் இது. சேலத்திலிருந்து ஐம்பத்தைந்து கி.மீ. தூரம். மைசூர் மன்னனின் பிரதிநிதி கெட்டி முதலி கட்டிய கோயில். அவர்தான் இந்த இறைவனுக்குக் காயநிர்மலேஸ்வரர் என்று பெயர் சூட்டியிருக்கிறார்! காயம் என்பது உடல், நிர்மலம் என்பது பரிசுத்தம். இங்கு உறையும் இறைவன் பரிசுத்தமான மேனியைப் பெற்றவர் என்பதற்குச் சான்றாக, சுவாமிக்குத் தைலக் காப்பிட்டு கற்பூர ஆரத்தி காட்டுகையில் அவரது மேனியில் கற்பூர ஜோதியின் ஒளி மிக அழகாகத் தெரிவதைத் தரிசிக்கலாம். திருக்கோயிலில் அமைந்துள்ள மூர்த்திகள் மிகவும் கலைத்திறன் வாய்ந்தவை. நேர்த்தியான முறையில் வடிவமைக்கப்பட்டு காண்போர் வியக்கும் வண்ணம்



மிக அழகுடன் காட்சியளிக் கின்றன.

காற்று...

✱ பஞ்சபூதத் தலங்களில் நான்காவது ஆறகளூர் அருள் மிகு காமனாதீஸ்வர சுவாமி திருக்கோயில். வாயுத் தலம். இறைவி பெரியநாயகி. ஆறகளூர் திருத்தலத்தில் ஈஸ்வரன் - ஈஸ்வரியைவிட கீர்த்தி மிக்கவராக அரு ளாட்சி செய்து வருபவர் காலபைரவர். அதுவும் அஷ்ட புஜ பைரவர்! திருக்கோயில் உள்ளேயே ஆங்காங்கு சன் னிதி கொண்டு அருள் பாலித்து வருகின்றனர்.





ஆறகளூர் காமனாதீஸ்வரர் சுவாமி திருக்கோயில் கந்தபுராணத்துக்கும் மூத்த தலம்.

✱ சிவனின் நெற்றிக்கண் பார்வையில் அழிந்துபோன மன்மதன், மீண்டும் உயிர் பெற்று உடல் கிடைத்ததான புராண வரலாற்றுச் சிறப்புமிக்கது. இது கந்தபுராணத்துக்கும் முருகனுக்கும் மூத்த தலம்! அதனாலேயே காமதேவன் இங்கு வந்து அஷ்ட பைரவர்களையும் மானசீகமாக பூஜை செய்துள் ளார். நவக்கிரகங்களின் கண்ட்ரோலர் பைரவர். அதிலும் சனி பகவானின் குரு இந்த பைரவர். குருவிடமே விண்ணப்பம் போட்டு விட்டால் அதனைத் தன் கட்டுப்பாட்டில் உள்ள கிர கங்களுக்கு சிபாரிசு செய்வார் என்பதால்தான்.

தேய்பிறை அஷ்டமி ஜாம கால பூஜைக்காக ஆயிரக் கணக்கில் பக்தர்கள் ஆறகளூ ருக்குப் படையெடுத்து வரு கின்றனர். இதற்கென இரவு நேரங்களில் சிறப்புப் பேருந்துகள் இயங்கி வருகின்றன.


ஆகாயம்...

✱ மூன்றாம் குலோத்துங்க சோழன் கட்டியது. கூகையூர் பொன்பரப்பிய ஈஸ்வரமுடைய நாயனார் கோயில். சுவர்ண புரீஸ்வரர் கோயில் என்கிற பெயரும் உண்டு. இறைவி பெரியநாயகி. ஐந்தாவது தலம். ஆகாயத்துக்குரியது. சேலத்திலிருந்து 84 கி.மீ. விழுப் புரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. வரலாற்று அறிஞர் நீலகண்ட சாஸ்திரிகள், 'தேதியிட்டு கட்டிய கோயில்.' கி.பி. 1181ஆம் ஆண்டு தை மாதம் கட்டப்பட்டதாகக் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது. கூகையூரில் மேலும் ஐந்து சிவன் கோயில்கள் அமைந்துள்ளன என்பது தனிச் சிறப்பு.

வசிஷ்ட நதி, பேளூர் - ஏத்தாப்பூர் - ஆத்தூர் - ஆறகளூர் - கூகையூர் வழியாகத் திட்டக்குடி அருகில் வெள்ளாற்றில் கலக்கிறது. வசிஷ்ட முனிவர் பிரதிஷ்டை செய்து வழிபட்ட இந்தப் பஞ்சபூதத் தலங்களுக்கு நீங்களும் ஒரு விசிட் அடித்து வரலாமே!

வாசகர் யோசனை :

இரா.கணேசன், சேலம்


Now on Sale
Bed Time Stories 365
Short Story Special!
Mobile Mania! -Viewpoint
Tooth Brush for Hippos! Naturally Healthy
GOKULAM
December 2010 Rs.10/- Only
THE Magazine for Children

மேஷம்



தொட்டது துலங்கும் நேரம் இது. தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறுவீர்கள். வெளியூர் பிரயாணம் செல்ல வேண்டி இருக்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகளால் மன சந்தோஷம் ஏற்படும். சுபகாரியப் பேச்சுவார்த்தை பலன் அளிக்கும். வழக்கு வெற்றி அளிக்கும். புதிய நவநாகரிகப் பொருட்கள் வாங்குவீர்கள்.

ரிஷபம்



குடும்பத்துல இருந்த கருத்து வேற்றுமை விலகும். யாரிடமும் வாக்குவாதம் வேண்டாம். கொடுக்கல் வாங்கலில் இருந்து வந்த சிக்கல் விலகி சுமூகமான நற்பலன் ஏற்படும். வரவேண்டிய நிலுவைகள் வந்து சேரும். பிரிந்து வாழ்ந்த தம்பதிகள் ஒன்று சேரும் சூழ்நிலை உருவாகும். ராகு / கேதுவை வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

மிதுனம்



உத்தியோகத்தில் பதவி உயர்வு ஏற்படும். வீடு மாற்றம் உண்டாகும். புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. சுபகாரியப் பேச்சுவார்த்தை பலன் அளிக்கும். மனைவியின் உடல்நிலை பாதிக்கும். குழந்தைகள் மூலம் சந்தோஷம் கிட்டும். வழக்கு வெற்றி பெறும். சனி / ராகு / கேதுவை வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

கடகம்



எதிலும் வெற்றி பெறும் சூழ்நிலை உருவாகும். தேர்வில் நல்ல மதிப்பெண்கள் கிட்டும். தந்தை மூலம் நல்ல செய்தி வந்து சேரும். திருமண காரியம் கைகூடும். வீடு /மனை வாங்க சிறந்த நேரம். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. அயல்நாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். வராத நிலுவைகள் வந்து சேரும். பரிகாரம் தேவையில்லை.

சிம்மம்



பண வசதி பெருகும். ஆரோக்கியம் பாதிக்காது. புதிய சொத்து சேரும். வீடு/ மனை வழியில் ஆதாயம் கிட்டும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். தூர தேச அழைப்பு வந்து சேரும். பூர்வீகச் சொத்து விற்பனை ஆகும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். ராகு/ கேது / குருவை வழிபட நன்மை தரும்.

கன்னி




மனமகிழ்ச்சி ஏற்படும். செலவுகள் பலன் உள்ளதாக இருக்கும். உடல் நிலையில் இருந்து வந்த தொல்லைகள் விலகும். கடன் பிரச்னை தீரும். நீண்ட கால வழக்கு முடிவுக்கு வரும். சத்ரு தொல்லை நீங்கும். இல்லற வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படும். நிலுவைகள் வசூலாகும். ராகு / கேது /சனியை வழிபட்டு வர தீமைகள் விலகும்.

28.11.2010 முதல்
04.12.2010 வரை

நடக்குமென்பார்;

துலாம்




உத்தியோகத்தில் இட மாற்றம் ஏற்படும். சுபகாரியப் பேச்சுவார்த்தை பலன் அளிக்கும். புண்ணிய ஸ்தலம் சென்று வழிபட்டு வருவீர்கள். கடவுளின் அனுகிரகம் கிட்டும். ஆரோக்கியம் சீராகும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். திருமணம் கைகூடும். சனி / குருவை வழிபாடு செய்து வர நற்பலன் அளிக்கும்.

விருச்சிகம்



தடைபட்டு வந்த திருமணக் காரியம் கைகூடும். குடும்ப வாழ்வில் இருந்து வந்த பிரச்னை தீரும். உறவினர், நண்பர்களிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமைகள் விலகும். குழந்தைகள் இடம் மாறிச் செல்வார்கள். தீர்க்க முடியாமல் இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். ராகு / கேதுவை வழிபட நன்மை உண்டாகும்.

தனுசு




உத்தியோகத்தில் இட மாற்றம் ஏற்படும். திருமணப் பேச்சுவார்த்தை பலன் அளிக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். செலவுகள் சுபமானதாக இருக்கும். குழந்தைகள் இடம் மாறிச் செல்வார்கள். சத்ரு தொல்லை விலகும். கணவன் - மனைவிக்குள் இருந்த வந்த மனக்கசப்பு விலகும். சனி / ராகு / கேதுவை வழிபட நன்மை உண்டாகும்.

மகரம்



மனதுக்குள் சந்தோஷம் மிகுந்து காணப்படும். புதிய வீடு / மனை வாங்க உகந்த நேரம். பொருளாதாரச் சிக்கல் ஏற்படாது. புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். சத்ரு தொல்லை இருக்காது. புதிய ஆண்டில் ஆபரணப் பொருட்கள் வாங்குவீர்கள். குழந்தைகள் இடம்மாறிப் போவார்கள். பரிகாரம் தேவை இல்லை.

கும்பம்



தனவிருத்தி உண்டாகும். வாக்குவன்மை மேலோங்கும். கல்வி வளம் மேலோங்கும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். குழந்தைகள் இடம்மாறிப் போவார்கள். கல்வி வளம் மேலோங்கும். உத்தியோகத்தில் இட மாற்றம் உண்டு. வழக்கு முடிவுக்கு வரும். சனிபகவானை வழிபட்டு வரவும்.

மீனம்



தொழில் துறையில் இடமாற்றம் உண்டாகும். கடன் சுமை குறையும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். வீடு மாற்றம் ஏற்படும். செலவுகள் பயன் உள்ளதாக இருக்கும். புதிய வேலை வாய்ப்புகள் தேடி வரும். நிலுவைகள் வசூலாகும். மன சஞ்சலம் தீரும். ராகு / கேது / சனி பகவானை வழிபட்டு வரவும்.

நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

கவிதை கஃபே

சற்றே நீண்டதொரு பயணத்தில்
முன்னிருக்கையில்
யாருடைய குழந்தையோ
பின்னிருக்கையில்
அமர்ந்திருந்த என்னிடம்
தலையாட்டி சிநேகம் கொண்டது

ஜன்னலுக்கு வெளியே
அலைந்த என் மனசு
மண்டியிட்டு ஏந்தியது
அந்த மாசற்ற நட்பை

இருக்கையில் இருந்தவாறே
குனிந்து ஒளிவதும்
எழுந்து குறுநகை முத்துகள்
உதிர்ப்பதுமாய்த் தொடர்ந்தன
அதன் திருவிளையாடல்கள்

எனக்கான நிறுத்தம் வந்ததும்
மெல்ல எழுந்தேன்
அந்தக் குட்டிக் கடவுளின்
விழிப்பறவை படபடத்து
உதிர்த்தன இறகுகளை
பேருந்து முழுதும்

- செழியரசு

குருணை அரிசியும்
கொறிக்க பாப்கார்னும்
குளிர்நீரும் வைத்தாலும்
பறந்து திரிந்து இரை தேடாமல்
பால்கனியில் எட்டிப் பார்ப்பதில்லை
இந்தச் சிட்டுக்குருவிகள் ஒருநாளும்

- நேயமுகில்

வாசகர்களே! உங்க க்யூட் கவிதைகளைச் சீக்கிரமா 'கவிதை கஃபே'ன்னு குறிப்பிட்டு அனுப்புங்க...
kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.



ஒரு ஹைக்கூவில்
என் காதலைச்
சொல்லிவிட்டு
உன்னால் முடியுமா...? என்கிறேன்.
சிரித்தபடி
சின்ன முத்தம்
வைத்துப்போகிறாய்

- ராசை. கண்மணிராசா

மருதாணி கைநிறைய
வைத்துவிட்டு
'சிவந்திருக்கிறதா?'
என நாணங்கள் பொங்கிட
கேட்டு நிற்கிறாய்.
'ம்' என்ற
ஒற்றைச் சொல்லில்
சிவப்பேறிக் கிடக்கிறது
நமது பிரியங்கள்

- வீ.சிவசங்கர்

மிகுந்த பிரயத்தனப்பட்டுக்
குழந்தையின்
அழுகையை அடக்கினேன்
பறவையொன்றின்
கரைச்சலைக் காட்டி

இங்கும் அங்குமென
பயத்துடன் விழித்த பறவை
படக்கென்று கொத்திச் சென்றது
இரையுடன் சேர்த்துக்
குழந்தையின் சிரிப்பையும்

- கவி மாயாவி



'கவிதை கஃபே' பகுதியில் இடம்பெறும் கவிதைகளுக்கு சன்மானம் உண்டு.



சேலம் மாவட்டத்தின் சுற்றுலாத் தலைநகரம் ஏற்காடு. கடல் மட்டத்திலிருந்து 5326 அடிகள் உயரத்திலிருக்கும் நடுத்தர வர்க்கத்தினரின் சொர்க்கம். மலைகளில் உலவும் மேகங்களும் பாதங்களில் பரவும் குளிர்ச்சியும் மழலையின் முத்தத்தைப் போல மனத்தை ஈரமாக்கக் கூடியவை. ஆனால், இந்த ஈரமும் தட்பவெப்பமும் இயற்கை வளமும் இன்னும் இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து இங்கு வரவிருக்கும் எதிர்காலச் சந்ததிகளுக்குக் கிடைக்குமா...? கேள்விக்குறிதான். ''கிழக்கு மலைத்தொடர்ச்சியின் ஒரு துண்டுதான் சேர்வராயன் மலை. அதன் ஈர்ப்பு மையம்தான் ஏற்காடு. ஆனால், சுடுகாடாகி விடுமோ என்று அச்சமாயிருக்குங்க'' என்கிறார் ஏற்காடுவாசியான பெருமாள். இவர் பெரியார் திராவிடர் கழகத்தின் சேலம் மாவட்டச் செயலாளர்.

''ஏற்காட்டை மிரட்டுற முக்கியமான பிரச்னையே மலையை உடைச்சி மால்கோ கம்பெனி பாக்ஸைட் தாதுக்காக மண் அள்ளுறதுதான் ஸார். சேர்வராயன் கோயிலுக்குப் பின்புறமுள்ள பகுதிகளை இந்தக் கம்பெனி முழுசா மொட்டை அடிச்சுடுச்சு. கேட்டா கவர்மெண்ட் பர்மிட்டோடதான் மண் அள்ளுறதா சொல்றாங்க. தொண்ணூற்றைந்து வருஷத்துக்கு ஒப்பந்தமாம். ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட 80 விருந்து 100 லோடு வரைக்கும் லாரியில மண் போகுதுங்க. பாக்ஸைட் தாது எடுத்ததுக்கு அப்புறமா அந்த மண்ணை சிமெண்ட் தொழிற்சாலைக்கு



இருக்குமா




ஏற்காட்டிலிருந்து ஒருநாளைக்கு 80லிருந்து 100 லோடு வரைக்கும் மலையை உடைத்து மண் எடுத்துப் போகிறார்கள்!

வித்துடறாங்க. மண் தோண்டி எடுக்கற இடத்துல இருக்குற மூலிகைகள் பத்தி அவங்க எந்தக் கவலையும் படுறதில்லை. இவங்க மலையை வெட்டி மண் எடுக்கற இடம் மஞ்சக்குட்டைப் பஞ்சாயத்து எல்லை யில இருக்கு. இந்தப் பஞ்சாயத்து சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாப்பதில் சிறப்பா செயல்படுதுன்னு பஞ்சாயத்துத் தலைவர் சம்பத்துக்கு (தி.மு.க.), குடியரசுத் தலைவர் விருதும் பாராட்டுப் பத்திரமும் கொடுத் திருக்கிறது கொடுமையிலும் கொடுமை ஸார். இவங்க இப்படின்னா கடுக்காமரம் என்கிற இடத்துல ஜெம் கிரானைட்ஸ்காரங்க மலையை, மலைமலையா உடைச்சி எடுத்துட்டுப் போறாங்க. இந்தக் கல்தான் சென்னை, கர்நாடகா, ஆந்திராவுக்கெல்லாம் போகுது. முன்பெல்லாம் ஒரு நாளைக்குப் பத்து லோடுகள் கிரானைட் கல் போகும். இப்போ அது நான்கு லோடா குறைஞ் சிருக்கு. காரணம், இனி மலையை உடைக் கக் கூடாதுங்கற நல்ல எண்ணமெல்லாம் கிடையாது. உடைக்கறதுக்கு அங்க கிரானைட் கற்கள் இல்லை'' என்கிற பெருமாள், வெளிமாநிலத்தவர்களாலும் ஏற்காடு ஏகத்துக்கும் பாதிக்கப்படுகிறது என்று வேதனைபடுகிறார்.

''ஏற்காட்டுல இப்போ ரியல் எஸ்டேட் பிஸினஸ்தான் கொடிகட்டிப் பறக்குது ஸார். ஸிட்டிக்குள்ள ஒரு சதுர அடி 750லிருந்து 1400 ரூபாய் வரைக்கும் போகுது. வெளிமாநிலப் பணக்காரர்கள் தங்களோட கறுப்புப் பணத்தை ஏற்காட்டுல உல்லாச பங்களா, எஸ்டேட்,





* பெருமாள்

ஏற்காடு?



ஹோட்டல்ன்னு இன்வெஸ்ட் பண்றாங்க. பங்களா கட்டி வாடகைக்கு விடறதுக்கு ஏற்காடு சமதள பூமி கிடையாதே! ஒரு பங்களா கட்டறதுக்குக் குறைஞ்சது ஐம்பது மரங்களாவது பலியாகுது. ஒரு மரத்தை வெட்டுன்னா நன்மைதரும் முந்நூறு வகையான பூச்சியினங்கள் அழிஞ்சிடறதா உயிரியலாளர்கள் கணக்குச் சொல்றாங்க. ஏற்காட்டுல நிலத்தை வாங்கறதுக்கும் விற்கறதுக்கும் பழங்குடியினர்களுக்கு மட்டும்தான் உரிமைன்னு சட்டமே இருக்கு. இருந்தும் என்ன பிரயோஜனம்? சேலத்துல இருக்குற மரத்தொழிற்சாலைகளுக்கு ஏற்காட்டு லேர்ந்துதான் மரங்கள் போகுது. காய்ஞ்சி கீழ விழற, காத்து அடிச்சி விழற மரங்களை ஒரு நாளைக்கு ரெண்டு லோடு மட்டும் கொண்டு போகத்தான் அனுமதி. ஆனா, தேவைக்கு அதிகமான மரங்களை வெட்டியே எடுத்துட்டுப் போறாங்க. வன இலாக்காவும் வாங்கறதை வாங்கிக்கிட்டு வழி ஏற்படுத்தித் தருது. பணப்பயிர் சவுக்கு இங்கே ஏகத்துக்கும் கொள்ளை போகுது. மாமரம், சுழி, நாகமரம்... அண்டை மாநிலத்துக்குக் கடத்தலாகவும் போகுது'' என்கிற பெருமாள், ''ஏற்காடு ஏரி, நோய் பரப்பும் கிடங்கு'' என்று அதிர வைக்கிறார்.



''ஏரி சவாரி செய்ய நல்லா இருந்தாலும், அதுல கலக்குற ஏற்காடு ஸிட்டியோட கழிவுகளால் கற்பிழந்து போச்சுங்க. இந்த ஏரி நிரம்பி வழியற தண்ணிதான் கிளியூர் ஃபால்ஸுக்குப் போகுது. அந்தத் தண்ணியைத்தான் பக்கத்திலிருக்கிற நாலு கிராம மக்கள் குடிக்கறாங்க. அதுக்கு அவங்களுக்குக் கிடைச்ச பரிசு முன்கழுத்துக் கழலை நோய். இப்போ சொல்லுங்க ஏற்காடு இன்னும் இருபத்தைஞ்சு வருஷம் வரைக்கும் இருக்குமா?''- கேள்வி கேட்கிறார் பெருமாள். பதில்தான் இல்லை!

வாசகர் யோசனை :
சுரேந்தர், ஏற்காடு





அமரர் கல்கி

அடடா... வண்டி நின்றுவிட்டதே!

புது வருஷம், என்னைப் பொறுத்தவரையில், புன்னகையுடனேதான் வந்திருக்கிறது. ஒரு நல்ல கிராமபோன் பிளேட், ஒரு நல்ல தமிழ் டாக்கி - இரண்டும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில்!

பிடில் வித்வான் ஸ்ரீமான் ராஜமாணிக்கம் பிள்ளை 'பிளேட்' கொடுத்திருக்கிறார் என்று கேள்விப்பட்டது முதல் அதைக் கேட்பதற்கு மிகவும் ஆவலாயிருந்தேன். அவர் எந்த வித்வானுக்குப் பக்கவாத்தியம் வாசித்தாலும், அந்தந்த வித்வானின் 'பாணி'யில் ஐக்யப்பட்டு வாசிக்கிறாரே, இவருக்கென்று தனியாக ஒரு 'பாணி' உண்டா, இல்லையா என்று பலமுறை எண்ணியிருக்கிறேன்.

தன்யாஸி ராக ஆலாபனமும், ''ஸங்கீத ஞானமு-பக்தி வினா'' என்னும் கீர்த்தனமும் இந்தப் பிளேட்டில் வாசித்திருக்கிறார். ''பிளேட் நன்றாக இருக்கிறது'' என்று சொல்வது வெறும் உபசார வார்த்தை போல் தொனிக்கிறதாகையால், அப்படி நான் சொல்லவில்லை. இந்தப் பிளேட்டை ஒரு தடவை கேட்டால், அப்புறம் ரொம்ப நேரம் அதன் இசை காதில் தொனித்துக் கொண்டே இருக்கும் என்று மட்டும் சொல்கிறேன்.

உயர்ந்த சங்கீதம் கேட்கும் போது இரண்டு வித அனுபவங்கள் ஏற்படுவதுண்டு. இளம் அலைகள் வீசும் ஏரியில் படகில் மிதந்து செல்வது போன்ற விச்ராந்தியான ஆனந்தம் சில சமயம் ஏற்படும். இடையில் நிற்காமல் அதிவேகமாகச் செல்லும் ரயிலிலோ, மோட்டாரிலோ பிரயாணம் செய்யும்போது ஏற்படும் உற்சாகமான சந்தோஷம் சில சமயம் உண்டாகும். ஸ்ரீமான் பிள்ளையின் இந்த இசைத் தட்டு, இரண்டாவது வகையைச் சேர்ந்தது. ஆரம்பத்திலேயே 'விறுவிறுப்பு'டன் ஆரம்பித்து, தங்கு தடையில்லாமல் சென்று, கடைசியில் வேகமான ரயில்கள் நிற்பது போலவே சட்டென்று நின்று, ''அடாடா! வண்டி நின்று விட்டதே! மறுபடி எப்போது புறப்படும்?'' என்று நம்மைத் திகைப்படையச் செய்து விடுகிறது.

ஸ்ரீமான் பிள்ளையின் சிஷ்யர் அவருடன் ஒத்து மந்தர ஸ்தாயியில் வெகு அழகாக வாசித்துக் கொண்டு வந்திருக்கிறார்.

இந்தப் பிளேட்டில் வாசித்திருக்கும் மோர்சிங் வித்வான் மட்டும் அவ்வளவு உற்சாகம் காட்டியிருக்க வேண்டியதில்லை. மோர்சிங் நல்ல வாத்தியந்தான். சுருதி கலையாமல் காத்து, வாய்ப்பாட்டிலுள்ள ஸ்வரக் குறைபாடுகளையெல்லாம் தெரியாமல் செய்து விடும் சக்தி அதற்கு உண்டு. ஆனால் இந்த இசைத் தட்டிலோ, அதுவே ஒரு குறைபாடாகிவிட்டது. ரொம்ப அதிகமான சத்தத்தைக் கிளப்பி, மிகவும் நயமான இடங்கள் சிலவற்றில், பிடிலின் நாதத்தையே மறைத்து மேலோங்கி விடுகிறது.

- ஆனந்தவிகடன்



திருமலை தியேட்டர்



எம்.ஆர்.சி. திருமுருகன்

கவிஞர் வைரமுத்துவின் வடுகப்பட்டிதான் எனக்கும் சொந்த ஊர். எனக்கு விவரம் தெரிந்த பருவத்தில், வடுகப்பட்டியில் திருமலை தியேட்டர் இருந்தது. அது திருமலை செட்டியாருக்குச் சொந்தமானது. சுற்றுப்பக்கத்துக் கிராமங்களுக்கும், திருமலை தியேட்டர் சினிமா காட்டும் போதிமரமாய் இருந்தது. ஊரில் எத்தனை தொலைக்காட்சிப் பெட்டிகள் இருக்கின்றன என்பதை விரல் விட்டு எண்ணிவிடலாம். தியேட்டரில் பகல் காட்சிகளைவிட இரவுக்காட்சிகளுக்கு மதிப்பு அதிகம். இரவு முதல் காட்சி திருமணம் என்றால், இரண்டாம் காட்சி முதலிரவைப் போன்று அந்தரங்க சந்தோஷத்தைத் தரக்கூடியது. இரண்டாம் காட்சிக்குக் கூட்டம் அலைமோதும். நான் சிறுவன் என்பதால் என்னை ஒத்த பிற சிறுவர்களைக் கூட்டிக் கொண்டு தியேட்டருக்குப் புறப்படுவேன். டிக்கெட் எடுத்து உள்ளே போக எங்களிடம் காசு இருக்காது. இரண்டாம் ஆட்டம் படம் தொடங்கியதும் தியேட்டரின் சுவரில் ஏறிக் குதித்து உள்ளே போய்விடுவோம். ஒருமுறைக்கு இருமுறை மாட்டிக் கொண்டதும் உண்டு. பழைய படங்கள்தான் அதிகமாக தியேட்டருக்கு வரும். அந்தப் படங்களின் ரசிகர்கள் டிக்கெட் கொடுக்கும் இடத்தில் இனிப்பு வழங்குவார்கள். அதைப் பொறுக்காத எதிர்க் கோஷ்டிகள் படம் ஓடிக் கொண்டிருக்கும்போது, தண்ணீர் பாம்பைக் கூட்டத்தில் விட்டுவிடுவார்கள். காலப்போக்கில் நானும் டிக்கெட் எடுத்துப் படம் பார்க்கத் தொடங்கினேன். கேபிள் முளைத்தது. தொலைக்காட்சிப் பெட்டிகள் அதிகமானது. திருமலை தியேட்டர் பொலிவிழந்து, எஸ்.ஆர்.எம். தியேட்டராக வேறு ஆளுக்குக் கைமாறியது. திருட்டு வி.சி.டி. வர ஆரம்பிக்க, எஸ்.ஆர்.எம். தியேட்டரும் படுத்துவிட்டது. தியேட்டரை விற்று, இடித்து, வீடுகளைக் கட்டிக் குடியேறிவிட்டார்கள். இப்போது அந்தப் பக்கம் நான் போவதில்லை. வேறு வழியில்லாமல் போக நேர்ந்தால், திருமலை தியேட்டரின் பிரும்மாண்டமும், படம் ஓடிக் கொண்டிருக்கும் சத்தமும், படம் பார்க்கும் மனித முகங்களும், என் சிறுவயது தோற்றமும் ஞாபகத்துக்கு வருகின்றன.

- எம்.ஆர்.சி. திருமுருகன், தேனி

வாசகர்களே! மண் மணம் மாறாத உங்கள் ஊர் பாசத்தை நெகிழ்வோடு 10 வரிகள் குறிப்புடன் 'ஜம்'முன்னு எழுதி அனுப்புங்க... உங்க ஃபோட்டோ மறந்திடாதீங்க.

சோற்றுடையன் வாய்க்கால்!

பசுமைப்போர்வை போர்த்திப் பார்க்கும் இடமெல்லாம் செழுமை உடைய தஞ்சைத் தரணியில் இருந்த பத்து கிலோ மீட்டர் தூரம் கொண்ட சற்றே ஒதுக்குப்புறமான நல்லிச்சேரி, நான் உருண்டு... புரண்டு... தவழ்ந்து... ஓடியாடி விளையாடிய ஒரு குக்கிராமம்.

பத்து வயது வரை நல்லிச்சேரி மின்சாரம் அறியாத இருண்ட கண்டம். ஆரம்பக் கல்வி திண்ணையில் உட்கார்ந்து 'நொக்கு' வாத்தியாரிடம் கல்வி கற்க, பாலமற்ற வாய்க்கால், வரப்புகள், சேறு சகதிகளில் காலணியற்ற பாதங்களால் தினமும் மூன்று கிலோ மீட்டர் நடைப் பயணம் அய்யம்பேட்டை பள்ளிக்கு.

கோணத்திடலில் சக நண்பர்களுடன் சண்டை வரும்போது மல்யுத்தம். 'இன்று இவனை நான் புரட்டியெடுத்தேன்' என வீரப்பிரதாபப் பேச்சு. கிராமத்தில் மெத்தப் படித்தவர்கள் நிறைய உண்டு. கிண்டலுக்கும் கேலிப் பேச்சுக்கும் குறைவில்லை. காலையில் வேதவிற்பன்னர்களின் மந்திர ஒலி. இடிந்த பெருமாள் கோயில் ஒளிந்து விளையாட மந்தக்கரையில், 'கிட்டிப்புல்' விளையாட்டு. இரட்டைக் குளத்திலும், ஒற்றைக்குளத்திலும் ஆடுமாடுகளுடன் நாங்களும் சேர்ந்து சமத்துவக் குளியல். கிராமத்தின் ஒரே திருவிழா 'சந்தானம்' என்று உச்சரிக்கப்படும், 'சப்த ஸ்தானம்'. பல்லக்கில் சிவபெருமான் ஏழு ஊர்கள் வலம் வருவது கண்கொள்ளாக் காட்சி.

கோடையில் எங்கள் 'பீச்' சோற்றுடையன் வாய்க்கால்தான். தண்ணீர் உள்ள காலத்தில் எங்கள் தாகம் தீர்த்து சோறு ஊட்டிய தாய். இரண்டு கைகளாலும், ஓடும் நீரை அள்ளிக் குடிப்பதில் உள்ள சுகமே அலாதி. அய்யம்பேட்டை சங்கும் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இரட்டைக்கண் மதகு கடக்கும் எட்டாம் நம்பர் டவுன் பஸ்ஸும் எங்களுக்கு நேரம் உணர்த்தும் கருவிகள். இன்று கிராமத்தில் எவ்வளவோ முன்னேற்றம். இருந்தாலும் அந்தக் கால அன்யோன்யமும், கிராமத்தனமும் எங்கே தொலைந்து போயிற்று?

- ஜி.ஸ்ரீதரன், சென்னை


ஜி.ஸ்ரீதரன்



சேலம்

மாவட்ட ஸ்பெஷல்

சேர்வராயன் மலையடிவாரத்தில் உருவாகிக்கொண்டு இருக்கிறது சேலத்தின் வேடந்தாங்கல். ஏற்காடு செல்லும் சாலையின் ஆறாவது கிலோமீட்டரில் கோபித்துக் கொண்டு போகும் குழந்தை போலச் செல்லும் மண்சாலை, கொண்டுபோய் விடுகிறது மூக்கனேரிக்கு. இது சேலம் மாவட்டத்தில் வெளிநாட்டுப் பறவைகளின் ஈர்ப்பு மையம். கிட்டத்தட்ட ஐம்பத்தெட்டு ஏக்கர் பரப்பளவு கொண்டது மூக்கனேரி. சேலத்தின் பிரதானமான குடிநீர் ஆதாரம்; நானூற்று ஐம்பத்து மூன்று ஏக்கர் விளைநிலங்களுக்கான பாசனநீர் கிடங்கு... இதெல்லாம் பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முந்தைய மூக்கனேரியின் பெருமைச் சித்திரம். இப்போ...?

ஏரியைச் சுற்றி உருவாகிவிட்ட குடியிருப்புகளும், ஆக்கிரமிப்புகளும் அதன் குரல்வளையைச் சுற்றி இறுக்கும் விஷக் கொடியாகப் படர்ந்திருக்கின்றன. இருப்பினும் மூக்கனேரி இன்னும் தம் தாய்மையை, ஈரத்தை இழக்கவில்லை என்பதற்குச் சான்றுதான் அன்னிய நாட்டுப் பறவைகளின் வருகை. மூக்கனேரி பாதுகாப்பை, பராமரிப்பை அரசின் அனுமதியோடு கையில் எடுத்திருக்கிறது சேலம் மக்கள் குழு... அதன் செய்தித் தொடர்பாளர் பியூஸ் சேத்தியா கொஞ்சம் ஆதங்கத்தோடே பேசினார்...

''காவிரி பாயுற சேலத்துல குடி தண்ணிக்குப் பஞ்சம் இருக்குன்னு சொன்னா நம்ப முடியுமா? ஆனா அதுதான் ஸார் உண்மை. 2009ல சேலத்துல பெஞ்ச மழையின் அளவு வெறும் 850 மி.மீட்டர்தான். கடந்த நூறு வருடங்கள்ல பெஞ்ச மழையின் அளவில் இதுதான் மிகக் குறைவு. காவிரிக் கரை ஓரமா இருக்கற இண்டஸ்ட்ரீயில மால்கோ, கெம்ப்ளாஸ்ட், ஜெண்ட் ஸ்டீல் ஒர்க்ஸ்... மட்டுமே பதிமூணு லட்சம் மக்களுக்கு வேண்டிய குடிநீரை எடுத்துக் கொள்கின்றன. சேலம் மாநகரத்துக்குள்ள ஓடற திருமணிமுத்தாறை சிமெண்ட் போட்டுப் பூசியாச்சு. அப்புறம் எப்படி இருக்கும் நிலத்தடி நீர்? அரசாங்கத்தைக் குறை சொல்லிக்கிட்டு இருக்கறதுக்குப் பதிலா மக்களே ஆக்‌ஷன்ல இறங்கினா என்னன்னு யோசிச்சப்பதான் சேலம் மக்கள் குழு உருவாச்சு'' என்கிறார்.



''தண்ணீரைத் தேடி ப்ராஜெக்ட் மூலமா மிகப் பெரிய மழைநீர் சேமிப்புக் கிடங்கா இருக்கற மூக்கனேரியைப் பராமரிக்க ஆரம்பிச்சோம். ஏரிக்குள்ளேயே பத்தடி உயரத்துக்கு 45 மண் திட்டுகளை உருவாக்கி அதுல பறவைகள் இளைப்பாற மரக் கன்றுகளை நட்டிருக்கோம். அது வேர் பிடிச்சி வளர்ந்து இன்னைக்குப் பறவைகள் சரணாலயமா உருவாகி இருக்கு. தோண்டி எடுத்த மண்ணால் ஏரியின் ஆழம் அதிகமாகி இன்னும் பத்து லட்சம் லிட்டர் தண்ணீர் அதிகமா சேகரமாகுது. தோண்டி எடுக்கப்பட்டது எல்லாம் களிமண்ணுங்கறதால ஏரியைச் சுத்தி ஏழு கிலோமீட்டருக்கு நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்திருக்கு. இப்போதான் சேலம் மக்கள் மூக்

வேடந்தாங்கலை உருவாக்குறோம்!



பியூஸ் சேத்தியா



கனேரியோட அருமைய உணர ஆரம்பிச்சுருக்காங்க. குடும்பத்தோடு ஏரியைப் பார்க்கணுங்கறதுக்காக இப்போ ஏரியைச் சுத்தி பூங்கா அமைச்சுக்கிட்டிருக்கோம்'' என்கிறார் சேத்தியா.

''சேலம் மக்கள் குழுக்கு அரசாங்கம் நிதியுதவி தர்றாங்களா?''

''நாங்க வேண்டாம்னு சொல்லிட்டோம் ஸார். மக்கள்கிட்டே இருந்தே டொனேஷன் வாங்கறோம். அப்பதான் அவங்களுக்கு இந்த ஏரி மீது அக்கறை வரும். நல்ல விஷயம்தானே?'' என்கிறார் பியூஸ் சேத்தியா.

ம்....

வாசகர் யோசனை:

சுசீலா, மல்லூர்

சிட்டிக்குள் சீ:ப் கெஸ்ட்

சேலம் மூக்கனேரிக்கு நவம்பர்தான் சீசன். அப்போ ஹெறான், ஈகரெட், ப்ராமணி கைறட்ஸ் ஆகிய வெளிநாட்டுப் பறவைகள்தான் சீ:ப் கெஸ்ட். சேர்வராயன் மலையின் பின்னணியில் பறவைகளின் கும்மாளம், மனத்தை சர்க்கரவாகம் பறவையாக்கிவிடுகிறது. ஏற்காடு, சேலம் நகரத்தை விட்டுத் தள்ளி இருக்கும் பசுமை பிராந்தியம்னா... இன்னும் ஐந்து வருடங்களில் மூக்கனேரி, சிட்டிக்குள்ளேயே இருக்கும் பசுமை பிராந்தியமா உருவெடுப்பதற்கான அடையாளங்கள் தெரிகின்றன. ஏற்காடுக்கு உல்லாசப் பயணம் செல்வோர் ஒரு எட்டு மூக்கனேரிக்கும் வந்து போகலாம்.





அவனுடைய அப்பா பிறந்து வளர்ந்து இருபத்திரண்டு ஆண்டுகள் அந்தத் தெருவில்தான் இருந்திருக்கிறார் என்று நினைத்தபோது, அவனுக்குத் துக்கமும் மகிழ்ச்சியும் தோன்றியது. அவனுடைய அப்பா இறந்தே இருபது ஆண்டுகள் முடிந்துவிட்டன. எழுபது, எண்பது ஆண்டுகளுக்கு முன்பு இத்தெரு எப்படி இருந்திருக்கும்?

''எங்க ஊரே அந்த இரண்டு தெருதான்னு சொல்லிடலாம். நூல் பிடித்துக் கட்டின மாதிரி அந்த இரண்டு தெருக்களும் முக்கால் மைல் தூரத்துக்கு நேர்க்கோடுகளாக இருக்கும்,'' என்று எப்போதோ அப்பா சொல்லியிருந்தார். இப்போதும் அந்த இரு தெருக்களும் நேர்க்கோடுகளாக இருந்தன. வேறு பல தெருக்களும் தோன்றி ஊர் பெரிதாகிப் போய்விட்டது. அப்பா சொன்ன அந்த இரண்டு தெருக்கள் உற்சாகமாக இல்லை. நிறைய வீடுகள் வீழ்ந்துவிட்டன. டஜன் கணக்கில் இருந்த வீடுகளில் மூன்றோ நான்கோதான் வெள்ளையடிக்கப்பட்டுச் சற்றுப் பார்க்கும்படியாக இருந்தன. அடுத்தடுத்துத் தரித்திரம்தான் தாண்டவமாடியது.

அவனுடைய அப்பா இருந்த வீடும் மிகவும் மோசமான நிலையில் இருந்தது. அப்பாவின் உறவுக்காரர்கள் இன்னமும் அந்த வீட்டில் இருந்தார்கள். இரண்டு, மூன்று தலைமுறையாக அந்த வீடு தாயாதிகளுக்குள் பாகம் பிரிக்கப்படவில்லை. பார்க்கப் போனால் அவனும் அந்த வீடு மீது உரிமை கொண்டாடலாம். ஏதாவது பயனுள்ளதாக இருக்குமா? பெரியவர்கள் இருந்தபோதே முடியாதது இப்போது சாத்தியமா? அந்த வீட்டின் கதியும் விரைவில், அந்தத் தெருவில் செடியும் புதருமாகக் கிடந்த பல வீடுகள் போலாகிவிடும். 'பாழாகப் போ' என்று சபிப்பது மனிதர்களைவிட வீடுகளுக்குத்தான் பொருந்தும்.

அவன் அந்த வீட்டினுள் நுழைந்தான். மண்டை இடித்தது. அந்த நாள் வழக்கப்படி வாயிற் கதவைக் குட்டையாக அமைத்திருந்தார்கள். ஆனால் சுவர் / தடிமன் ஒரடி, ஒன்றரையடி கூட இருக்கும். வெளியிலிருந்து தெரியாது. ஆதலால் சாஸ்திரப்படி கட்டப்பட்ட வீடுகளுக்குள் நுழையும்போது தாழ்வாரம் அடையும் வரைத் தலையைக் குனிந்தே வைத்துக் கொள்ளவேண்டும். அது அவனுக்குத் தெரியவில்லை. முற்றம் தந்த வெளிச்சத்தில் யாரோ ஒரு மூலையில் புடைவையை உதறி உலர்த்த முயன்று கொண்டிருந்தது தெரிந்தது.

''காமாட்சி!'' என்று அழைத்தான்.

அவள் அவனை உற்றுப் பார்த்தாள்.

''காமாட்சிதானே நீ - நீங்க?'' என்று கேட்டான்.

''நீங்க யாருன்னு தெரியலையே?''

''நான் அப்பு.''

''பெரியப்பா பிள்ளை அப்புவா?''

''ஆமாம்.''

''வாங்கோண்ணா. மன்னி, குழந்தைகள் வந்திருக்காளா?''

''இல்லை. நான் மட்டும்தான் வந்திருக்கேன்.''

''பெரியம்மா போனது நாலு நாள் கழிச்சுத்தான் தெரிஞ்சது. பத்து நாள் தீட்டு இல்லையா?''

''எனக்கு இங்கே ஒரு நாளைக்கு வேலையிருக்கு. இங்கே தங்கலாமோ? ராத்திரி பதினொரு மணி எக்ஸ்பிரஸ்லே போயிடுவேன்.''

''ஒருநாள் என்ன, நாலு நாள் இருந்துட்டுப் போ அண்ணா. அம்மா உள்ளே சமையல் பண்ணிண்டிருக்கா. காது கேக்கலை. நடக்கறதும் ரொம்பக் கஷ்டம். இந்த விட்டிலே ஒவ்வொரு வாசல்படியும் முழம் உசரமாயிருக்கு.''

''ரகுவுக்கு இன்னும் கல்யாணம் ஆகலை இல்லையா?''


''உங்களுக்கெல்லாம் தெரியாதபடி எப்படி நடக்கும் அண்ணா? அவனுக்குச் சீயாழிக்கு மாத்தலாயிடுத்து. இங்கேந்து தினம் பஸ்லேதான் போயிட்டு வரான். பொண்ணுக்கு இங்கேயே காலேஜிலே பி.ஏ.ஹிஸ்டரி கிடைச்சுடுத்து. அவளும் பஸ்லேதான் போயிட்டு வரா. அவ மூணு மணிக்கு வந்துடுவா. ரகுவுக்குத்தான் இருட்டி எழு எட்டு மணிகூட ஆயிடறது.''

''சின்ன ஊர் பாங்க்லே எல்லாம் இப்படித்தான்.''

''உள்ளே வா. இவ்வளவுதான் சாமானா? முதல்லே காஃபி சாப்பிடு.''

''குளிச்சுட்டாக்கூடத் தேவலை. வண்டி ரொம்ப லேட்.''

''கிணத்தங்கரையிலேயே குளிச்சுடலாம். குளிக்கிற ரூம்



அசோகமித்திரன்



கூரை விழுந்துடுத்து. கை, கால் கழுவிக்கப் பின்னாலே சுவர்கிட்டே தடுப்பு இருக்கு. ராணிகூட வந்துட்டுப் போயிட்டா.''

''யாரு ராணி?''

''அதெல்லாம் சுத்தம் பண்ணறவ. இந்த வீட்டுக்கு இன்னும் ஃபிளஷ்ஷவுட் வரலை.''

அவனுக்கு இதெல்லாம் வியப்பளிக்கவில்லை. அவர்களாகவே வீட்டுக்கென்று செலவழித்து என்ன பயன்? பங்கு கேட்பவர்கள் இந்தச் செலவை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

கொல்லைப்புறம் ஓரளவு சுத்தமாகவே இருந்தது. வீட்டை இடித்துத்தான் புதிதாகக் கட்ட வேண்டும். கட்டிய வீட்டிலும் முற்றம்போல அமைப்பு வைத்தால்தான் வெளிச்சம் வரும். யார் செய்யப் போகிறார்கள்? எந்த ஜன்மத்தில் செய்யப் போகிறார்கள்?

சித்தி சமையல் மிகவும் நன்றாக இருந்தது. அவள் பங்குக்குப் பல விஷயங்களை விசாரித்தாள். எல்லாவற்றுக்கும் சுருக்கமாக உரத்துப் பதில் தந்தான். ஒரு சொல் வீணாகாதது குறித்து அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. மேடைகளில் பேசுகிறவர்கள் உரத்துதான் பேசுகிறார்கள். கத்துகிறார்கள் என்று கூடக் கூறலாம். ஆனால் கூடைக்கணக்கில் வீணான சொற்கள்.

ஊரைச் சுற்றிப் பார்க்க முடியாத போதிலும், பஸ் ஸ்டாண்டு போவதற்குள் பல விஷயங்கள் கண்ணில் பட்டன. நிறைய பட்சணக் கடைகள். நிறைய ஜோசியக் கடைகள். ஊரில் வயதானவர்கள் எண்ணிக்கை அதிகரித்திருக்க வேண்டும். தின்பண்டக் கடைகளில் அவர்கள்தான் போய் நிற்கிறார்கள். கணவன், மனைவி இருவரும் உத்தியோகத்துக்குப் போகிற மாதிரி குடும்பங்களும் அதிகரித்திருக்க வேண்டும்.

அவன் போக வேண்டிய அலுவலகத்தைத் தேடிப் போய்ச் சேர்ந்தபோது உணவு இடைவேளை. அது நல்லதாகப் போயிற்று. அவன் பார்க்க வேண்டிய அதிகாரி அவனையும் உணவருந்தக் கூப்பிட்டு விட்டதில் அரை மணி நேரத்துக்கும் மேலாக அவருடன் பேச வாய்ப்புக் கிடைத்தது. உணவுக்குப் பிறகு அவர் உடனுக்குடனேயே உத்தரவையும் எழுத்து மூலம் கொடுத்துவிட்டார். அவன் தகப்பனாரின் ஊர் அவனுக்கு இன்னமும் நன்மை செய்து கொண்டிருப்பதாகத் தோன்றிற்று.

காமாட்சி அவனுக்கும் தோசை வார்த்து வைத்திருந்தாள். அவளுடைய பெண் மீனா உயரமாக வளர்ந்திருந்தாள். இந்தக் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆவதைப் பார்க்க, அவர்கள் தந்தைக்குக் கொடுத்து வைக்கவில்லை. குழந்தைகளும் கொடுத்து வைக்காதவர்கள்தான். ரகு, மீனா இருவரும் அவரவர்கள் குடும்பங்களை அமைக்கும்வரை இந்தப் பாரம்பரிய வீட்டிலிருந்து யாரும் அவர்களை விரட்டிவிடக்கூடாது.

இருட்டிக் கொண்டிருக்கும்போது காமாட்சி ஓர் அகலில் சிறிது எண்ணெயும் ஒரு திரியும் வைத்தபடி கிளம்பினாள். அவள் போனபிறகு மீனாவைக் கேட்டான்: ''அம்மா எந்தக் கோயிலுக்குப் போறா?''

''நம்மூர் சுவாமி கோயிலுக்குத்தான். நீங்க அம்மன் கோயிலுக்குப் போனதில்லையா?''



சேலம் துக்கடா!

சேலம் அம்மாபேட்டையில் உருவாகும் சேலைகள், எலிசபெத் ராணிக்கு மிக விருப்பமாம். தம் அறையில் அதனை அலங்காரத் திரையாகத் தொங்க விட்டிருப்பாராம்.

- ஆர்.முனுசாமி

''ஞாபகம் இல்லை. சின்னக் குழந்தையாக இருந்தபோது போயிருக்கலாம்.''

''பெரிய கோயில். நீங்க எப்போ ரயிலுக்குப் போகணும்? கோயில் பேரே பெரிய கோயில்.''

''பத்து மணிக்குப் போனாப் போதும். அந்த வேளைக்கு வண்டி கிடைக்குமில்லையா?''

''ஆட்டோ கிடைக்காது. ஒம்பதரைக்குக் கிளம்பினா சரியாயிருக்கும்.''

''கோயிலுக்குப் போயிட்டுவர நேரமிருக்குமா?''

''போயிட்டு வந்துடலாமே. இப்போ கிளம்பினாக்கூட ஏழரை, ஏழே முக்காலுக்கு வந்துடலாம்.''

''நான் கோயிலுக்குப் போயிட்டு வந்துடறேன். எங்க அப்பா, அவரோட அப்பா, அவரோட அப்பா போன கோயில்.''

மீனா பேசாது இருந்தாள். அவன் கிளம்பும்போது, ''உங்கம்மாவோடயே நான் போயிருக்கணும்,'' என்றாள்.

கோயிலுக்கு அவனுக்கு வழி தெரியாது. தெருவில் ஒருவரைக் கேட்டுப் போனான். நூல்கட்டி அமைத்த தெருக்களைக் கடந்து அது ஒரு தனி வழியில் இருந்தது. அந்த ஊரில் தெரு விளக்குகள் பழைய மாதிரி பல்புகள். மிகவும் மங்கலாகத்தான் இருந்தன. சட்டென்று கோபுரம் நிழலாகத் தெரிந்தது. நல்ல உயரம். அவனைக் கவ்விப்பிடிக்கத் தயாராக இருந்த பூதம் போல அந்த அரை இருட்டில் தெரிந்தது.

அவன் எதிரே காமாட்சி வந்தாள். ''எங்கேண்ணா, கோயிலுக்கா? என்னோடு வந்திருக்கலாமே?''

''நீ கூப்பிடலியே?''

''தப்புத்தான். சீக்கிரம் போயிட்டு வாண்ணா. இன்னெக்கென்னமோ எனக்குச் சரியில்லே. ஏதோ பயமாயிருந்தது. உன்னை அழைச்சுண்டு போயிருக்கலாம்.''

காமாட்சி போய்விட்டாள். அவன் பெரிய கோபுரம் வழியாகவே கோயிலுக்குள் நுழைந்தான். வெளிச்சமே போதாது. அப்படியும் வெளிப்பிராகாரத்தை ஒருமுறை பிரதட்சணம் செய்து அடுத்த பிராகாரத்துக்குள் நுழைந்தான். வலது கால் கட்டை விரல் வலித்தது. அவன் காலில் ரத்தம்கூட வந்திருந்தது.

அது சுவாமி சன்னிதி. பிராகாரங்களில்தான் ஓரிரு பல்பு மின்விளக்கு இருந்ததே தவிர, சன்னிதிகளுக்கு எண்ணெய் விளக்குகள்தான். அன்று அம்மனுக்குக் கொண்டை வைத்து மீனாட்சியம்மன் போல அலங்கரித்திருந்தார்கள். அலயம், மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி என்ற பெயர்கள்தான் அந்த ஊரில் முக்கால்வாசிப் பெண்களுக்கு வைத்துவிடுவார்கள்.

முதல் பிராகாரத்திலேயே ஓரிடத்தில் நவக்கிரகமும் இருந்தன. தட்சிணாமூர்த்தி விக்கிரகமும் சுவரோடு பதிக்கப்பட்டிருந்தது. காமாட்சி, தட்சிணாமூர்த்திக்குத்தான் எண்ணெய் விளக்கு வைக்கப் போயிருப்பாள். அன்று வியாழக்கிழமை.

கால் காயத்தில் ரத்தம் உறைந்து



சேலம் துக்கடா!

தமிழின் முதல் இரட்டை வேடம் அறிமுகமான உத்தம புத்திரன், முதல் கலர் படம் அலிபாபாவும் நாற்பது திருடர்களும், மனோரமா கதாநாயகியாக நடித்த முதல் படம் கொஞ்சும் குமரி... என 117 படங்களைத் தயாரித்தவர் மார்டன் தியேட்டர்ஸ் சுந்தரம்!

- பொ.செந்திலரசு



போயிருந்தது. அவனுடைய முன்னோர்கள் தினமும் இந்தக் கோயிலுக்குப் போயிருப்பார்கள். அவர்கள் காலத்தில் இந்த ஒன்றிரண்டு மின்விளக்குகள் கூட இருந்திருக்காது. எண்ணெய் விளக்குகள், ஒரு பிராகாரத்துக்கு ஒரு தீவட்டி என்றிருக்கலாம். அவர்கள் எவ்வளவு முறை காலை இடித்துக் கொண்டிருப்பார்கள், எவ்வளவு ரத்தம் அந்தக் கோயிலில் சிந்தியிருப்பார்கள்?

அவன் முதலில் அப்படியே வீடு திரும்பி விடலாமென்றுதான் நினைத்தான். இன்னொரு முறை வர முடியுமா? அதற்கு எவ்வளவு ஆண்டுகள் தேவைப்படும்? அவனுக்கு வர முடியாமல் போய்விடக்கூடிய அபாயம் கூட இருந்தது.



சன்னிதிகளுக்கு அடுத்த உள் பிராகாரம் மிகவும் நீளமாக இருந்தது. அவ்வளவு நீண்ட பிராகாரத்துக்கு மிக உயரத்தில் கூரை. அந்த உயரமே இருட்டை அதிகரித்தது போலிருந்தது.

அவன் நொண்டியபடியே ஒரு பக்கம் முடித்து அடுத்த பக்கத்துக்கு வந்தான். இந்தப் பிராகாரம் கூட ராமேஸ்வரப் பிராகாரத்துக்குச் சமமாக இருக்கக் கூடும்.

இன்னும் இரு பக்கங்கள் முடித்தால் அவன் வீட்டுக்குத் திரும்ப முடியும்.

அவன் கடைசிப் பக்கத்தை அடைந்தான். காமாட்சி இந்தப் பக்கத்துக்கு வந்திருக்க வேண்டும். அவ்வளவு நீளப் பிராகாரத்துக்கு ஒரு விளக்குக் கூடக் கிடையாது. அதுதான் அவளுக்குப் பயம் எழுப்பியிருக்கக் கூடும்.

அவனுக்கும் பயமாகத்தான் இருந்தது. இன்னும் இருபது இருபத்தைந்து அடிகள் இருக்கும். மூன்று திசைகளில் போன போதும் ஆளரவமே இல்லை. ஏதோ சிறிது வெளிச்சம் இருந்தது. இங்கு அதுவும் கிடையாது.

அவன் எதிரே ஒருவர் தூரத்தில் வந்து கொண்டிருந்தார். அவன் அவரையே பார்த்தபடி நின்றான். எல்லாம் நிழல் போலத்தான். அவர் பஞ்சகச்சம் கட்டி இடுப்பின் மேல் வேஷ்டியைக் கட்டியிருந்தார். ஆண்கள் கோயிலுக்கு அப்படித்தான் போக வேண்டும். அவன் சட்டையை மேல் வேஷ்டியாக நினைத்துக் கொள்ளலாம். ஆனால் சட்டையை இடுப்பில் கட்டிக் கொள்ள முடியாதே. ஆனால் மனிதன் அப்பிரதட்சணமாக வருகிறாரே? விஷயம் தெரிந்த மனிதர்கள் அப்படிச் செய்ய மாட்டார்களே?

அந்த மனிதர் ஐந்தாவது அடி தூரத்தில் இருந்தார். அவர் அவனைப் பார்த்தபடியே முன்னேறிக் கொண்டிருந்தார். ஆயிற்று. இருவரும் எதிரும் புதிருமாக நின்றார்கள்.

அவன் நெற்றி சுருங்கியது, யார் அது? யார்?

கன்னத்தில் அறைந்தது போல அடையாளம் தெரிந்தது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு இறந்த அப்பாதான் அவன் முன் நின்று கொண்டிருந்தார்.

''அப்பா!'' என்று கத்தினான்.

அவன் அன்று இரவு பதினொரு மணி எக்ஸ்பிரஸ் ரயிலைப் பிடிக்க முடியவில்லை.

''கோயிலாக இருந்ததால் என்ன? பழைய கட்டடங்களுக்கெல்லாம் தனியாகப் போகக்கூடாது'' என்று சித்தி சொல்லிக் கொண்டிருந்தாள். ★

* சேலம் கஞ்சமலை அடிவாரத்தில் அரியானூரில் இருக்கிறது 1008 லிங்கங்களைக் கொண்ட கைலாய சிவாலயம். விநாயகா மிஷன் முயற்சியால் எழும்பி இருக்கிற 1008 சிவலிங்கங்களைக் கொண்ட கோயில் இந்தியாவிலேயே இது மட்டும்தான்.

* அனுமன் சஞ்சீவி மலையைப் பெயர்த்துக்கொண்டு போகும்போது பிய்ந்து விழுந்த ஒரு துண்டுதான் கஞ்ச மலை என்றும், அதனால்தான் இன்னும் பெயர் தெரியாத பல மூலிகைகள் கஞ்ச மலையில் அதிகம் என்றும் சுவாரஸ்ய செய்தியும் உண்டு!

* சிவாலயத்தின் வலப் பக்கத்தில் அட்சய ஐஸ்வர்ய லக்ஷ்மிக்கும் சமேத பெருமாளுக்கும் கோயில்கள் ஆன்மிக அலையைப் பரப்புகின்றன.

* பன்னிரெண்டு அடியில் எழும்பி நிற்கும் வனசஞ்சார ஆஞ்சநேயர், கஞ்ச மலைத் திருமாலை சேவிக்கும் வண்ணமிருப்பது மனத்துக்கு ரம்மியமானது.

* கோயிலைச் சுற்றியும் மலைப்பாதைகளிலும் 1007 லிங்கங்களும், மூலஸ்தானத்தில் ஒரு லிங்கமும் அருள்பாலிக்கின்றன. மூலவர் ஆவுடையார், தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலுள்ளதைப் போல 14 அடிகள் உயரம். மூலவருக்கான நந்தி பத்தடிகள்.

* அதியமான், அவ்வைக்குத் தந்த அற்புத நெல்லிக்கனி கஞ்சமலையிலிருந்து கொண்டு வரப்பட்டதாகக் கோயில் கல்வெட்டுக் கூறுகிறது.

* கடையெழு வள்ளல்களில் ஒருவரான பாரியின் மகளிர் அங்கவை சங்கவை இருவரையும் மணக்க மூவேந்தருக்குள் போட்டி. ஆனால் மூவரையும் எதிர்க்கிறான் பாரி. அதனால் மூவரும் சேர்ந்து பாரியைப் போரில் கொல்கின்றனர். திருமணம் தடைபடுகிறது. தடைபட்ட திருமணத்தை மூவேந்தர்களின் தலைமையிலேயே அவ்வைபிராட்டி நடத்திய உத்தமசோழபுர கரபுர நாதர் கோயில் இன்றும் அதே சாநித்தியத்தோடு விளங்குகிறது.

* திருமணத்துக்கு வந்ததன் அடையாளமாக சோழன் உருவாக்கிய ஊர்தான் உத்தமசோழபுரம். பாண்டியனின் ஞாபகமாக வீரபாண்டி. சேரனின் நினைவாக சேரம். இது மருவிதான் சேலமானது என்பது காற்றில் உலவும் செய்தி.

* திருமணத்துக்கு வந்த மூவேந்தர்களும் சந்தித்துக்கொண்ட ஊர்தான் அரியணை ஊர்: பிறகு அரியானூர் ஆனது.

வாசகர் யோசனை: **சரஸ்வதி, மல்லூர்**



அருள்பாலிக்கும் 1008 லிங்கங்கள்!





* கே.பி.நடராஜன்

ஆரன் அடிச்சா

தென்னிந்தியாவில் தொலைதூர சொகுசு பேருந்துகளில், மக்கள் மத்தியில் கே.பி.என்.னுக்குத் தனியானதொரு வரவேற்பும், பெரும் மதிப்பும் கௌரவமும் நீடித்து நிலைத்துள்ளது. அதன் நிறுவனர் கே.பி.நடராஜன் ஆக்ஸிடெண்ட் ஃப்ரீ ரோடு குறித்து நம்மோடு பேசினார்.

● இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் ஹைவேஸ் சாலைகளோட நீளம் ரொம்ப அதிகம். சாலைகளும் நல்லா இருக்கறதும் இங்கதான்.

● தமிழ்நாட்டுல நடக்குற சாலை விபத்துகளுக்குப் பெரும்பாலான காரணம் விதிகளைச் சரியாகக் கடைப்பிடிக்காதது தான்!

● வாகனம் ஓட்டும்போது லெஃப்ட் சைடுல போயி சைடு எடுக்கக்கூடாது. ரைட்தான் நம்ம டிரைவிங் சிஸ்டத்துக்கு ஒத்துவரும்! நம்ப இண்டியன் டிரைவிங் எல்லாமே ரைட் சைடுதான். வெளிநாடுகள்லதான் லெஃப்ட் சைடு டிரைவிங். நம்ப நாட்டுல இன்னொரு வேடிக்கை. வேகமா போறவங்க பலரும் டிவைடரை ஒட்டியே போறாங்க. அப்பிடி ஒரு டிரைவிங்கே கிடையாது.

● இந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த Driver College ஒன்று தொடங்கி நடத்தும் எதிர்காலத் திட்டமும் எங்களுக்கு இருக்கிறது. அதில் சாலை விதிகள் குறித்து ஓட்டுனர்களுக்கும், பின்னர் படிப்படியாகப் பொதுமக்கள் அனைவருக்கும் விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்படும்.

● எங்கள் நிறுவன ஓட்டுனர்களுக்கென்றே ஓட்டுனர் நீதிமன்றம் (Driver's Court) ஒன்றை இயக்கி வருகிறோம்! அங்கே, ஓட்டுனர்கள் செய்யும் தவறுகள், குற்றங்கள் ஆகியவை அலசி ஆராயப்பட்டு எவ்விதப் பாரபட்சமும் இல்லாமல் நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்பட்டு வருகின்றன.

● ஒவ்வொருத்தரும் காதுல இயர்ஃபோன் மாட்டிட்டு பாட்டுக் கேட்டுட்டோ, செல்லுல பேசிட்டோ பயணம் செய்றாங்க. கே.பி.என்.லயும் பயணிகளுக்கு இயர்ஃபோன் வசதி செய்ய யோசனை பண்ணினோம். ஈ.என்.டி. நிபுணர் ஒருவரிடம் ஆலோசனை கேட்டேன். 'ஒருவர் காதில் உள்ள கிருமி, இன்னொருவர் காதுக்குள் பரவ வாய்ப்பு உண்டு' என்றார். உடனே அந்தத் திட்டத்தை நிறுத்திக் கொண்டோம்.

● மலேசியாவுக்குப் பத்து நாள் பய

ணமா போயிருந்தேன். அங்கே கார்ல போய்ட்டிருந்தோம். சைக்கிளில் வந்த சைனாக்காரர், காரில் இருந்த என்னைப் பார்த்து சைகையால் ஏதோ சொல்லி விட்டுச் சென்றார். ஏதோ திட்டி விட்டுப் போகிறார் என நினைத்த நான், பக்கத்தில் இருந்த செட்டியாரிடம் ''அவர் என் திட்டுறார்?''னு கேட்டேன்.

செட்டியார் கூறிய பதில் என்னை வியக்க வைத்தது. ''அவர் உங்களை ஏதும் திட்டவில்லை. 'சீட் பெல்ட் போடாமல் காரில் அமர்ந்து வருகிறீர்களே. அது பாதுகாப்பானதல்ல. மேலும் இங்கு ஃபைன் கட்ட வேண்டுமே' என சைகையில் தெரிவித்துப் போகிறார்'' என்றார்.



●மலேசியாவில் டிகிரி முடித்தால்தான் டிரைவராக முடியும்! சாலை விதிகளை அவர்களைப் போலத் துல்லியமாக நம்மால் கடைப்பிடிக்க முடியுமா? என எனக்குள்ளே நான் பலமுறை கேட்டுக்கொண்டிருந்தேன்.

●மலேசியாவில், பத்து நாட்கள் பல இடங்களுக்கும் காரிலேதான் பயணம் செய்தோம். அப்போது என் கார் டிரைவர் மொத்தமே இரண்டே இரண்டு முறைதான் ஆரன் அடித்தார். அதுவும் மிக சத்தம் குறைவாக! பிறகுதான் விசாரித்தேன். மலேசியாவில் டிரைவர்கள் ஆரன் அடிப்பதே இல்லை; தவிர்க்க இயலாமல் ஆரன் அடிக்க நேர்ந்தால் அவமானமாகக் கருதுகிறார்கள். எனக்கு நம்மூர் டிராஃபிக் ஜாம் ஆரன் ஞாபகத்தில் ஒலித்தது.

அவமானம்!

- வாசகர் யோசனை:
இளங்கோ, சேலம்





ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்



ஜாதகத்தில் கலப்புத் திருமணத்தைக் கண்டறியலாமா?

ஆர்.பாஸ்கரன், பெங்களூரு

எனது சகோதரி திருமதி ரேவதியின் ஜாதகம் அனுப்பியுள்ளேன். கீழே விழுந்து எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. எப்பொழுது குணமாகும்?

பொதுவாக ராகு தசை சூரிய புக்தி அல்லது சூரியன் தசை ராகு புக்தி நடைபெறும்போது விபத்துகளால் எலும்பு முறிவு ஏற்படும். தங்கள் சகோதரிக்கு செவ்வாய் தசை சூரிய புக்தி ராகு அந்தரம் நடைபெறும்போது முதுகெலும்பில் முறிவு ஏற்பட்டுள்ளது. அவரது ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மேஷ லக்னம் 4ல் சூரியன் - ராகு சேர்க்கை 10ல் உள்ள சனி - கேது பார்வை. இதற்குப் பரிகாரம் ஆதி சங்கரர் அருளிச் செய்த சுப்ரமணிய புஜங்கம் பாராயணம் செய்வது.

சிவகாமி சுப்ரமணியம், ராஜபாளையம்

எனது மகள் ஹெச்.எஸ். ஹரிணி ஜாதகம் அனுப்பியுள்ளேன். திருமணம் எப்பொழுது நடக்கும்?

வெகுவிரைவில் ஹரிணி திருமணம் நடைபெறும்.

குப்புராஜ், செட்டிகுளம்

என் மகள் ஜாதகத்தைப் பார்த்த சிலர் அவளுக்கு, கலப்புத் திருமணம் நடக்கும் என்றனர். அது உண்மையா? எப்பொழுது திருமணம் நடக்கும்?

தங்கள் மகளுக்கு கடக லக்னம், பூராடம் நட்சத்திரம் தனுசு ராசி, 6ல் சந்திரன் செவ்வாய் சேர்க்கை, பெற்றோர் பார்த்து வைக்கும் திருமணம் நடக்கும். சந்திரனும் கேதுவும் ஒன்றாகச் சேர்ந்தால் பிற இனத்தாரை மணந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். தங்கள் மகள் ஜாதகத்தில் அது போன்ற அமைப்பு இல்லை. 2011 மே 8ம் தேதி குருப் பெயர்ச்சி. அதன் பிறகு திருமணம் நடக்கும்.

என்.ஆர்.விஜயலக்ஷ்மி, புதுதில்லி

பல குடும்பங்களில் மாமியார் மருமகள் சண்டை உள்ளது. இதனால் அமைதி இன்றித் தவிக்கின்றனர். திருமணத்துக்கு ஆண்- பெண் ஜாதகங்களை ஒப்பிட்டுப் பொருத்தம் பார்க்கும்போது மாமியார் மருமகள் ஜாதகத்தையும் அதேபோல பொருத்தம் பார்க்க ஜோதிடத்தில் வழி உள்ளதா?

இது ஒரு நல்ல கேள்வி. அவ்வாறு செய்வது ஜோதிட ரீதியாக சாத்தியமே. சில நட்சத்திரங்களுக்கு ஒரு சில நட்சத்திரங்கள் பகை நட்சத்திரங்களாக உள்ளன. உதாரணத்துக்கு ரோகிணி, ஹஸ்தம், திருவோணம் ஆகிய நட்சத்திரங்களுக்கு திருவாதிரை, சுவாதி, சதயம் ஆகியவை பகை



ட்சத்திரங்கள். மாமியார் ரோகிணியாக யும் மருமகள் சுவாதியாகவும் அமைந்தால் வீட்டில் அமைதி என்பதே இருக்காது. இனி திருமணத்துக்குப் பொருத்தம் பார்க்கும் போது மாமியார் மருமகள் நட்சத்திரங் களையும் கவனத்தில் கொள்ளலாமே.

கல்பகம் கிருஷ்ணன், மும்பை - 89

6.3.1941ல் பிறந்த நானும் என் கண வரும் மும்பையில் வசிக்கிறோம். எங்க ளின் இரு புதல்வியரும் அமெரிக்காவில் செட்டில் ஆகிவிட்டனர். எங்களின் வீடு விற்பனை ஆக வேண்டும். நாங்கள் காசி-ராமேஸ்வரம் சென்றுவர வேண் டும். இந்தக் கடமைகளை முடித்து விட்டு முதியோர் இல்லத்துக்குச் சென்று தங்கி விடமுடியுமா?

2011, மே மாதத்தில் டோம்பிவில்லி யில் உள்ள உங்கள் வீடு விற்றுப் போகும். அதற்கு முன்பாகவே காசி-ராமேஸ்வரம் சென்று வரலாம். முதியோர் இல்லத்துக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்படாது. நோய் நொடிகள் இன்றி உங்கள் இறுதி நாட்களை மும்பையிலேயே அமைதி யாகக் கழிப்பீர்கள்.

ராம. சுப்பையா, சென்னை - 35

எனது மகள் வள்ளிக்கண்ணு ஜாதகம் அனுப்பியுள்ளேன். திருமணம் எப்போது நடக்கும்?

தங்கள் மகள் ஜாதகம் நன்றாக உள்ளது. இன்னும் ஆறு மாதங்களில் திருமணம் பேசி முடிக்கப்படும். கர வருடம் ஆவணி மாதத்தில் திருமணம் நடக்கும்.

உங்கள் கேள்விகளை ஜாதகக் குறிப்போடு 'பளிச் பரிகாரம்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க...
kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

தாய்க்கு மகனில்லை... தமிழனுக்கு ஞாபகம் இல்லை!







காமராஜ் சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகப் பதவியேற்றதும் சிவ காமி அம்மையாரின் மனசு ஆனந்தத்தால் நிறைந்தது. தம் மகன் நாட்டின் முதல் மந்திரி யாகப் பவனி வருவதைப் பார்க்க ஆசைப் பட்டு விருதுநகரிலிருந்து சென்னைக்கு ஓடி வந்தார். திருமலைப்பிள்ளை வீதி வீட்டில் தங்கியிருந்து, தம் கையால் உணவு சமைத்துக் கொடுத்து ஆசை தீரக் கவனித்துக்கொள்ள விருப்பப்பட்டார்.

ஆனால் இரண்டு நாள் ஆனதுமே, 'அம்மா இன் னைக்கு ராத்திரி ரயிலுக்கு டிக்கெட் எடுக்கச் சொல்லி யிருக்கேன். சாப்பிட்டு சீக்கிரமா கிளம்பிடு... நான் வரத் தாமதமாகும்'- சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார் காம ராஜ்.


அன்று இரவு காம ராஜ் திரும்பியதும் இது பற்றி காமராஜின் சிறு வயது தோழர் முருக தனுஷ்கோடி, கே.எஸ். முத்துசாமி ஆகிய இருவரும் கோபமாகவே கேட்டார்கள். உடனே காமராஜ், 'அம்மா ஆசைப்படுறது சரிதான். ஆனா அம்மா என்னோட இருந்தா, நிறைய சொந்தக் காரங்க அவங்களைப் பார்க்க வருவாங்க. இதைப் பார்க் கிற எதிர்க்கட்சிக்காரங்க, சொந்தக்காரங்களுக்கு நான் ஏதேதோ காரியம் செஞ்சு கொடுக்கிறேன்னு கூசாம சொல் வாங்க, அப்படிப் பேசுறதுக்கு நாம இடம் கொடுக்க லாமா?' என்றபடி அவர் வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டார்.

''பெற்ற தாய்க்கு மகனாக இருப்பதைவிட, திரு நாட்டின் தொண்டனாக இருப்பதே முக்கியம் என வாழ்ந்த கர்மவீரர் காமராஜ் பற்றி சென்னையில் புகழ் பெற்ற கல்லூரியின் எம்.பி.ஏ., மாணவர்கள் சொன்னது அதிர்ச்சியாக இருந்தது'' என்கிறார் 'கறுப்பு ரோஜா' என்ற பெயரில் காமராஜ் வாழ்க் கையை ஆவணத் தொடராகத் தயாரித்திருக்கும் ஆர்.பிரபா கரன்.

''படிக்காதவர்... திருமணம் முடிக்காதவர் என்பது தவிர அந்த மாணவர்களுக்கு காமராஜ் பற்றி எதுவுமே தெரியவில்லை. இன்று அவர்களைப் போன்ற இளைஞர்கள் உலகெங்கும் சென்று கைநிறையச் சம்பாதிக்க காமராஜின் கல்விப்புரட்சிதான் காரணம் என்பதைக்கூட சொல் லித்தராத ஆட்சியாளர்களையும்,

அரசியல்வாதிகளையும் நினைத்துக் குமுறினேன்.

அதனால்தான் காமராஜின் வாழ்க்கை வரலாற்றை முழுமையாகப் பதிவு செய்ய விரும்பினேன். என்னுடைய ஆர்வத்தைச் சொன்னதுமே எனக்குத் தெரிந்த பல காங்கிரஸ் கட்சிக்காரர்களும், வசதி படைத்த நண்பர்களும், 'அவரு ராசியில்லாத மனுசன், அவரைப் பத்தி தொடர் எடுக்க நினைச்சா, நீ நடுத் தெருவுக்கு வந்திடுவ. அவர் பிறந்த நாளைக்குக் கொடியேத்திட்டு மிட்டாய் கொடு போதும்' என்றார்கள்.



ஆர்.பிரபாகரன்



மோனிகா

அவர்கள் சொன்ன வார்த்தைகள்



எனக்குக் கூடுதல் வலியைக் கொடுத்தது.

காமராஜ் வாழ்க்கை வரலாற்றை எங்கள் விருதுநகரைச் சேர்ந்த பத்திரிகையாளரான எஸ்.கே.முருகன் எழுதிக்கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரைச் சந்தித்தேன். தொடருக்குத் தேவையானதை முழுமையாக எழுதிக் கொடுத்தார். இஞ்ஜினியரிங் முடிச்சுட்டு இந்தத் துறை ஆர்வத்தில் இருந்த எம்.நிர்மல் இயக்கம் செஞ்சிருக்கார்.

மறைந்த சுபா சுந்தரம் அவர்கள் எடுத்து வெளிவராத ஆவணங்களையும் வாங்கினோம். முன்னாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம், தீரர் சத்தியமூர்த்தியின் மகள் லட்சுமி கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் பள்ளிக் கல்வி இயக்குனர் நெ.து.சுந்தரவடிவேலு, காமராஜ் உதவியாளர் வைரவன் ஆகியோரின் அரிய சந்திப்புகள் விரிவான வகையில் இடம் பெறுகின்றன'' என்றார் இந்தத் தொடரின் தயாரிப்பாளர் ஆர்.பிரபாகரன்.

'கருப்பு ரோஜா' தொடருக்காக காமராஜ் பிறந்த விருதுநகர் தொடங்கி தமிழகம் முழுவதும் சென்று வந்திருக்கிறார் சின்னத் திரை தொகுப்பாளினி மோனிகா என்பதை அறிந்து அவரைச் சந்தித்தோம்.

''எந்த மாநில அரசும் செய்திராத மகத்தான சாதனையைக் கல்வித்துறையில் சாதித்த காரணத்துக்காக காமராஜ்க்கு ஒரு புகழ்பெற்ற பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் கொடுக்க முன்வந்தாங்க. அதுக்கு காமராஜ் என்ன சொன்னார்னு தெரியுமா?

'டாக்டர் பட்டமா... எனக்கா? நான் என்ன பெரிய சாதனை செஞ்சுட்டேன்னு இந்த முடிவெடுத்தீங்க. அதெல்லாம் வேண்டாம்... நாட்டில் எத்தனையோ விஞ்ஞானிகள், மேதாவிகள் இருக்கிறாங்க... அவுங்களைத் தேடிப்புடிச்சு இந்தப் பட்டத்தைக் குடுங்க. நான் ஒத்துக்கொள்ளவே மாட்டேன்... போய்ட்டு வாங்க'ன்னு வம்படியா அனுப்பி வைச்சிட்டார்.

இதுபோல நிறையத் தகவல்களைத் தேடித்தேடிச் சேர்த்திருக்கிறோம்.

அரசியல்னா என்ன? தேசம்னா என்ன? பதவினா என்ன? தியாகம்னா என்ன? என்பதை இன்றைய இளைய சமுதாயம் இந்தத் தொடரைப் பார்த்தா கண்டிப்பா புரிஞ்சுக்க முடியும். வரும் ஆங்கிலப் புத்தாண்டு முதல் தூர்தர்ஷன் தொலைக் காட்சியில் சனிக்கிழமை தோறும் இரவு 7.30 மணிக்கு ஒளிபரப்பாக இருக்கு, மறக்காம பாருங்க...'' என்கிறார் மோனிகா!

- சஞ்சய்

கனவு பல காட்டல்!

ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு மாணவர் சிங்கம்

சென்னை மூர் மார்க்கெட்டுக்குப் பின்னேதான் முன்பு 'ஜ இருந்தது. சிங்கம், புலி, கரடி, நீர் யானை, சோம்பலாக நடந்து செ லும் ஒரு வகை கொக்கு, காதல் பறவைகள் முதலியன இருந்தன. இ றைய கிரிக்கெட் மைதானத்தைப் பார்க்கையில் பல மடங்கு சிறியதா கிரிக்கெட் மைதானம் ஒன்றும் அங்கிருந்தது. ஜூவுக்கு மக்கள் வந் கொண்டிருந்தார்கள். பலர் வீட்டிலிருந்தே மதிய உணவைக் கொண் வந்து விடுவார்கள். அந்த ஜூ இடமும் பெயரும் மாறி இப்போ வண்டலூரில் இருக்கிறது. கிரிக்கெட் மைதானமும் இப்போது இல்லை பழைய புத்தகங்களின் சரணாலயமாக இருந்த மூர் மார்க்கெட் புத்தகங்க



ஞானக்கூத்தன்

கலைந்து கடற்கரைக்குப் போகும் திருவல்லிக்கேணியி இப்போது பரவிக் கிடக்கின்றன.

தமிழ்நாட்டில் வளர்ச்சி காரணமாகப் புதியதும் பழ யதுமாகப் பல உள்ளன. பழைய பஸ் ஸ்டாண்ட், புது ப ஸ்டாண்ட், ஊருக்கொரு புதுத் தெரு, காய்கறிச் சந்தைக என பல புதிய வரவுகள் உள்ளன. பாலங்களிலும் பழை புதிய பாலங்கள் உண்டு. இப்படி ஏற்பட்ட புதிய விஷய களில் இரண்டு உயிரியல் பூங்காவும் சர்க்கஸும்.

சர்க்கஸ் பார்ப்பதில் மக்களுக்குப் பெரிய ஆர்வம் இரு தது. ஊர் ஊராகச் செல்லும் சர்க்கஸ் கம்பெனிகள் இருந்தன ரஷ்யாவிலிருந்து வந்து சென்ற சர்க்கஸ் கம்பெனிகள் கூட இருந்தன 1940-50களில் கமலா சர்க்கஸ் கம்பெனி என்று ஒன்று இருந்ததாக எனக் ஞாபகம்.

உயிரியல் பூங்காவும் சர்க்கஸும் புதிய அமைப்புகள். திருவனந் புரத்தில் மிருகக்காட்சி சாலைக்கு, பாரதியார் சென்றதாகவும், அங்கே கூண்டிலிருந்த சிங்கத்தைப் பார்த்து 'நீ காட்டு ராஜா, நான் கவி ராஜா என்று பேசியதாகவும் ஒரு கட்டுக்கதை உண்டு. ஆனால் அவர் அந் நிகழ்வைப் பற்றிக் கவிதை எழுதவில்லை. அதற்குக் காரணம் அவரது கவிதை இயல் இடம் கொடுத்திராது.

ஆனால் தேசிக விநாயகம் பிள்ளை ஒரு கவிதை எழுதியிருக்கிறார் சொந்தமாகவே ஒரு கவிதை எழுதும் வாய்ப்பைத் தவறவிட்டு விநாயக பிள்ளை ஒரு மொழிபெயர்ப்பைச் செய்திருக்கிறார். ஆங்கிலத்தில் வில்லியம் ப்ளேக் எழுதிய 'டைகர் டைகர் பர்னிங் ப்ரைட்' என்ற கவிதை யின் மொழிபெயர்ப்பு அது. ஆனால் மிருகங்களைக் கூண்டில் வைத்துப் பார்க்கும் அனுபவத்தை யுவன் கவிதையாக்கியது போல, சர்க்கஸ் சிங்கத்தை தேவேந்திர பூபதி 'நேஷனல் சர்க்கஸ்' என்ற அருமையான

5



தேவேந்திர பூபதி

கவிதையை எழுதியிருக்கிறார்.

எடுத்த எடுப்பிலேயே ஒரு சிங்கம் மனிதனின் கையில் படும் அவஸ்தையைக் கூறுகிறது:

அவன் சிங்கத்தின் தலையில்
ஓங்கிக் குட்டும் போது
அதன் கருமணிகள் ஒருகணம்
வெண்மையாகி மீள்கின்றன.

ஒரே குட்டில் அந்தச் சிங்கம் கதி கலங்குகிறது. அடுத்து கொட்டாவி விடுகிறது. ஈக்களை வாய் திறந்து பிடிக்கச் செய்கிறது. அதன் பேராண்மை சிதைந்துவிடுகிறது.

அவன் ஒரு வளையத்தை நீட்டுகிறான்
அத்துடன் சவுக்கால் ஒரு சொடுக்கைப்
பளீரென அவன் சுழற்றிய போது
முதுகுத் தண்டின் சிலிர்ப்பில்
அதன் இதயம் நடுங்குவதைக்
காண முடிந்தது.

அவன் நீட்டிப் பிடித்திருக்கும் வளையத்துக்குள் நுழைந்து வெளியேற வேண்டும் அந்தச் சிங்கம். சர்க்கஸ் அரங்கில் அதைப் பார்க்கக் காத்திருக்கிறது கூட்டம்.

மீண்டும் ஒரு குட்டு
அது முட்டாள் பையன்
போல் முனங்குகிறது.

குட்டுப் பட்டதும் சிங்கம் ஒரு முட்டாள் பையனைப் போல நிற்பதாகக் கூறும் உவமை பாராட்டத் தக்கதாக உள்ளது. சிங்கம் கற்றுக்கொள்ளும் நிலையில் உள்ளது. மனிதன் ஆசிரியனாக இருக்கிறான். சகல ஜீவராசிகளும் உயிரற்ற பொருள்களும் கூட அவனது பள்ளிக் கூடத்தில் முட்டாள் பையனாக நிற்கின்றன என்கிறார் கவிஞர்.

அவன் மேலும் வளையத்தைத்
தீர்மானமாக ஆட்டுகிறான்
சட்டெனத் தாவிக் கச்சிதமாக
நுழைந்து எதிர் மேசையில் இடறி
ஒரு வழியாகச் சமாளித்து நிற்கிறது
சிங்கம்
வாயில் கொடுத்த இறைச்சித் துண்டுடன்
அது திரும்பிச் செல்லும் போது
கரகோஷம் விண்ணில் எழும்புகிறது...

அருமையாகக் கவிதையை முடிக்கிறார் பூபதி. பூபதியின் சிங்கம் இறைச்சித் துண்டு கிடைத்ததில் மகிழ்ந்திருக்கலாம். வளையத்தில் நுழைந்து சென்றதைக் கண்டு மக்கள் செய்த கரகோஷத்தின் அர்த்தத்தை சிங்கம் அறியாது. பல அர்த்தங்களை வைத்துப் பின்னப்பட்டுள்ளது இக்கவிதை. வாசகரும் கரகோஷம் செய்யலாம். சிங்கத்துக்காக அல்ல, கச்சிதமாக இக்கவிதையை பூபதி அமைத்துக் கொடுத்ததற்காக.

(அடுத்த வாரம் பார்ப்போம்...)



காட்டூரில் காந்

சாலை வசதிகளிலிருந்து விலகி, மிகவும் உள்ளடங்கிய சங்ககிரி தாலுக்கா பெண்களுக்கு, மாதம் இரண்டாயிரம் ரூபாய் ஊதியம் பெற்றுத் தரும் உன்னதத்தை நிகழ்த்தி வருகிறது கைராட்டை. ராஜாஜி தொடங்கி வைத்த திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது காட்டூர் கைராட்டை நூற்பு மையம்.

பத்துக்குப் பத்து கட்டடம். பதினைந்து கைராட்டைகள். பதினைந்து பெண்கள். மின் வெட்டு இவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. ''கரெண்ட் வருதோ இல்லியோ. காலம்பற வந்தோம்னா பொழுது சாய்ற வரைக்கும் நூல் சுத்திட்டுப் போவோம். முந்தியெல்லாம் காட்டு வேலைக்குத் தான் போய்ட்டிருந்தேன். வாரத்துல ரெண்டு மூணு நாளுதான் வேலை கெடைக்கும். இங்க வந்து கைராட்டை சுத்த பயிற்சி எடுத்துக்கிட்டேன். மீனாக்கா சொல்லித் தந்தாங்க! இப்ப நான் தனியாவே கைராட்டை சுத்தி வர்றேன்!'' எனக் கூறும் செல்லம்மாள் முகத்தில் பிரகாசம்.


● ஆராவமுதன்

''**ப**வர் லூம்ல நூல் பிடிச்சிட்டிருந்தேன். வாரம் நானூறு, ஐந்நூறு கிடைச்சது. அங்க இப்ப எல்லாம் மெஷினா மாறிடுச்சாம். அதனால நான் இப்ப கைராட்டைக்கு மாறி வந்துட்டேன். எங்க எல்லாத்துக்குமே மீனாக்காதான் கைராட்டைல நூல் நூற்க பயிற்சி தந்தாங்க. இலவசப் பயிற்சிதான். இப்ப நாங்க எல்லோருமே சூப்பரா கைராட்டையில நூல் நூத்து கை நெறையச் சம்பாதிக்கிறோம்!'' எனச் சொல்லும் செல்வி உட்பட அனைத்துப் பெண்களுமே 'மீனா' என்கிறவரையே கை காட்டுகின்றனர்.


● செல்வி

''நான் பொறந்தது சர்க்கார் கொல்லம்பட்டி கிராமம்.



கைராட்டை!


மீனா

வாக்கப்பட்டது இ.காட்டூர். பத்து வருசமா கால்ல மிதிக்கற பெரிய ராட்டை ஓட்டிட்டிருந்தேன். அப்புறம், அஞ்சு வருஷம் சும்மா இருந்தேன். திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்துலதான் கைராட்டை ஓட்ட கத்துக்கிட்டேன். சொந்த கிராமத்துக்கு வந்தேன். காட்டூர்ல கைராட்டை நூற்பு மையம் உருவாக்கணும்னு தோணிச்சு. காந்தி ஆசிரமத்துல தகவல் சொன்னேன். இப்ப ஒன்பது மாசமா இயங்கி வருது'' என்கிறார் மீனா.


செல்லம்மாள்

''அப்ப இந்த எடம் கூரைக்கட்டா இருந்திச்சு. இது என் இடம். நான் விசைத்தறியில வேலை செய்றேன். என்கிட்ட வந்து இடம் கேட்டாங்க. நம்ப தொழிலாச்சேனு ரெண்டு லட்ச ரூபாய் செலவு செஞ்சு கட்டடமா கட்டித் தந்தேன். மொதல் ரெண்டு மாசம் நான் வாடகையே வாங்கலை. இப்ப மாசம் வாடகையா இருநூற்றைம்பது ரூபா மட்டும் வாங்கிக்கறேன். என்னால அவுங்களுக்குச் செய்ய முடிஞ்ச உதவி இது!'' கட்டடத்தின் உரிமையாளரான பெருமாள்.


பெருமாள்

''ஒரு நபருக்கு மூணு கிலோ பஞ்சு தர்றோம். ஆறு நாள் நூல் நூற்கலாம். ஒரு கிலோவுக்கு அறுபத்தேழு சிட்டம் நூல் சுத்தலாம். இருநூத்தியொரு சிட்டம் நூலுக்கு ரேட் போட்டு, கூலியாகக் கிடைக்கும் ஒரு நபருக்கு. ஒரு நபருக்கு மாசம் ரெண்டாயிரம் ரூபாய்க்குக் குறையாது. காட்டூர் கைராட்டை, கிராமப்புறப் பெண்களுக்கு வருவாய்க்கு வழிகாட்டும் ராஜபாட்டை!'' என்கிறார் காந்தி ஆசிரமத் துணைத் தலைவர் ஆராவமுதன்.

வாசகர் யோசனை: மைதிலி - சேலம்

தீராத விளையாட்டு விட்டலன் 14

நாராயணனுக்கு

ராமனின் தரிசனம் வேண்டுமென்றால் அனுமனின் பரிந்துரை தேவை. இப்படிச் சிந்தித்த நாராயணன் அனுமனைக் குறித்து தவம் செய்யலானான். மனமொன்றிய தவம். நீண்ட நாள் தவம்.

அனுமன் நாராயணனுக்குக் காட்சியளித்தார். மனமுருகிப் பணிந்தான் நாராயணன். 'எனக்கு ராமபிரானின் தரிசனம் வேண்டும்' என்று வேண்டினார்.

'நீ எனது அம்சம். உனக்கில்லாத ராம தரிசனமா?' என்றபடி நாராயணனின் கைகளைப் பற்றி பஞ்சவடியை நோக்கிப் புறப்பட்டார் ஆஞ்சநேயர். அப்படி ஒன்றும் அருகாமையில் இருந்துவிடவில்லை பஞ்சவடி. எனினும் மாருதியே வழிநடத்தும்போது கால்வலியெல்லாம் ஒரு பொருட்டாகத் தெரியவில்லை நாராயணனுக்கு.



பஞ்சவடியில் திருவிழாக் கோலம். பக்தர்கள் ஆடிப்பாடி பேரின்பத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இதையெல்லாம் காணவும் கேட்கவும் பேரானந்தமாக இருந்தது நாராயணனுக்கு.

இரவானதும் ஒலிகள் அடங்கின. ஓர் அந்தண உருவை எடுத்துக்கொண்ட அனுமன், நாராயணனை அழைத்துக் கொண்டு அங்கிருந்த ராமபிரானின் ஆலயத்துக்குள் நுழைந்தார். கருவறைக்குள் நுழைந்தார். அங்கே ராமபிரான் அனுமனுக்குக் காட்சி தந்தார்.

'என்ன ஆஞ்சநேயா, எப்படி இருக்கிறாய்? உன்னை முதன்முதலாகச் சந்தித்தபோது நீ இதேபோல ஓர் அந்தணச் சிறுவனின் உருவத்தில் வந்துதான் என்னுடன் பேசினாய். நினைவிருக்கிறதா?' என்றார்.

'மறக்க முடியுமா ஐயனே, என் வாழ்வின் முக்கிய திருப்புமுனையே அதுதானே.' கூறும்போதே... ஆனந்தக் கண்ணீர் வழிந்தது அனுமனின் கண்களில்.

தொடர்ந்து மேலும் சிறிது நேரம் ராமபிரானும் அனுமனும் பேசிக் கொண்டிருந்தனர். பின் சட்டென நாராயணனின் பக்கமாகத் திரும்பிய அனுமன், 'கண்கள் குளிரப் பார்த்துக்கொண்டாயா ராம பிரானை?' என்றார்.

நாராயணனுக்குக் குழப்பமாக இருந்தது. 'ஐயா, நீங்கள் பேசுவது கேட்கிறது. ராமபிரான் பேசுவது எனக்குக் கேட்கவில்லை. அவரது திருஉருவமும் எனக்குத் தெரியவில்லை' என்றார் தாங்கமுடியாத ஏக்கத்துடன்.

'அடடா! ராமபிரானை இவனால் தரிசிக்க முடியவில்லையே. உரிய குருவின் மூலமாக இவனுக்கு உபதேசம் நடக்கவில்லை. அதனால்தான் இப்படி' என்று யோசித்த அனுமன் சட்டென ஒரு முடிவுக்கு வந்தார். 'நீங்களே இவனுக்கு குருவாக இருக்க வேண்டும் என்பது எனது வேண்டுகோள்' என்றார் ராமனிடம்.

அடுத்த கணம் எவருக்கும் கிடைத்திராத அந்தப் பேறு நாராயணனுக்குக் கிடைத்தது. அவன் தலைமீது தமது வலது கரத்தை வைத்தார் ராமபிரான். அதே நிலையில் அவனது வலது காதில் ராமதாரக மந்திரத்தை

குரு ராமபிரான்

பாகம்-2

அருண்சரண்யா

உபதேசித்தார்.

தொடர்ந்த கணங்களில் ராமபிரான், நாராயணன் கண்களுக்குத் தோற்றமளித்தார். பக்தியிலும் பரவசத்திலும் நடுங்கித் தான் பணிந்தவனிடம் 'நாராயணா, இன்றுமுதல் நீ ராமதாஸன். நாட்டு மக்களுக்குப் பக்திப் பாதையைக் காட்டும் பொறுப்பு உனக்கு உண்டு. நீ மிகச் சிறந்த வாழ்க்கையை அடைவாய். அரசரே உனக்குப் பல்லக்குத் தூக்கும் அளவுக்கு உனது வாழ்க்கை, செல்வாக்குப் பெறும்' என்றார்.

'இதைவிட உனக்கு என்ன வேண்டும்?' என வாழ்த்திவிட்டு அனுமன் புறப்பட்டார். ஆனால் அவர் விரலை இறுகப் பற்றிக் கொண்டார் ராமதாஸர்.

'என்னுடனே சிறிது காலம் இருக்க வேண்டும்' என்றார்.

மறுக்க முயற்சி செய்தார் அனுமன். ஆனால் 'நாம் இருவருமாகப் பொதுமக்களிடையே ராம பஜனை செய்யலாம்' என்று ராமதாஸர் கூறியதும் மறுக்கும் முயற்சியைக் கைவிட்டார்.



ராமரின் புகழ், குருவும் சீடனுமாக அமைந்த அந்த இருவரின் பாடல்களில் அமைந்த கருத்துச் செறிவு, இனிமையான இசை அனைத்துமாகச் சேர்ந்து மக்களை அவர்களின் இசை நிகழ்ச்சிகளுக்கு ஓடிவரச் செய்தது. பின்னர் ஒரு காலக்கட்டத்தில் தமக்கு விடை தருமாறு கூறினார் அனுமன். தயக்கத்துடன் ஒத்துக்கொண்டார் ராமதாஸர்.

தினமும் ராம பஜனை, பிற நேரத்தில் வனத்துக்குச் சென்று கடுமையான யோகாசனம் செய்வது என்று தமது தினசரி வாழ்க்கையை அமைத்துக் கொண்டார் ராமதாஸர்.

ஒரு காலக்கட்டத்தில் கிருஷ்ணா நதிக்கரையில் இருந்த ஒரு வனத்தில் தவம் புரியத் தொடங்கினார். தொடர்ந்தது நீண்டகால தவம். காட்டில் உள்ள மிருகங்கள் எல்லாம் அவரைச் சுற்றி வந்து வியப்புடன் நோக்கின.

ஒருநாள் சத்ரபதி சிவாஜி அந்தக் காட்டுக்கு வேட்டையாட வந்தார். மிகவும் அமைதியாக இருந்தது அந்த வனம். 'என்ன இது, விலங்குகளின் சலசலப்பைக் காணோமே' என்று நினைத்தபடியே மேலும் காட்டுக்குள் நுழைந்தார். அங்கே ஒரு பெரியவர் கண்மூடி ராமநாமத்தைக் கூறிக்கொண்டே இருந்தது சிவாஜியின் கவனத்தைக் கவர்ந்தது. அவரைச் சுற்றிப் பல விலங்குகள் உட்கார்ந்திருந்ததைக் கண்டார். பெரியவரோடு பேச விரும்பினார். ஆனால் இதனால் விலங்குகளின் கவனம் கலையும். ஏதாவது விலங்கு பெரியவரைத் துன்புறுத்தக் கூடும் என்ற பயம் ஏற்பட்டது. அடுத்தநாள் சந்திக்கலாம் எனத் திரும்பிவிட்டார்.

அடுத்தநாள் வந்தபோதும் பல மிருகங்கள் ராமதாஸரைச் சுற்றிலும் காட்சியளித்தன. 'சந்திப்பதற்கான நேரம் கனியவில்லை.'

சிவாஜி அரண்மனைக்குத் திரும்பிவிட்டார். இப்படிப் பலமுறை முயன்றும் சிவாஜியால் அந்த ராமதாஸரைச் சந்திக்க முடியாமல் போனது.



'பெரியவரைச் சுற்றியிருக்கும் விலங்குகளில் சிங்கம், புலி போன்ற விலங்குகளோடு ஆடு, மாடு போன்றவையும் காணப்படுகின்றனவே, அவை எப்படிப் பாதுகாப்பாக இருக்கின்றன?' யோசிக்க யோசிக்க இந்த அற்புதத்தின் அடிப்படையாக அந்தப் பெரியவர்தான் இருக்க வேண்டும் எனத் தோன்றியது. 'எப்படியும் அவரைச் சந்தித்தே ஆக வேண்டும்.'


இப்படித் தீர்மானித்த போது கிருஷ்ணா நதியில் சில ஓலைகள் மிதந்து வருவதைக் கண்டார். அந்த ஓலைகளை எடுத்துப் படித்தார். மராட்டி மொழியில் எழுதப்பட்ட கவிதைகள். ஒவ்வொரு கவிதைக்குக் கீழும் 'ராமதாஸ்' என்ற பெயர் காணப்பட்டது.

உடனடியாக வனத்தை நோக்கி விரைந்தார். பெரியவர் இருந்தார். விலங்குகள் இல்லை. இனி அவரைச் சந்திக்கத் தடுக்கும் விலங்குகள் நகர்ந்தன என ஆனந்தம் கொண்டார் சிவாஜி. பெரியவரை நெருங்குகையில் வேறொரு மாபெரும் வியப்பு காத்திருந்தது அவருக்கு. தங்கத் திருமேனியோடு அவரிடம் பேசிக் கொண்டிருந்தார் அனுமன். சிவாஜி ராமதாஸரை மேலும் அணுகியபோது அனுமன் அங்கே இல்லை. ராமதாஸரின் கால்களில் விழுந்தார் சிவாஜி.

'எனக்கு மெய்ஞானம் அருள வேண்டும்' என்றார்.

'நீ ஒரு மன்னன். என்னால் உனக்கு உபதேசம் செய்ய முடியாது. நீ வேறு யாரையாவது குருவாக அணுகு' என்றார் ராமதாஸர்.

'நான் உங்களைத்தான் என் குருவாகக் கருதுகிறேன். நீங்கள் எனக்கு அருளவேண்டும்' என்றார். ஒருவழியாக ராமதாஸர் ஒத்துக்கொண்டவுடன் சிவாஜி அவரை நமஸ்கரித்தார்.



அபங்க அமுதம்

யேதேஉபா காஸ்ரீராமா மனமோஹன மேகச்யாமா
சாப பாண காயகேலே கர கடாவரீடேவிலே
காய கேலீ அயோத்யாபுரீ யேதே ரசவிலீ பண்டரீ
காய கேலீ சரயூகங்கா யேதேவாஹே சந்த்ரபாகா
காய கேலீ ஸீதாபாயீ யேதேராயீ ரகுமாபாயீ
காய கேலா ஹனுமந்த யேதே புண்டலீகபக்த
காய கேலேவானரதள யேதே மிளவிலே கோபால
ராமதா ஸீஜைஸா பாவ தைஸா ஜாலாபண்டரீராவ

- சமர்த்த ராமதாஸர்

'ஸ்ரீராமா! மனம் கவர்ந்தவனே! இங்கு பண்டரியில் ஏன் நிற்கிறாய்? உன் வில்லையும், அம்பையும் என்ன செய்தாய்? இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு நிற்கிறாய். அயோத்யாபுரியை என்ன செய்தாய்? கங்கையையும், ஸரயுவையும் என்ன செய்தாய்? இங்கு சந்த்ர பாகா ஓடுகிறது. சீதையை என்ன செய்தாய்? இங்கு ரகுமாபாயீ அல்லவா உடனிருக்கிறாள்! அனுமனை என்ன செய்தாய்? இங்கு புண்டலீகன் அல்லவா இருக்கிறான்? வானர சேனை என்னவானது? இங்கு கோபாலர்களுடன் அல்லவா சேர்ந்திருக்கிறாய். ஆஹா, விட்டலன் என் மனோதர்மத்துக்கு ஏற்ப இங்கு ராமனாகவே ஆகிக் காட்சி அளிக்கிறானே!'



'என்னை உங்களுக்கு அர்ப்பணிக்கிறேன் குருதேவா' என்றார்.

'உன் நாட்டுக்குச் செல். ராமநாமத்தைத் தொடர்ந்து சொல். தெய்வ பக்தியை மேலும் பரப்பி மக்களை நல்வழிப்படுத்து' என்றார்.

சிவாஜிக்குத் தயக்கம் உண்டானது. 'என் குடிமக்களைக் காப்பாற்றும் பொறுப்பு எனக்கு இருக்கிறதே. என்னை உங்களுக்கு அர்ப்பணித்து விட்டதால் என் குடிமக்களைக் காப்பாற்றும் பொறுப்பு இப்போது உங்களுக்கும் உண்டு. நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதைச் செய்கிறேன்' என்று பணிந்து நின்றார்.

ஆக, ராமதாஸர் அரசியலுக்குள் மெல்ல இழுக்கப்பட்டார்.

சிவாஜியின் பேரன்புக்கும் பெரும் மரியாதைக்கும் உரியவராக ராமதாஸர் ஆனது பலருக்கும் பிடிக்கவில்லை. மன்னர் கைசொடுக்கினால் மற்றவர்கள் அரண்மனைக்கு வந்து நிற்க வேண்டும். அப்படியிருக்க யாரோ ஒரு பித்தம் பிடித்த சன்யாசி போலக் காட்சியளிக்கும் ஒருவரை சந்திக்க அடிக்கடி மன்னர் காட்டுக்குச் செல்வதா?

இந்த நிலையில் தத்து என்ற பெயர்கொண்ட நாவிதன் ஒருவன் ராமதாஸரை அணுகி, தம்மை அவர் சீடனாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினான். ஏற்றுக்கொண்டு அவனுக்கு உபதேசம் செய்தார் ராமதாஸர். இருவருமாகப் பல்வேறு இடங்களுக்குச் சென்று ராமபிரானின் புகழைப் பரப்பத் தொடங்கினர். வழியில் ஓரிடத்தில் இளைப்பாறினர். தத்துவுக்கு கடும் பசி. அங்கிருந்த சோளக் கொல்லையிலிருந்த சிறு சோளம் ஒன்றை எடுத்துச் சாப்பிட்டுவிட்டார். அப்போது அங்கு வந்த விளைநிலத்தின் சொந்தக்காரன் தத்துவை நன்கு அடித்தார். கூடவே அருகிலிருந்த ராமதாஸரையும் நன்கு அடித்தார். 'ஐயோ, இவரையா அடிக்கிறீர்கள்? இவர் யார் தெரியுமா?' என்ற தத்து கதறத் தொடங்க, அவனை அடக்கினார் ராமதாஸர்.

யாத்திரை தொடரும்



மனஅழுத்தத்தின் அறிகுறியா?!

கிருஷ்ணய்யர், தஞ்சாவூர்

'நான் இரவு தூங்கி காலையில் எழும்போது, குதிகால் வலி வந்து ரொம்பவும் கஷ்டப்படுகிறேன். காலை கீழேயே வைக்க முடியவில்லை. காரணம் மற்றும் தீர்வு என்ன?'

மூளை, நரம்பியல் நிபுணர் வி. நாகராஜன்: ''குதிகால் வலி பெரும்பாலும் கால் நரம்பு பலவீனத்தால் வருவது. காலில் உள்ள நரம்புகளின் அழுத்தத்தாலும் வரும். காலில் அணியும் செருப்பின் அளவு சரியாக இல்லாமல் இருந்தாலோ, அல்லது ப்ளாட்ஃபார்ம் இல்லாத ஹை ஹீல்ஸ் போடுவதாலோ, குஷன் இல்லாத கட்டையான செருப்புகளை அணிவதாலோ, செருப்புப் போடாமல் வெறுங் காலில் நடப்பதாலோ குதிகால் வலி வர வாய்ப்பு இருக்கிறது. சில சமயங்களில் முள் மாதிரியான எலும்புகள் குதிகால்களில் வளர்வதாலும், வலி வரும். இதை calcaneal spur என்று சொல்வார்கள். முடிந்த வரை ஹை ஹீல்ஸ் போடாமல் இருப்பது, தேவைப்பட்டால், ப்ளாட்ஃபார்ம் கொண்ட ஹை ஹீல்ஸ் போடுவது, diclofenac கொண்ட க்ரீம்களைத் தடவிக் கொள்வது, இந்தக் க்ரீமைத் தடவுவதற்கு முன் இளஞ்சூடான நீரால், குதிகால் பகுதியில் ஒத்தடம் கொடுப்பது ஆகியவை வலியைக் குறைக்க உதவும்.''

ஜி.எம்.மஞ்சரி, கிருஷ்ணகிரி

நகம் கடிக்கும் பழக்கம் பரவலாக எல்லாக் குழந்தைகளிடமும் காணப்படுகிறது. இந்தப் பழக்கம் ஏன் ஏற்படுகிறது? இதை மறக்கடிக்க என்ன செய்யலாம்?

குழந்தைகள் மன நல ஆலோசகர் வெங்கட்ரமணி: ''நகம் கடிப்பது தொண்ணூறு சதவிகிதக் குழந்தைகளுக்கு மூன்று வயதுக்கு மேல் ஆரம்பமாகும். இதற்கு அடிப்படைக் காரணம் மன அழுத்தம். நகம் கடிக்கும் பழக்கம் உள்ள குழந்தைகள் பெரும்பாலும் கூச்ச சுபாவம் உள்ளவர்களாக இருப்பார்கள். அம்மாவுக்கோ, அப்பாவுக்கோ நகம் கடிக்கும் பழக்கம் இருந்தால், குழந்தைக்கும் அது தானாக வரும். இரவில் படுக்கையை நனைக்கும் பழக்கமும், நகம் கடிக்கும் பழக்கமும் சேர்ந்து இருந்தால் ஒரு தேர்ந்த மன நல ஆலோசகரைப் பார்த்து விடுவது நல்லது.





* வெங்கட்ரமணி * நாகராஜன்

பெற்றோர்களிடமிருந்து வரும் அன்பான, கனிவான பேச்சு மற்றும் குழந்தைகளிடம் காட்டும் அக்கறைதான் இதற்கான மருந்து. நகம் கடிக்கும் பழக்கத்தை மாற்ற தனியாக மருந்து மாத்திரைகள் கிடையாது.''

சுஜாதா, திருவையாறு

உடல் சுறுசுறுப்பாகவும், இளமையாக வும் இருக்க பயிற்சிகள் இருப்பதைப் போல, நமது மூளை சுறுசுறுப்பாகச் செயல்பட பயிற்சிகள் இருக்கிறதா?

மூளை நரம்பியல் நிபுணர் வி.நாகராஜன்: ''நிச்சயம் நமது மூளையைச் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ள சில சின்னச் சின்ன எளிய பயிற்சிகளை நாம் அன்றாடம் மேற்கொண்டு வந்தால் போதுமானது. மூளை ஆரோக்கியமாகச் செயல்பட, தேவையில்லாத கவலைகளைத் தவிர்க்க வேண்டும். எதையுமே முன்கூட்டியே ப்ளான் செய்து விட்டால், கவலை இருக்கவே இருக்காது. ஒவ்வொரு நிமிடத்தையும் திட்டம் இட வேண்டும். sudoku, குறுக்கெழுத்துப் புதிர், வித்தியாசங்கள் கண்டுபிடிப்பது, அடிக்கடி நாமே நமக்கு ஞாபகமூட்டும் பயிற்சிகளை மேற்கொள்வது மூளைக்கு நல்ல தீனியைக் கொடுக்கும். ஞாபகம் வரவில்லை என்றாலும், எப்படியாவது திரும்பத் திரும்ப யோசித்து ஞாபகத்தில் கொண்டு வரும் பயிற்சியை நமக்கு நாமே செய்து கொள்ள வேண்டும். நல்ல வேடிக்கையான கதைகளைப் படிப்பது, அதைப் பிறருக்குச் சொல்வது நல்லது. வால்நட், சிறிதளவு பாதாம் பருப்பு, berries பழங்கள், கேரட், முள்ளங்கி மற்றும் பீட்ரூட்களின் தோலை நன்றாகச் சீவிவிட்டு அந்தக் காய்களை உப்புத் தண்ணீரில் ஒரு பத்து நிமிடம் ஊறவிட்டுச் சாறு எடுத்துச் சாப்பிடுவது, முட்டையின் மஞ்சள் கரு மற்றும், முளை கட்டிய தானிய வகைகள் எல்லாமே மூளையின் செயல்பாட்டைத் துரிதப்படுத்தும்.''

தொகுப்பு: **நளினி சம்பத்குமார்**



உங்கள் சந்தேகங்களை 'கல்கி கிளினிக்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்ஃபோனில், kacli என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

எந்த ஊர்லேயாவது பனைமரத்துல பந்தல் போட்டு, கல்யாணம் பண்ணுவாங்களா? ஆனா நடந்திருக்கே. அதுக்கு நாம ஔவையார் காலத்துக்குப் பின்னோக்கிப் போகணும்.

பாரி வள்ளலோட அழகு நிறைந்த பெண் செல்வங்கள் அங்கவை, சங்கவை. சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் முன்னிலையில் அங்கவை, சங்கவை என இரு பெண்களுக்கும் திருமணம். ஔவை பிராட்டிதான் கல்யாணத்தை நடத்தி வைக்குறாங்க. அந்தக் கல்யாணத்துக்குத்தான் பனைமரங்களைக் கொண்டு பந்தல் போட்டிருக்கு. காய்ந்த பனைமரங்களை வெட்டிப் போடப்பட்ட பந்தல்ல, கல்யாணம் முடிஞ்சதுக்கப்புறம் சில நாட்கள் கழித்து அத்தனை பனைமரங்களும் துளிர்த்திருக்கு. என்ன விந்தை இது? காய்ந்த பனை துளிர்க்குது!

பனைமரப் பந்தல் போட்டு கல்யாணம் நடந்த இடம்தான், இப்போதிருக்கும் உத்தமசோழபுரம் கிராமம். அதன் இறைவன் கரபுரநாதன். இறைவி பெரிய நாயகி. சேலம் - ஈரோடு சாலையில் ஐந்து கி.மீ.தூரத்தில் உள்ளது உத்தமசோழபுரம்.

மணிமுத்தாறு நதிக்கரையில் அமைந்துள்ளது, உத்தமசோழபுரம் கரபுரநாதர் ஆலயம்.

சுயம்பு மூர்த்தியாக லிங்கத் திருமேனி கொண்டு காட்சி தரும் கரபுரநாதர், இடது புறம் சற்றே சாய்ந்துள்ளார். ஏன்? கோயில் குருக்கள் ஒருநாள் ஊரில் இல்லை. பூஜை செய்வதற்கென குருக்கள் மகன் (சிறுவன்), கோயிலுக்குப் போகிறான். பூஜை வேளையில் லிங்கத் திருமேனி மீது அச்சிறுவனால் பூமாலை சாற்ற முடியவில்லை. வருந்துகிறான் சிறுவன். கருணை உள்ளம் கொண்ட கரபுரநாதர், தம் தலைமுடி சாய்த்து பூமாலையை ஏற்றுக்கொள்கிறார். சற்றே தலை சாய்ந்த லிங்கத் திருமேனியே நிலைத்துப் போயிற்று.

இராவணனின் தம்பி கரதூசனன் அரச பதவி கேட்டு இங்கு வந்து பூஜித்துள்ளதாகப் புராணங்கள் கூறுகின்றன. கரன் பூஜித்ததால் கரபுரநாதர் என்கிற காரணப் பெயரும் நிலைத்துப் போனது! கோயில் கட்டுமானங்களில் புலி, மீன், வில் என மூவேந்தர்களின் சின்னங்கள்





ஆங்காங்கு பொறிக்கப்பட்டுள்ளன. சேர, சோழ, பாண்டிய மன்னர்களிடையே அடிக்கடி போர் மூண்டு வந்துள்ளது. மூவேந்தர்களையும் இக்கோயி லுக்கு வரவழைத்து, சந்தித்துப் பேசி சமாதானம் செய்து வைத்துள்ளார் ஔவை பிராட்டி.

ஒருமுறை ஔவை மிகுந்த வெப்பத்தையும் பொருட்படுத்தாது கால்நடையாக இங்கு வந்து வழி பட்டபோது, சிவனும் பார்வதியும் ஔவை முன் தோன்றியுள்ளனர். உத்தமமான பக்தி வெளிப்பட்ட தாலும், சோழ மன்னர்களால் கோயில் கட்டப்பட்ட தாலும் இது உத்தமசோழபுரம் ஆயிற்று. ஔவைக்கு இத்தனை முக்கியத்துவம் இருப்பதாலோ என்னவோ, கோயில் வாசலில் ஔவை பிராட்டிக்குப் பெரிய சிலை.

கல்யாண ராசி கொண்ட கோயில் இது! ஔவை பிராட்டிக்கு மாலை சாற்றி வந்த தொண்ணூறு நாட் களில், கல்யாணம் கைகூடி வருவதாகச் சொல்லப் படுகிறது. அங்கவை-சங்கவைக்கே கல்யாணம் நடத்தி வைத்த ஔவையார், தம்மை நாடி வந்து விண்ணப்பிக்கும் இதயங்களின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்காமல் போய்விடுவாரா என்ன?

வாசகர் யோசனை:

சிம்மவாஹினி, சென்னை

பனைமரப் பந்தல் கல்யாணம்!



சத்யசாயி பாபாவின் தரிசனம் அட்டைப் பக்கத்தில் கல்கி வாசகர்களுக்குக் கிடைத்தது மிக்க மகிழ்ச்சி.

- நா.பாலசுப்பிரமணியன், சென்னை

ஊர்வசியில் 'காலையில் எழுந்தவுடன் சிரிப்பு' இனிதான் வேகமெடுக்கப் போகிறது என்று நினைத்திருந்த சமயத்



தில் 21 வாரங்களில் முடித்துக்கொண்டது ஏமாற்றத்தைத் தந்தது.

- அ. அப்துல் காதர், சென்னை

பத்திரத்தைப் பத்திரமாக மீட்பது எப்படி? என்பதற்கு கொஸ்டின் பேங்க்கில் வெளியான பதில் படித்துப் பத்திரப்படுத்தப்பட வேண்டிய ஒன்று!

- ஜி.எம்.மஞ்சரி, கிருஷ்ணகிரி

"ஜோக்குகளை இன்னும் கொஞ்சம் அதிகமா போடுங்க சார். வாசகர்கள் சிரிச்சிட்டுப் போகட்டும்..."

- எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

'ஓ' பக்கங்கள் செம சூடு! ராசாவின் ஸ்பெக்ட்ரம் ஊழலை அக்குவேறு... ஆணி வேறாகப் பிரித்துவிட்டார் ஞாநி.

- வே.முருகேசன், சென்னை

'ஒரே ஒரு கேள்வி'க்கு 'ஒரே ஒரு பதில்' அளித்த அந்த ஓரிரு பக்கங்களும் திரும்பத் திரும்பப் படிக்க வைத்தன!

- ஆர்.தனபால், சென்னை

பயாஸ்கோப் பக்கத்தில் பாக்யராஜின் ஆதங்கம் ஆச்சர்யம். நல்ல நேரத்தையும், அதிர்ஷ்டத்தையும் நம்பும் மனிதர் எப்படித் தமிழக முதல்வர் பக்கம்?

- பி. ராம்பிரசாத், சென்னை

டிரிபின் பாசிட்டிவ் விஷயங்களின் பலனாக 'நகரம்' டபுள் பாசிட்டிவ்வாக வந்திருக்கும் உற்சாகத்தில் பேட்டி தந்துள்ளாரோ சுந்தர்.சி.

- நித்யா வெங்கடேஷ், ஜமீன்பல்லாவரம்

'நான் ஒரு நக்சலைட்' என்ற கவிஞர் தாமரையின் கூற்றுப்படி பார்த்தால் 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாடிய பாரதியையும் நக்சலைட் என்பாரோ? கவிஞர்களின் தார்மிகக் கோபம் சமூகத்தைச் சீர்திருத்துவதாக இருக்க வேண்டுமே ஒழிய... சமூகத்தைச் சீர்குலைக்கும் தீவிரவாதமாக மாறக் கூடாது. **- பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு**

இரண்டு கார்ட்டூன்களுமே சூப்பர்! இதில் எது ரொம்ப சூப்பர் எனக் கூறுவது கடினம்!

- ராஜிராதா, பெங்களூரு

ராசாவை ராஜினாமா செய்யக் கோருவது மட்டுமல்ல ஜனநாயகம்; அவரால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகையைத் திரும்பவும் அரசு கஜானாவுக்குக் கொண்டுவரப் போராடுவதே (?!) உண்மையான ஜனநாயகம்!

- கு.ப.இரகுநாதன், பூவிருந்தவல்லி

"வெங்கடேஷ் பட்... என்னைத் தெரியுதா?"

ஒரு நிமிடம் குழம்பிப் போனேன். திடீரென்று ஒரு பெண் கூப்பிட்டுத் தெரியுமா என்றால் என்ன சொல்ல?





"தெரியலை மேடம். நீங்க யாரு?"

"என்னை உங்களுக்கு நல்லா தெரியும். யோசிக்கப் பாருங்க."

இன்னும் குழம்பிப் போனேன். பக்கத்தில் புது மனைவி வேறு. லேசாகப் புருவத்தை நெருக்குவது தெரிந்தது. எதிர்ப் பக்கம் பொறுமை போய்,

"நான் ஸ்ரீதேவி?"

"ஸ்ரீதேவி? எந்த ஸ்ரீதேவி?"

"ஸ்ரீதேவி போனிகபூர்."


சே. பாலிவுட்டையும் கோலிவுட்டையும் டாலிவுட்டையும் கிரங்க வைத்த ஸ்ரீதேவி, என் செல்ஃபோன் நம்பரைக் கண்டுபிடித்துக் கூப்பிடும்போது, நான் டம்மி பீஸாக இருந்தால் யாருக்குத்தான் எரிச்சல் வராது.

ஸ்ரீதேவி பெயரைக் கேட்டவுடன் என் மனைவி துள்ளிக் குதிக்காத குறைதான். யாருக்குத்தான் அந்த ஆவல் இருக்காது. அவரது நடிப்பில் வடநாடு இல்லை, தென்னாடு இல்லை, எல்லா நாட்டு ரசிகர்களும் கிறங்கித்தானே போனார்கள்!

ஸ்ரீதேவியை நினைக்கும்போதெல்லாம், போனி கபூர் இல்லாமல் பேச முடியாது. இருவரும் அப்படி ஒரு ஐடியல் ஜோடி. ஒரு சமையல்காரன்தானே என்று எந்த ஒரு விலகலும் இல்லாமல் என்னிடம் பழகிய அற்புத ஜோடி அவர்கள்.

ஒரு நாள் இரவு பத்தரை மணி

சூப்பர் ஷெஃப் வெங்கடேஷ் பட்



இளநீர் பாயசமும் நெல்லூர் சாப்ளகூராவும்!

இருக்கும். போனி கபூர் கூப்பிட்டார்.

"நாங்க ஸ்ரீநகர்லேருந்து பேசறோம். ரெஸ்டரண்ட் வந்துகிட்டே இருக்கோம். எனக்குப் பிடிச்ச அலெப்பி ஃபிஷ் கறியும் இளநீர் பாயசமும் செஞ்சு வையுங்க.."

"சரி வாங்க சார். இன்னும் பத்து நிமிஷம் ஆகுமா?"

கேட்கும்போதே, எனக்கு லேசா யோசனை. சென்னையில் எங்க ஸ்ரீநகர் இருக்கு? ஸ்ரீபுரம் இருக்கு. சிஐடி நகர் இருக்கு. அடையாறு இருக்கு. அப்போ, ஸ்ரீதேவியும் போனி கபூரும் சென்னையிலதான் அதிகம் இருப்பாங்க. இங்க ஒரு பெரிய பங்களா கட்டிகிட்டிருந்தாங்க. அதனால், எப்பவும் எங்க ரெஸ்டாரண்ட் தான் வந்து சாப்பிடுவாங்க.

"இல்லப்பா. நாங்க காஷ்மீர் ஸ்ரீநர்ல இருக்கோம். கார்கில் வார் சம்பந்தமா ஒரு புரோகிராமுக்கு வந்தோம். பத்தேமுக்காலுக்கு ஃபிளைட்டு. பனிரெண்டே முக்காலுக்கு மெட்ராஸ் வந்துடுவோம்."

எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல. நான் டியூட்டி முடிச்சுட்டு வீட்டுக்குக் கிளம்பிட்டேன்.

"இங்க புரோகிராம் நடக்கும்போதே, உன் கையால அலெப்பி ஃபிஷ் கறி சாப்பிடணும்னு தோணிடுச்சு. எடுத்து வெயிப்பா. காஃபி ஷாப்ல வேணும்னா குடுத்துட்டுப் போ. நான் வந்து சாப்பிட்டுக்கறேன்."

இதுதான் போனி கபூர். பயங்கர உணவுப் பிரியர். வஞ்சனையே இல்லாமல் சாப்பிடணும். வாழ்க்கையை சந்தோஷமா அனுபவிக்கணும். அவருக்கு லேடி ஃபிஷ்னு ஒரு மீன் ரொம்பப் பிடிக்கும். தமிழ்ல கெலங்கா மீன்னு சொல்லுவோம். இதுல கொழுப்பு சத்து ரொம்பக் குறைவு.

அதேபோல் இளநீர் பாயசம் ரொம்ப பிடிக்கும். ரொம்ப சிம்பிளான பாயசம் இது. வெல்லத்தைக் கொஞ்சம் தண்ணீரில் போட்டுக் கரையவிட்டு வடிகட்டி எடுத்துக்கணும். கூடவே கெட்டி பால், இளநீர், துருவிய தேங்காய் எல்லாத்தையும் போட்டு, அடுப்பில் ஏற்றி, கொஞ்ச நேரம் சூடு செய்யணும். ஒரு கொதி வந்தவுடன் இறக்கி, ஏலக்காய் பவுடர், குங்குமப்பூ, பிஸ்தா தூள் எல்லாம் தூவிக் கொடுத்தா, மனுஷன் துள்ளிக் குதிப்பார்.

கேட்டுக் கேட்டு வாங்கிச் சாப்பிடுவார். இத்தனைக்கு ஸ்ரீதேவி பயங்கர ஸ்டிரிக்ட். வேண்டாம், வேண்டாம்னு சொல்லுவாங்க. போனி கபூர் கேக்கவே மாட்டார்.

இதேபோல, அவருக்கு டபுள் பாயில்டு ரைஸ்தான் ரொம்ப விரும்பிச் சாப்பிடுவார். ரெண்டு முறை வேக வெச்ச சாதம். முதல் முறை பாதி வேக வெச்சி எடுத்துக்கணும்.

ரெண்டாவது முறை திரும்பியும் வேக வைக்கணும். கூழ் மாதிரி நல்லா கனிஞ்சு போயிருக்கும் சாதம். அம்மாக்கள், குழந்தைகளுக்குப் பருப்பு சாதத்தைக் கொழையக் கொழைய பிசைஞ்சு ஊட்டுவாங்களே... அப்படி இருக்கும் சாதம்!

இதுக்கு நேர் எதிர், ஸ்ரீதேவி. பயங்கர கண்ட்ரோல். இன்னிக்கு மார்க்கெட்டு இல்லைன்னாலும் எவ்வளவு டிரிம்மா இருக்காங்க இல்ல. அதுக்குக் காரணம், அவங்களோட கண்ட்ரோல்தான்.

நிறைய காரம் சாப்பிடுவாங்க. நெல்லூர் சாப்ளகூரா அவங்க ஃபேவரிட். சாப்ளன்னா மீன், கூரான்னா குழம்பு. நெல்லூர் மீன் குழம்பு. அதேபோல், சிக்கன். எண்ணெய்யில பொறிச்சதைத் தொடவே மாட்டாங்க. எண்ணெய் வழியிற எதையும் தொடவும் மாட்டாங்க.

இதையெல்லாம் விட அழகு, அவங்க ஃப்ரெண்ட்ஸுகளுக்குக் கொடுக்கிற டின்னர்தான். ஒவ்வொரு முறையும் மிகக் கவனமா, வரக்கூடிய விருந்தாளிகளுக்கு என்ன பிடிக்கும், அவங்க ரசனை, அவங்க சுவை எல்லாத்தையும் பார்த்துப் பார்த்து டின்னர் தயார் செய்யச் சொல்லுவாங்க.

ராஜ்குமார் சந்தோஷி, ரஜினி, அஜித்னு நிறைய பேர் அவங்களோட டின்னர் சாப்பிட்டு இருக்காங்க. அஜித்தும் ஷாலினியும் எனக்கு ரொம்ப ஸ்பெஷல்.

என்ன ஸ்பெஷல்?

(அடுத்த வாரம்)



கிச்சன்.காம்

நீர் தோசை

தேவையான பொருட்கள்:

அரிசி - 3 கப், தேங்காய் துருவல் - ½ கப், உப்பு - தேவையான அளவு.

இரவு அரிசியை ஊற வைத்து, காலையில் அதனோடு தேங்காய் சேர்த்து கொஞ்சமாய் தண்ணீர் விட்டு நைசாய் அரைத்து உப்பு சேர்த்துக் கொள்ளுங்கள். பின்னர் சாதாரணமாக சேர்க்கக்கூடிய தண்ணீரை விட, 3, 4 கப்கள் அதிகமாக தண்ணீர் சேர்த்து, தோசை மாவை நீர்க்க ஆக்கிக் கொள்ளுங்கள். தோசைக்கல்லில் எண்ணெய் விட்டு, நன்கு சூடான பிறகு மெல்லிசாய் தோசைமாவை விடுங்கள். தோசையைத் திருப்பத் தேவை இல்லை அப்படியே வெந்துவிடும். அப்படியே சாப்பிடலாம்!



வாசகர் போட்டி-1

சேலம் மாவட்ட வாசகர்களுக்கு மட்டுமே!

சேலம் மாவட்ட வாசகர்களே ...

உங்களுக்கு ஒரு குட் நியூஸ்.
கல்கி சேலம் மாவட்ட ஸ்பெஷலில் உங்களை
உற்சாகப்படுத்த இதோ

சேலம் மாவட்ட வாசகர் போட்டிகள்

(போட்டி-I (5.12.10 இதழில்) +
போட்டி - II (12.12.10 இதழில்) முறையே...
கலந்துகொண்டு ஜமாய்ங்க...



1. முருகனுக்கு மூத்த தலம் எது?
☐ தாரமங்கலம் ☐ ஆறகளூர் ☐ தாடிக்கொம்பு

2. ஏற்காடு மலையின் பெயர் என்ன?
☐ சேர்வராயன் ☐ டாப் ஸ்லிப் ☐ பொதிகை

3. சேலத்தில் உருவாவது என்ன?
☐ வேடந்தாங்கல் ☐ புதுஏற்காடு ☐ தங்கக் கோயில்

4. காட்டூரில் இருப்பது என்ன?
☐ கைராட்டை ☐ பவர்லூம் ☐ இரும்பு ஆலை

5. வீரபாண்டி ஆறுமுகத்தின் சொந்த ஊர்?
☐ சேலம் ☐ வீரபாண்டி ☐ பாப்பாரப்பட்டி

விதிமுறைகள்: ✱ இந்தப் போட்டி சேலம் மாவட்டத்தில் வசிக்கும் வாசகர்களுக்கு மட்டுமே! சரியான விடையை ☑ செய்யவும். ✱ சேலம் மாவட்ட முகவரியிலிருந்து வரும் கடிதம் மட்டுமே பரிசீலனைக்கு உரியது. ✱ ஒரு வாசகரே எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஜெராக்ஸ் அனுமதி இல்லை. ✱ சேலம் மாவட்ட வாசகர் போட்டி -1ல் கலந்து கொண்டவர்களும், வாசகர் போட்டி -2லும் கலந்து கொள்ளலாம். ✱ சரியான விடை எழுதும் 20 அதிர்ஷ்டசாலிகளுக்குப் பரிசு. ✱ 20க்கும் அதிகமானோர் சரியான விடை எழுதியிருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர். ✱ அடுத்த வாரம் சேலம் மாவட்ட வாசகர் போட்டி - 2 ✱ ஆசிரியர் தீர்ப்பே இறுதி! ✱ கடைசித் தேதி : 30.12.2010 ✱ வாசகர் போட்டி-1 பக்கத்தைக் கத்தரித்து **அனுப்பவேண்டிய முகவரி:** ஆசிரியர், கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : .... முகவரி : ....
....
பின்கோடு:................ தொலைபேசி : .... இ-மெயில் : ....

பரிசு வழங்குவோர் : B.S.P. REFINERIS, Salem.

ஓ பக்கங்கள்

ஞாநி

ரத்தம் கொதித்தது - நவம்பர் 18ஆம் தேதி மதுரையில் கருணாநிதியின் பேரன் கல்யாணத் திருவிழா நிகழ்ச்சிகளை டி.வி.யில் பார்த்தபோதும் செய்திகளைப் பத்திரிகைகளில் படித்தபோதும்.

பள்ளிகளுக்கு விடுமுறை. பல்கலைக்கழகத் தேர்வுகள் தள்ளிவைக்கப்பட்டன. மதுரையின் இளவரசர் என்று அழகிரி மகனைப் போற்றி விளம்பரப் பலகைகள். தாம் மேற்கொண்ட அதே பகுத்தறிவு லட்சியத்தைத் தம் குடும்பமே பேரன், பேத்திகள் வரை பின்பற்றுவதைப் பற்றிப் பெருமைப்படுவதாக மேடையில் கருணாநிதியின் ஓர் அப்பட்டமான பொய்ப் பேச்சு... எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தமாதிரி திருமணத்துக்கு வந்த ஆங்கில வாழ்த்துச் செய்திகளைப் படித்து நன்றி கூறியது தயாநிதிமாறன். பக்கத்தில் அழகிரி.



இவர்களின் சண்டையினால் தானே மதுரை தினகரன் அலுவலகத்தில் மூன்று அப்பாவி மனிதர்கள் செத்தார்கள். தீ வைத்தவர்கள் எல்லாம் கல்யாணப் பந்தலில் விருந்தினர்களாக...

கருணாநிதி குடும்பத்தில் தயாளு அம்மாளிலிருந்து தயாநிதி வரை எல்லோரும் எப்பேர்ப்பட்ட திறமையான நடிகர்கள் என்பது அன்றைக்கு மேடையில் தெரிந்தது. அடுத்த சில நாட்களில் வெளிவந்த அவுட்லுக் இதழில் அம்பலப் படுத்தப்பட்ட நீரா ராடியா ஃபோன் பேச்சு டேப்களைப் படித்தபோதுதான், அவர்களின் நடிப்புத் திறமையின் முழுப் பரிமாணமும் புரிந்தது. சிவாஜி கணேசன் முதல் தனுஷ் வரை பத்மினி, சாவித்திரி முதல் த்ரிஷா வரை அத்தனை நடிகர்களையும் தூக்கிச் சாப்பிட்டு விடுகிற திறமையுடன் ஒரே குடும்பத்தில் இத்தனை பேர் இருக்கிறார்களே என்று வியப்பாகவும் எரிச்சலாகவும் இருந்தது.



மக்களுக்குத் தொண்டு செய்வதற்காக தயாநிதி மாறனும் கனிமொழியும் ஆ.ராசாவும் எவ்வளவு துடித்திருக்கிறார்கள் என்பதை நீரா ராடியா டேப்கள் நமக்குப் புரியவைக்கின்றன. இந்த டேப்கள் எதுவும் எந்தப் பத்திரிகையாளரும் தனி முயற்சியில் பதிவு செய்தவை அல்ல. அரசாங்கத்தின் வருமானவரித் துறை, உள்துறை அனுமதியுடன் நீரா ராடியாவைத் தொடர்ந்து கண்காணித்துப் பதிவு செய்தவை. இப்போது உச்ச நீதிமன்றத்தின் முன்னால் தாக்கல் செய்யப்பட்டிருப்பவை. இவற்றிலிருந்து தெரியவரும் தகவல்கள்தான் என்ன?

யாருக்குப்

1. 'கருணாநிதிக்கு வயதாகி புத்தி பேதலித்துவிட்டது. (senile). இனிமேல் தானும் ஸ்டாலினும் தான் கட்சியை நடத்திச் செல்லப் போகிறோம். காங்கிரஸார் என்னுடன் பேசுவதுதான் நல்லது. ஸ்டாலினும் என் கட்டுப்பாட்டில் தான் இருப்பார்' என்றெல்லாம் தயாநிதிமாறன் டில்லியில் சொல்வதாக நீரா ராடியா, ஆ.ராசாவிடம் சொல்கிறார்.

2. அழகிரிக்கு ஆங்கிலம் தெரியாது என காங்கிரஸார் மனத்தில் விதைத்தது யாரென்று தமக்குத் தெரியும் என ராசா சொன்னதுக்குதான் மேற்படி பதில்.

3. அதுமட்டுமல்ல அழகிரி ஒரு

கிரிமினல். ஐந்தாவது வகுப்புக்கு மேல் படிக்கவில்லை என்றும் தயாநிதி சொல்லியிருக்கிறார். இதையெல்லாம் கருணாநிதியிடம் சொல்லுங்கள் என்கிறார் நீரா.

4. இல்லை. நான் அழகிரியிடமே சொல்லிவிட்டேன். அவர் தலைவரிடம் போய்ச் சொல்லிவிட்டார் என்கிறார் ராசா.

5. எங்களுக்கு டி.ஆர்.பாலுவுடன்தான் பிரச்னை. ராசாவிடம் இல்லை என்று சோனியா காந்தியை நேரடியாகவே கருணாநிதியிடம் ஃபோனில் சொல்ல வைக்கும்படி ராசா, நீராவைக் கேட்டுக் கொள்கிறார். அகமது படேல் மூலம் சொல்லுவதாக நீரா சொல்கிறார். பாலுதான் பிரச்னை என்பதை எழுதி ஒரு சீலிட்ட கவரில் வைத்து கருணாநிதியிடம் கொடுக்கச் சொல்கிறார் ராசா.

6. தம்மைத்தான் தி.மு.க சார்பில் தில்லியில் காங்கிரஸாருடன் பேசும்படி கருணாநிதி தனியே சொல்லியனுப்பி இருப்பதாக தயாநிதி மாறன் தில்லியில் சொல்லிவருவதாக நீரா, கனிமொழியிடம் சொல்கிறார்.



வெட்கமில்லை...

7. தயாநிதி பொய் சொல்வதாகவும் பொய்களைப் பரப்புவதாகவும் கனிமொழி, நீராவிடம் சொல்கிறார். அதற்கு நீரா, சென்னையில் சன் டி.வி.காரர்கள் இதர வட இந்திய சேனல்கள் எல்லோரிடமும் தவறான செய்திகளை வேண்டுமென்றே பரப்புகிறார்கள் என்று தம்மிடம் சி.என்.என்.ஐ.பி.என். சேனலின் ராஜ்தீப் சர்தேசாய் கூறியதாகத் தெரிவிக்கிறார்.

8. தயாநிதி, பதவி ஏற்பு நிகழ்ச்சிக்குச் செல்லப் போவதாக நீரா, கனிமொழியிடம் சொல்கிறார். போகக்கூடாது என்று கருணாநிதி சொல்லியிருப்பதாகக் கனிமொழி சொல்கிறார். ராசாதான் போகவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறதாம். ஆனால் தயாநிதி பின்னால் கருணாநிதியிடம் வந்து அகமது படேல் கூப்பிட்டதால் சென்றேன் என்று ஏதாவது கதை விடுவார் என்கிறார் கனிமொழி. இதையெல்லாம் அப்பாவிடம் சொல்ல வேண்டியதுதானே என்று நீரா கேட்கிறார். அய்யோ அவருக்குப் புரியவே புரியாது, என்று அலுத்துக் கொள்கிறார் கனிமொழி. விரக்தியடையாதே. நீதான் மகள். நீதான் அப்பாவிடம் பேசவேண்டும் என்று ஆறுதல் சொல்கிறார் நீரா.



9.தமக்கு கேபினட்டில் என்ன துறை தருவார்கள் என்று நீராவிடம் கனிமொழி கேட்கிறார். நல்வாழ்வு, சுற்றுச் சூழல், விமானத்துறைகளில் ஒன்றைத் தரச் சொல்லியிருப்பதாக நீரா சொல்கிறார். சுற்றுலா வேண்டாம்



நீரா

என்கிறார் கனிமொழி.

10. தொழிலதிபர் ரத்தன் டாட்டாவுடன் நீரா பேசும்போது, அமைச்சர் ராசாவை தயாநிதி துரத்தித் துரத்தி அடிப்பது கவலையாக இருப்பதாக டாட்டா சொல்கிறார். எதுவும் ஆகாது. அப்படியே ஆனாலும், ராசா இடத்துக்குக் கனிமொழிதான் வருவார் என்று ஆறுதல் சொல்கிறார் நீரா.

11. இன்னொரு பேச்சில், ராசாவுக்காக இவ்வளவு செய்திருந்தும் இப்படி (நமக்குச் சாதகமில்லாமல்) நடந்துகொள்கிறாரே என்று கவலைப்படுகிறார் ரத்தன் டாட்டா. கோர்ட் உத்தரவினால் அப்படி என்று தம்மிடம் ராசா விளக்கியதாகவும் கோர்ட் உத்தரவைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். அதற்கு வியாக்யானம் சொல்வது ராசா கையில்தான் இருக்கிறது என்று ராசாவிடம் சொல்லிவிட்டதாகவும் நீரா தெரிவிக்கிறார்.



12. புதிய அட்டர்னி ஜெனரல் பற்றி ரத்தன் டாட்டா கவலை தெரிவிக்கிறார். அவரைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நமக்கு சொலிசிட்டர் ஜெனரல் கோபால் சுப்ரமணியம்தான் முக்கியம். அவரைப் பார்க்கப்போகிறேன். அவருக்கு அனில் அம்பானியைத் துளியும் பிடிக்காது. நேர்மையானவர். (!) அனில் சொல்வதை ஒப்புக் கொள்ளமாட்டார் என்று நீரா பதிலளிக்கிறார்.

13. அனில் அம்பானியின் குழப்படிகள் பற்றி ஏன் மீடியா அம்பலப்படுத்தாமல் இருக்கிறது என்று டாட்டா, நீராவைக் கேட்கிறார். விளம்பர பலம்தான். ஏதாவது நெகட்டிவாக எழுதினால் உடனே விளம்பரத்தை நிறுத்திவிடுகிறார்கள் என்று டைம்ஸ் ஆஃப் இந்தியாவும் தைனிக் பாஸ்கர் பத்திரிகையும் சொல்கிறார்கள். மற்றவர்களும் இதைச் செய்யமுடியுமே என்றேன். மீடியா ரொம்ப ரொம்ப பேராசைப்படுகிறது என்று விளக்குகிறார் நீரா.

14. என்.டி. டி.வி.யின் பர்க்கா தத்துடன் நீரா பேசுகிறார். இருவரும் காங்கிரஸ் - தி.மு.க அமைச்சர் பதவிப் பங்கீடு பேச்சு வார்த்தைகளை விவாதிக்கிறார்கள். தாம் காங்கிரஸ் தரப்பிடம் என்ன தெரிவிக்க வேண்டும் என்று பர்க்கா கேட்கிறார். தாம் அம்மா, மகள் (ராஜாத்தி, கனிமொழி) இருவருடனும் பேசிவிட்டதாகவும் , காங்கிரஸ் தலைவர்கள் கருணாநிதியிடம் நேரடியாகப் பேசவேண்டும் என்றும் தயாநிதி மாறன், பாலு இருவரையும் வைத்துக் கொண்டு பேசக் கூடாது என்றும் நீரா சொல்கிறார்.

15. ஹிந்துஸ்தான் டைம்ஸின் ஆசிரியர் இயக்குனர் வீர் சிங்வியும் நீராவும் பேசுகிறார்கள். சிங்வி, தாம் தொடர்ந்து சோனியாவையும் ராகுலையும் சந்தித்து வருவதாகச் சொல்கிறார். அமைச்சர் இலாக்கா பங்கீட்டுப் பிரச்னை காங்கிரஸ்-தி.மு.க பிரச்னை அல்ல. தி.மு.கவின் உள்தகராறுதான் என்கிறார். இரண்டு மனைவிகள், ஒரு சகோதரன், ஒரு சகோதரி, ஒரு மருமகன், என்று எல்லாம் ஒரே சிக்கலாக இருக்கிறது. கருணாநிதி தானே நேரில் பேசட்டும். அல்லது இன்னார்தான் தம் சார்பில் என்று ஒரே ஒருவரைத் தெரிவிக்கட்டும். ஆளுக்கு ஆள் பேசுகிறார்கள். தயாநிதி, குலாம் நபி ஆசாதை அடிக்கடி கூப்பிட்டு நான் தான் அதிகாரபூர்வமான பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார். யாரும் அவரை சீரியசாக எடுத்துக் கொள்வதில்லை என்று வீர் சிங்வி சொல்கிறார்.

16. நீரா உடனே தயாநிதி மாறனை அமைச்சரவையில் சேர்க்கப் பெரும் நிர்ப்பந்தம் இருப்பதாகச் சொல்கிறார். என்ன நிர்ப்பந்தம்? தயாநிதி, கருணாநிதியின் மனைவி தயாளு அம்மாளுக்கு 600 கோடி ரூபாய் கொடுத்திருப்பதாகவும் அதனால் ஸ்டாலினும், செல்வியும் நிர்ப்

இந்த வார பூச்செண்டு!

ஸ்பெக்ட்ரம் ஊழலை ஆரம்பம் முதல் தொடர்ந்து விடாப்பிடியாக அம்பலப்படுத்தி வந்திருக்கும் பயனீர் ஆங்கில ஏட்டின் செய்தியாளர் கோபி கிருஷ்ணனுக்கு இ.வா.பூ.



பந்திப்பதாகவும் நீரா சொல்கிறார்.

இப்படியாகத் தமிழ் நாட்டின் மானத்தை தில்லியில் தி.மு.க தலைவர் கருணாநிதியின் குடும்பம் நாறடித்துக் கொண்டிருக்கும் கதை தொடர்கிறது.

படிக்கப் படிக்க ரத்தம் கொதிக்கிறது...

மேலே கொடுக்கப்பட்டது சுருக்கம்தான். முழு உரையாடல்களைக் கேட்டால், மந்திரி பதவிக்கான வெறி, ஆவேசம், பேராசை, நினைத்தபடி ஒவ்வொன்றும் நடக்கவில்லையே என்ற ஆதங்கம், எரிச்சல், எப்படியாவது காரியத்தை முடித்துவிடவேண்டுமென்ற பதைப்பு எல்லாம் கனிமொழியின் பேச்சில் தொனிக்கின்றன. ஒவ்வொருவர் பேச்சிலும் ஒரு தொனி இருக்கிறது. தைரியம், மமதை, எல்லாம் தம் கண்ட்ரோலில் இருக்கிறது என்ற மிதப்பு எல்லாம் தெரிகின்றன.

இந்திய ஜனநாயகத்தின் அடிப்படைகளையே உலுக்கும் கேள்விகளையும் அவற்றுக்கு அதிர்ச்சியான பதில்களையும் இந்த டேப்கள் நமக்குள் எழுப்புகின்றன.

கேள்வி 1: அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பது யார்? பிரதமரா? தொழிலதிபர்களா?

பதில்: தொழிலதிபர்கள்தான். மன்மோகன்சிங் ஒரு டம்மி பீஸ்.

கேள்வி 2: எதற்காகக் குறிப்பிட்ட துறை தமக்கு வேண்டுமென்று அலைகிறார்கள்? தொண்டு செய்யவா? கொள்ளையடிக்கவா?

பதில்: கேள்வி கேட்ட முட்டாளே! தொண்டுக்கும் அரசியலுக்கும் என்ன சம்பந்தம் ? கொள்ளையடிக்கத்தான்.

கேள்வி 3: எல்லா ஊழல்களையும் முறைகேடுகளையும் அம்பலப்படுத்தும் மீடியாகாரர்கள் அரசியல்வாதிகளுடன் செய்தி சேகரிக்கப் பேசினால் குற்றமா ? அது தரகு வேலை பார்ப்பதாகிவிடுமா?

பதில்: செய்தி சேகரிப்பவரின் தொனி வேறு. தரகு பேர்வழியின் தொனி வேறு. நிச்சயம் ராடியா டேப்களில் இருக்கும் தொனி தரகர்களின் தொனிதான்.

கேள்வி 4 : ராடியா டேப்கள் பற்றி கருணாநிதி, கனிமொழி, ராசா, தயாநிதி மாறன், மன்மோகன்சிங், சோனியா, ராகுல் காந்தி, ரத்தன் டாட்டா ஆகியோர் ஏன் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை ?

பதில்: சொன்னாலும் நாம் நம்பப் போவதில்லை என்பது அவர்களுக்குத் தெரியும் என்பதால்தான்.

கேள்வி 5: இத்தனைக்கும் பிறகு எப்படி மக்களைத் தேர்தலில் சந்திக்கத் தெருத் தெருவாக இனி வருவார்கள் ?

பதில்: ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபாய்களில் ஒரு துளியை, கவர்களில் கொடுத்தால் மக்களுக்குப் போதுமானது என்று அவர்கள் நம்புவதனால்தான்.

இந்தக் கட்டுரையை எப்படி முடிக்க? கண்கள் பனித்தன. நெஞ்சம் இனித்தது என்றா?


இந்த வாரக் கேள்வி!

தம் ஆட்சியில் பூஜைகளும் பூமி பூஜைகளும் நடத்திய ஜெயலலிதாவுக்கு அண்ணா, பெரியார் பற்றிப் பேச என்ன தகுதி என்று கேட்டிருக்கும் கருணாநிதியின் அரசு, புதிய தலைமைச் செயலகம்/சட்டமன்றக் கட்டடத்துக்கு ஐயர்களை வைத்து பூமி பூஜை நடத்தியது எந்தத் தகுதியில்?



அயோத்தியில் தசாவதாரம்

சேலம்




மாவட்ட ஸ்பெஷல்

ராமபிரான் பட்டாபிஷேகத்துடன் காட்சி தரும் மூலஸ்தானத்தைக் கொண்ட கோயில்கள் இந்தியாவிலேயே இரண்டுதான். ஒன்று வட இந்தியாவின் அயோத்தியில். இன்னொன்று தென்னிந்தியாவின் சேலம் அயோத்தியா பட்டணம் கோதண்ட ராமஸ்வாமி திருக்கோயில். அதுவும் ஸ்ரீராமனின் இடது பக்கத்தில் சீதாதேவி பத்மாசனத்தில் அமர்ந்து காட்சி தருவது இந்தியாவிலேயே இங்கேதான். ராவண வதம் முடிந்து ஸ்ரீராமன் அயோத்தி திரும்புகையில் அயோத்திப் பட்டணத்து பரத்வாஜ் முனிவர், ஸ்ரீராமனையும் சீதாபிராட்டியையும் தமது ஆசிரமத்தில் தங்கிப்போகச் சொன்னதாகவும் அவர்களும் அது தங்களுக்குக் கிடைத்த பேறு என்று தங்கிப் போனதாகவும் கோயில் புராணம் கூறுகிறது.

ஸ்ரீராமர் சேலம் மார்க்கமாகத்தான் அயோத்தி போனார் என்பதற்குச் சான்றாக தருமபுரி தீர்த்தமலை, கிருஷ்ணகிரி அனுமன் தீர்த்தம், சேலம் பொய்மான் கரடு, மாமங்கம் இராமர் பாதம், வனவாசி நங்கவள்ளி... ஆகியவை சொல்லப்படுகின்றன. தாரமங்கலம் கைலாசநாதர் கோயில், திண்டுக்கல் தாடிக்கொம்பு பெருமாள் கோயில், அயோத்திப் பட்டணம் கோதண்ட ராமர் கோயில்... ஒரே காலத்தில் ஒரே சிற்பியால் கட்டப்பட்டிருக்கிறது. சாட்சி... சித்ரா பௌர்ணமி அன்று காலை ஆறு மணிக்கு சூரிய பகவான் வெளிச்சக் கதிர்கள் ராமபிரானின் திருவதனத்தில் படுமாறு அமைந்திருப்பதுதான். அன்று மாலை ஆறு மணிக்கும் இதேபோல தாரமங்கலம் கைலாசநாதர் மீது ஒளிக் கதிர்கள் விழுவதுதான்.

கோயிலின் மகா மண்டபத்தில் கோயிலைக் கட்டுவித்த திருமலை நாயக்க மன்னர் தம் மனைவியுடன் ஸ்ரீராமரை வழிபடும் சிலைகளும்... ஓம் மண்டபத்தின் இசைத் தூண்களும், ஒரே கல்லில் செதுக்கப்பட்ட





தசாவதாரக் காட்சிகளும் இக்கோயிலின் சிற்பக் கலையின் உச்சம்.

மகா மண்டபத்து ஓவியங்களுள் கிருஷ்ண லீலை, கஜேந்திர மோட்சம், சங்கு சக்கரம் ஆகியவை எழுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவை. இராமாயணக் காட்சிகளையும் தசாவதாரக் காட்சிகளையும் தாங்கிக் கொண்டு நூற்றைம்பது அடி உயரத்துக்குக் காட்சி தருகிற ஐந்து நிலை ராஜகோபுரத்துக்கு மகுடமாக ஐந்து கலசங்களும் காணப்படுகின்றன.

செப்டெம்பரில் நடக்கும் நவராத்திரி பூஜைகள் விசேஷமிக்கவை. சேலத்திலிருந்து கிழக்கில் அரூர் செல்லும் சாலையின் பத்தாவது கிலோமீட்டரில் உள்ள பட்டாபிஷேக ராமனின் இக்கோயில் கல்யாணக் குறையை நீக்கும் தலம்!

வாசகர் யோசனை : **எஸ்.நிரஞ்சனி, போரூர்**

வாசகர் தலையங்கம்

வாக்களிக்கும் முன்பாக யோசிக்க வேண்டும்

1996 ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத்துக்குத் தேர்வு செய்யப்பட்ட எம்.எல்.ஏ. கொள்ளைக்காரனாக மாறியது உலகில் எந்த நாட்டிலும் நடைபெறாத நிகழ்வாகும். இந்திய அரசியலில் தலைக்குனிவை ஏற்படுத்திய இச்சம்பவத்தை அரசியல்வாதிகள் சர்வசாதாரணமாகக் கருதுகின்றனர். முதல் போணியாக 2003 ஆம் ஆண்டின் பத்துக் கோடி ரூபாய் போதைப் பொருட்கள் கடத்தல் வழக்கில் இந்த நபர் கைது செய்யப்பட்டார். வருமானவரித்துறை அதிகாரி போல் நடித்தும் ஏமாற்றியுள்ளார். கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டு போலீஸ் பிடியிலிருந்து தப்பியோடி ஆறு வருடங்கள் தலைமறைவு வாழ்க்கை நடத்தியுள்ளார்.



அதாவது 2004 ஆம் ஆண்டு அக்டோபரில் காவல் துறையால் திருநெல்வேலிக்குக் கொண்டு சென்றபோது, தப்பி ஓடிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. அதன் பின்னர் அவரைத் தேடிப் பிடிக்க எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது வேடிக்கையான செய்தி.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வு ஊதியம் பெறும் சலுகையும் உள்ளது. ஓய்வு ஊதியம் பெறும் வங்கியில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் நேரில் ஆஜராகி உயிருடன் இருப்பதற்கான சான்றொப்பம் செய்ய வேண்டும். 2004 ஆம் ஆண்டு முதல் 2010 வரை காவல்துறையிடம் சிக்காமல் கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். வருமான வரித்துறை அதிகாரிபோல் நடித்து, சென்னை மேற்கு மாம்பலத்தில் ஓய்வு பெற்ற செயற்பொறியாளர் வீட்டில் கொள்ளையடித்தபோது, காவல்துறையிடம் வசமாகச் சிக்கிக்கொண்டார்.

சட்டமன்ற உறுப்பினராக இருந்து பல்வேறு வகையில் கிடைக்கும் வருமானத்தில் திருப்தி அடையாது கொள்ளை அடிப்பவர்களை மக்கள் தேர்ந்தெடுப்பது தேசத் துரோகமாகும். வேட்பாளர்களின் குற்றப் பின்னணி, அவர் சார்ந்துள்ள கட்சியின் செயல்பாடுகள் ஆகியவற்றை அறிந்து மக்கள் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். பணத்துக்கு ஆசைப்பட்டு வாக்களிக்கும் மக்கள் இனியாவது யோசிப்பார்களா?

- எஸ்.பக்கிரிசாமி,
புதுச்சேரி

வாசகர்களே...

உங்களைப் பாதித்த விஷயங்களை 'வாசகர் தலையங்கம்' பகுதியில், பாராட்டலாம்; குட்டலாம்; திட்டலாம்... உடனே எழுதுங்க!

கலக்க வருதுப்பா...

கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி!

இப்ப கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களுக்கும் வருது கல்கி டீம்...

- திரிவேணி சங்கமம்
- வானுயர் வள்ளுவர்
- தாணுமாலயன் வாழ் சுசீந்திரம்
- பத்மனாபபுரம் கோட்டை
- ரகசியம் சொல்லும் பேச்சிப்பாறை
- திற்பரப்பு அருவி
- சினிமாவில் நடிக்கும் முட்டம்
- குளிர்ச்சியான குளச்சல்
- வ.உ.சி.யின் ஒட்டப்பிடாரம்
- தசரா புகழ் குலசேகரப்பட்டினம்
- வீரம் விளைந்த பாஞ்சாலங்குறிச்சி
- கவிச்சூரியனின் கருவறை



இன்னும் என்னவெல்லாம் இருக்கு?
உங்க மாவட்டங்களின் (+) (−) என்ன? எழுதி அனுப்புங்க...

வாசகர்களே!



ஆமாம்! கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களுக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்புகள் மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்கு சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- உங்கள் மாவட்டத்தின் பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ். ஆன்மிக, வியாபார, சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன். சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல். நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்... என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசித் தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கலக்க வருதுப்பா கல்கி

கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டம்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 17.12.2010

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடுறோம்!

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srilanka.

